# மரியதாசன்

(நாட்டுக்கூத்து)

புலவர் :
**வெ. மரியாம்பிள்ளை**
சுண்டிக்குளி

விலை ரூபா 3-00

ஆசிர்வாதம்
அச்சகம்
யாழ்ப்பாணம்
1972

நூல் தேட்டம்
கு.இராயப்பு (கலையார்வன்)
நூல் .இல ........................

# மரியதாசன்

## (நாட்டுக் கூத்து)

பாடியவர் :

'விசய மனோகரன்' நாட்டுக்கூத்துப் பாடியவரான

**புலவர் வெ. மரியாம்பிள்ளை அவர்கள்**

சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

பதிப்பித்தவர் :

புலவர் அவர்களின் மருமகனும்
சமாதான நீதவானும்
ஓய்வு பெற்ற ஆசிரியரும்
ஆசீர்வாதம் அச்சகம் — புத்தகசாலை உரிமையாளருமான

**திரு. மு. வி. ஆசீர்வாதம் அவர்கள்**

அச்சுப்பதிவு :

**ஆசீர்வாதம் அச்சகம்**

யாழ்ப்பாணம்.

1972


உரிமை பதிவு ]

[விலை ரூபா 3-00

முதற்பதிப்பு : ஆவணி 1972

யாழ்ப்பாணம், 32, கண்டிவீதியில் உள்ள ஆசீர்வாதம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று 18-8-72 இல் வெளியிடப் பெற்றது.

பதிப்பாசிரியர்



திரு மு. வி. ஆசீர்வாதம் ஜே. பி. அவர்கள்

# பதிப்புரை

நாட்டுக்கூத்து வேறு; நாடகம் வேறு; சினிமா வேறு அவற்றின் பண்புகளும் வெவ்வேருனவையே. நாட்டுக்கூத்து என்பது இயலுக்கும் இசைக்கும் முக்கியத்துவம் கொடுத்து பழைய பண்பில் ஊறி, நாட்டிற்கும் சமூகத்திற்கும் நல்லவற்றைக் கதைகள் மூலம் கூத்தாடிக் காட்டும் ஒருவகைக் கலே; அறம் நிலேக்க மறம் அழியும் நல்ல பண்பினேச் சுட்டிக்காட்டும் கலே அது. நாடகம் என்பது வசனத்திற்கும் சம்பவங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து புதிய பண்பில் ஊறி, விறுவிறுப்பான காட்சியமைப்புகளோடு பார்ப் போரை ஒரு கணம் மறக்கச் செய்யும் ஒருவகைக் கலே. சினிமா என்பது மேடையில் காட்டமுடியாத அற்புதக் காட்சிகளே தத்ரூப மாகச் சித்திரித்துக் காட்டும் ஒப்பற்ற ஒருவகைக் கலே. மேலே நாட்டுக்கே உரிய கலே அது.

நாட்டுக்கூத்தை அடக்கமான, அழகான, ஒரு கிராமப் பெண் என்ருல், நாடகத்தை கிராமமுமல்லாத நகரமுமல்லாத— பழமையும் புதுமையும் கலந்த—பெண் எனலாம். சினிமாவோ நாகரிக நங்கை. சினிமாவின் தாக்கம் முன்னிரு கலேகளேயும் பெருமளவில் தாக்கியுள்ளது. கூத்தும் நாடகமும் சினிமாவின் வருகையினுல் தமது தனிச்சிறப்பை இழந்தன. நாட்டுக் கூத்துக்கள் வழக்கொழிந்து வருகின்றன; நாடகங்கள் சினிமா உத்திகளோடு சேர்ந்து 'நாடகச் சினிமா' க்களாக மாறி வருகின்றன. பேசும் படக் காட்சிகள் வந்து புதிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தியதினுல் நாட் டுக்கூத்து, வசனம்வாசாப்பு என்பனவற்றுக்கும் படக்காட்சிக்கும் இடைப்பட்டதான ஒரு நிலேயில் நாடகங்கள் வளர்ச்சியடைந்துள்ளன.

இன்று நாடகங்களுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டு வருகின்றது. கிராமங்கள், பட்டினங்கள் தோறும் அடிக்கடி நாடகங்கள் அரங்கேற் றப்பட்டு வருகின்றன; பல நாடகமன்றங்கள் ஆங்காங்கே தோன்றி நாடகங்களே நடாத்தி வருகின்றன; அரசாங்கக் கலேக்கழகத்தினரும் நாடகங்கள் நடிக்கப்படுவதை ஊக்கப்படுத்துமுகமாக, போட்டிகள் நடாத்திப் பரிசில்கள் வழங்கி வருகின்றனர். இவ்வாறு பல்வேறு நிலேமைகள் இன்று நாடகங்களின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக உள்ளன. ஆனுல், நாட்டுக்கூத்துக்களின் வளர்ச்சிக்கு, (வளர்ச்சி வேண்டாம்; உள்ள நிலேயைப் பேணவாவது) எந்த ஒரு தூண்டுதலும் இன்று இருப்பதாகத் தெரியவில்லே. பழமை பேணும் சில கலேஞர்கள் ஆங்காங்கே சிதறலாக நாட்டுக்கூத்துக்களே அரங்கேற்றி வருகின் றனர்; அக்கலேஞர்களின் தலேமுறையுடன் நாட்டுக்கூத்துக்களும் அழிந்துவிடலாம் என்று பயப்படுவதில் அர்த்தமில்லாமலுமில்லே.

பாடலும் ஆடலும் ஒருங்கே ஒருவரால் நிகழ்த்தப்பட்ட காலம் மாறி, பாடல் ஒருவராலும் ஆடல் வேறொருவராலும் நிகழ்த்தப்படும் காலம் வந்து நாட்டுக்கூத்தின் முன்னைய அமைப்பு முறையையும் சிறப்பையும் சிதைத்துவிட்டது.

நமது பாரம்பரியம் மகத்தானது. பழமையைப் பேணாது புதுமையில் நாட்டம் கொள்வது நன்மையன்று. புதுமை வரவேற்கப்படுதற்குரியதே. அதனால் பழைமை ஒதுக்கப்படவேண்டியதுமன்று.

யாழ்ப்பாணப் பகுதியில் இற்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டுக்கூத்துக்கள் பாடப்பெற்று ஆடப்பட்டு வந்தன. நாட்டுக் கூத்து முறையில் வசனம் குறைவாகவும் பாடல்கள் அதிகமாகவும் இருப்பதும், நாட்டுக்கூத்துக்குரிய பாடல்கள் பாடுவதற்குச் சிரமமானவைகளாய் இருப்பதும் பிற்காலத்தவருக்கு வெறுப்பைக் கொடுத்திருக்கிறது எனலாம். இதனால் வசனங்கள் அதிகமாகவும் பாட்டுகள் குறைவாகவும் உள்ள முறையில் நாடகங்கள் திருப்பமடைந்துவிட்டன.

நாட்டுக்கூத்து நடக்கும் நிலை உச்சமடைந்த காலத்தில், தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்து, பூதத்தம்பி நாட்டுக்கூத்து, அலங்கார ரூபன் நாட்டுக்கூத்து, நொண்டி நாட்டுக்கூத்து, மத்தேசு மாகிறேற் நாட்டுக்கூத்து, சஞ்சுவாம் நாட்டுக்கூத்து, உடைபடா முத்திரை நாட்டுக்கூத்து, எஸ்தாக்கியார் நாட்டுக் கூத்து, மரிய தாசன் நாட்டுக்கூத்து, யூதகுமாரன் நாட்டுக்கூத்து, கனகசபை நாட்டுக்கூத்து, அந்தோனியார் நாட்டுக்கூத்து, தீத்தூஸ் நாட்டுக் கூத்து, கருங்குயிற் குன்றத்துக் கொலை நாட்டுக்கூத்து முதலிய நாட்டுக் கூத்துக்கள் நாட்டின் பல பாகங்களிலும் தக்க கலைஞர்களால் சிறப்பாக அரங்கேற்றப்பட்டுள்ளன.

இந் நாட்டுக்கூத்துக்களில் உள்ள சில பாடல்களை இராக தாளத்துடன் எடுப்பாகப் பாடக்கூடியவர்கள் இப்போது மிகச் சிலரேயுளர்; அதற்கு ஒரு தனித்திறமையும் வேண்டும். இக் கூத்துப் பாடல்கள் பழந்தமிழைப் பக்குவமாகப் பேணிக்காக்கும் கருவூலங்கள் என்று கூறுவது மிகையாகாது. அவற்றை ஆழ்ந்த கருத்துடன் நோக்கில் அருமையான சொற்கள் கையாளப்பட்டிருப்பதையும், உவமைகள், வர்ணனைகள், எதுகை மோனைச் சிறப்புக்கள், அணிகள் என்பன பரக்கச் செறிந்திருப்பதையும் காணலாம்.

இவ்விதச் சிறப்புக்களையுடைய நாட்டுக்கூத்துப் பாடல்கள் பல ஏட்டுச் சுவடிகளிலிருந்து அழிந்து மறைந்து கொண்டிருக்கின்றன. ஐம்பது வருடங்களுக்குமுன் தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்து அச்சேற்றப்பட்டதாயினும் அதன் பிரதிகள் இப்போது கிடைக்கத் தக்கனவாக இல்லை.

மதுரகவிப்புலவர் சூசைப்பிள்ளை அவர்கள் பாடிய எஸ்தாக் கியார் நாட்டுக்கூத்தை, நாட்டுக்கூத்துக் கலாநிதி ம. யோசேப்பு அவர்களின் தூண்டுதலாலும் துணையாலும் 1962 ஆம் ஆண்டு அச்சேற்றி அஃது அழிந்தொழிந்து போகாது காத்துள்ளோம்.

புலவர் மரியாம்பிள்ளை அவர்கள் பாடிய விசய மனோகரன் என்னும் நாட்டுக்கூத்தை 1968 ஆம் ஆண்டில் அச்சேற்றிக் காப் பாற்றினோம். இவைபோலவே புலவர் மரியாம்பிள்ளை அவர்க ளுடைய மரியதாசன் என்னும் நாட்டுக்கூத்தையும் அழிந்தொழிந்து போகாது காப்பாற்றுமுகமாக இப்போது அச்சேற்றியுள்ளோம்.

மரியதாசன் என்னும் இந்த நாட்டுக்கூத்தில் சில சிறப்புக் களைச் சுட்டிக்காட்டுவது நலமாயிருக்கும்.

அருமையான, அழகான, சிறப்பான உவமைகள், எதுகை மோனைச் சிறப்புகள் என்பன இக்கூத்தில் காணப்படுகின்றன.

தொடை நயம்படச் செய்யுள் புனைவதில் புலவர் கைவந்தவர். எதுகை, மோனை, இயைபு, முரண் ஆதியாம் தொடைகளை அமைத்து ஓசைநயத்தை மிகைப்படுத்துவது இவரியல்பு.

"வம்புகள் பேசி நாங்கள் வணங்கிடுந் தேவர் தம்மை
கும்பிட மறுத்து மெத்தக் குத்திர மொழிகள் சொன்னாய்
அம்புபோல் பறந்து சென்று அரசனுக் கறிவித் தேநான்
சிம்புகள் எழும்பிச் சென்னி சிதைவுறச் செய்விப் பேனே"

(பக்கம் 56)

இந்த அறுசீர் விருத்தம் எதுகை மோனைச் சிறப்பைக் கொண்ட தாகும். அடிதோறும் முதற் சீரின் இரண்டாம் எழுத்து எதுகையா வும், அடிதோறும் முதற் சீரின் முதல் எழுத்துக்கு மூன்றும் சீரின் முதல் எழுத்து இயைந்து மோனையாதலையும் நோக்குக.

உவமைகளைக் கையாளுவதில் புலவருக்குள்ள இலக்கிய ஆற்றலையும் அறியலாம்.

## இழந்ததை திரும்பப் பெறும் ஆனந்தம்:

முத்தகப்பட்டது போல் வயப்பட்டது
மோனவழி எனக்கே-நெஞ்சே நெஞ்சே

1. முத்தகப் பட்டறை சத்திய மாமறை
முந்திடு புன்றலை நொந்திட வீசுகோல்
பத்தை மறைவினில் நத்துமிரைக்கிரு
பந்தநரிக்கது வந்து பட்டாற்போல (முத்)

2. ஆசைக்கொரு மகனுர் உயிர் போய்விட
அந்திய காலத்துக் கென்செய்வோ மென்றேங்கி
மைந்தன் கவலையால் சிந்தை வருந்தையில்
மாண்டசடலத்து மீண்டுயிர் வந்தாற் போல (முத்)

3. அண்டமுயர்ந்திடு குன்ற மதில் நின்று
அந்தரமாகவே வந்து விழுந்துமே
ஆருயிர் போச்சென் றலரி வருகையில்
ஆங்கொரு கைவந்து தாங்கிப் பிடித்தாற்போல் (முத்)

4. ஊனமலடென்று மானவ ரேசிட
உற்றவர் சுற்றவர் முற்றும் நகைத்திட
வாட்டமுற்றே மனக் கோட்டமற்றேவரும்
வந்திதனக் கொரு மைந்தன் உதித்தாற்போல் (முத்)

என்றும், (பக்கம் 40)

இன்பத்துக்குமுன் துன்பம்:

''பெலப்புடம்பு வாழ்வதற்கு
கசப்பவுடதம் பருகல்
போலவே யுனக் கேலவே''

"பொன்னுலக ஆக்கினையால்
நன்றுபுடமிட்டதுபோல்
பொருந்தினுய் மனந்திருந்தினுய்''

என்றும் (பக்கம் 117)

வர்ணித்து இருக்கும் வகை பாடி மகிழ்வதற்கு ஏற்றதாகும்.

நாட்டுக்கூத்து இரசிகர்களின் ஆதரவு இருப்பின் ஏனைய கூத்துக்களையும் அச்சேற்றி அவை அழிந்தொழியாது காப்பாற்றலாம் என நம்புகிறேன்.

இக்கூத்து முறைப்படி அச்சேறுவதற்கு பாட்டுக்களுக்குரிய இராகம், தாளம், மெட்டு என்பவற்றைக் கண்டறிந்து, பாடிச் சந்தம் பிரித்து அருந்துணைபுரிந்த நாட்டுக்கூத்துக் கலாநிதி திரு. ம. யோசேப்பு அவர்கள் சேவை மறக்கப்படக்கூடியதன்று.

எஸ்தாக்கியர் நாட்டுக்கூத்து, விசயமனோகரன் நாட்டுக்கூத்து என்பவற்றோடு மரியதாசன் நாட்டுக்கூத்தாகிய இதனையும் அச்சேற்றி நூலுருவில் வெளிவரத் துணைசெய்த எல்லாம் வல்ல இறைவனை நெஞ்சார அஞ்சலிக்கின்றேன்.

வளர்க நாட்டுக் கூத்து

"ஆசீர் அகம்''
29, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
18-8-72

இங்ஙனம்
**மு. வீ. ஆசீர்வாதம்** ஜே. பி.

மரியதாசன் நாடக
வரேந்திர இராசன் வேடத்தில்



நாட்டுக்கூத்துக் கலாநிதி

**திரு. ம. யோசேப்பு அவர்கள்**

# நூலாசிரியர் பற்றி......

பட்டம் பெறுத பண்டிதர்களும் இருந்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்தவர் திருவாளர் வெலிச்சோர்ப்பிள்ளை மரியாம்பிள்ளை அவர்கள்.

கருவிலே திருவமைந்த புலமையாளன் என்று அவர் வாழ்ந்த காலத்திலேயே பாராட்டப் பெற்றதை எனது காதாற் கேட்டிருக்கின்றேன்.

வாக்கு வல்லபமும் தோற்றப் பொலிவும் பெற்ற புலவர் அவர்கள் 1895 ஆம் ஆண்டு மாசி மாதம் 18 ஆந் திகதி இருமரபுந்தூய நெடுந்தீவுத் தனிநாயக முதலியாரின் மரபிலுதித்த வெலிச்சோர்ப்பிள்ளை (சின்னக்குட்டி) என்பவருக்கும், தெல்லிப்பளைப் பன்னாலையைச் சேர்ந்த (கற்பகம்) மேரிப்பிள்ளை என்பவருக்கும் இரண்டாவது குழந்தையாகப் பிறந்தவர். இவர் பாடசாலைக் கல்வியை ஐந்தாம் வகுப்புடன் நிறுத்திக் கொண்டவராவர்.

பாடசாலைக் கல்வியை நிறுத்திக் கொண்டாலும், நன்னூல்' நிகண்டு, தொல்காப்பியம், இராமாயணம், பாரதம், நைடதம்' நளவெண்பா, சீவகசிந்தாமணி, தேம்பாவணி முதலிய நூல்களை நன்கு கற்று மேற்படி நூல்களை ஓரளவு மனமாகக் கூறக் கூடிய ஆற்றல் பெற்றிருந்தமையால், எதுகை, மோனையோடு சிலேடைப் பொருளமைய மிக்க இலாவகமாகவும், கேட்போர் புளகமுறும் வண்ணமும், தர்க்க ரீதியாகவும், சந்தர்ப்பத்துக்கேற்றவாறு சமயோசிதமாகவும் பேசும் ஆற்றல் பெற்றிருந்தார்.

வாக்குவல்லமை படைத்திருந்தமையால், தான் வசித்து வந்த சுண்டிக்குளிப் பகுதியில் ஒரு நியாயவாதிபோலவும், நீதிபதி போலவும் சேவை செய்து மக்களின் அன்பையும் கண்ணியத்தையும் பெற்றிருந்தார்.

நேர்மையுடன் தங்க நகை வியாபாரம் செய்து வந்த இவர், தங்கப்பொருளின் தரமறிந்து கணிக்கத் தெரிந்ததோடு, சங்கத் தமிழின் சுவையறிந்து இரசிப்பவராகவும் இருந்தார்.

விதிமுறையோடு பாக்களை யாக்க விரும்பிய இவர் அக்காலத்துப் புகழ்பெற்றிருந்த புலவரும் ஆசிரியருமாகிய சுபவாக்கியம் பிள்ளை என்பவரைக் குருவாகக் கொண்டு பாக்கள் புனைவதில் வல்லமை பெற்றுர்.

பாக்கள் புனைந்து இன்பங்கண்ட இவர் அக்காலத்து நாட்டுக் கூத்துக்களைப் பார்வையிட்டு, நயந்து, தானும் ஒரு நாட்டுக் கூத்துப் பாடவேண்டுமென்று முனைந்து, தேவசகாயம்பிள்ளை, யூதகுமாரன், சஞ்சுவாம், உடைபடா முத்திரை முதலிய நாட்டுக் கூத்துக்களையும்

புலவர் அவர்களது உற்ற தோழனும், மதுரகவிப் புலவருமான சூசைப்பிள்ளை அவர்கள் இயற்றிய எஸ்தாக்கியார், சங்கிலியன் முதலிய நாட்டுக் கூத்துக்களையும் பரிசீலனை செய்து அவற்றுக்கு ஒப்பாக 1932 ஆம் ஆண்டில் மரியதாசன் நாட்டுக்கூத்தைப் பாடிமுடித்து தாமே முயற்சி செய்து குடாநாட்டின் பல பாகங்களிலுமிருந்து சிறந்த நாட்டுக் கூத்து நடிகர்களைத் தெரிந்து, அவர்களைக் கொண்டு மூன்று முறைக்கு மேல் அந்நாட்டுக் கூத்தை மேடையேற்றுவித்து மகிழ்ந்தார்.


தொடர்ந்து 1934ஆம் ஆண்டில் விசய மனோகரன் நாட்டுக் கூத்தையும் பாடிமுடித்து, அரங்கேற்றுவதற்கு ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தாரெனினும், அஃது அரங்கேற்றப்படும் நன்னாளைக் காணப் பாக்கியம் பெறுதவரராய் 1938 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 5ஆந் திகதி பரனடி சேர்ந்தார்.

பின்னர், இந்த நாடகம் நாட்டுக்கூத்துக் கலாநிதி ம. யேர்சேப்பு, அண்ணாவியார் ம. பொன்னுத்துரை என்பவர்களால் இருபதுக்கு மேற்பட்ட முறைகளில் மேடையேற்றப்பட்டு இரசிகர்களின் பாராட்டைப் பெற்றிருக்கின்றது.

புலவர் அவர்கள் மறைந்த முப்பது வருடங்களுக்குப் பின்பு விசயமனோகரன் நாட்டுக்கூத்தும், முப்பத்து நான்கு வருடங்களுக்குப் பின்பு இந்த மரியதாசன் நாட்டுக் கூத்தும் அச்சுருப் பெற்றதினால், அழிந்தொழிந்து போகாது காப்பாற்றப்பட்டு, வருங்கால இரசிகர்களுக்குப் பேணி வைக்கப்படுவதை எண்ணி அவரது ஆன்மா உவகை அடைவதாக.

**தோற்றம்: 18-2-1895**
**மறைவு : 5-5-1938**

விசய மனோகரன் நாட்டுக்கூத்து
அச்சுப்பதிவு —ஆவணி 68
மரியதாசன் நாட்டுக்கூத்து
அச்சுப்பதிவு —ஆவணி 72





புலவர் வெ. மரியாம்பிள்ளை அவர்கள்

# மரியதாசன் நாட்டுக் கூத்து

## (கதைச் சுருக்கம்)

வலாரிபுரியை அரசு செய்து வந்தான் வரேந்திரன்; தனது மந்திரி மூலம் நாட்டின் செழிப்பையும் சேனாதிபதிமூலம் நாட்டின் படைப் பலத்தையும் அறிந்தபின் தானாதிபதி மூலம் திறைசேரியின் நிதி நிலைமையை ஆராய்கின்றான். தானாதிபதி நிதி நிலைமை நன்கு இருப்பினும் சீன தேசத்தரசன் திறை கொடுக்கவில்லை என்பதை அறியச் செய்கிறான். சீன அரசன் திறை கொடுக்கவில்லை என்பதை அறிந்த மன்னன் சினந்து, தானாதிபதியை உடன் சென்று திறை கேட்டு வரும்படி பணிக்கின்றான்.

தானாதிபதி தனது மனைக்குச் சென்று, மனைவிக்குத் தனது சீனப் பிரயாணம் பற்றிக் கூறி விடைபெற்றுச் செல்கின்றான். ஒரு காட்டினூடாகத் தானாதிபதி பயணம் செய்துகொண்டிக்கும்போது தேவதாசன் என்பவனைச் சந்தித்து வழித்துணையாக அவனுடன் சேர்ந்து பயணத்தைத் தொடர்கின்றான்.

தேவதாசன் திருக்காவலூருக்கு நேர்த்தி கொண்டு செல்வதை அறிந்த பசாசானவன் மனித உருக்கொண்டு காட்டு வழியில் தானாதிபதி, தேவதாசன் என்பவர்களுடன் தானும் ஒரு வழிப்போக்கனாகச் சேர்ந்து கொள்கின்றான்.

உரையாடிக்கொண்டு செல்லும்போது, மனித உருவெடுத்த பசாசானவன் தேவதாசனுக்குப் புத்தி கூறி அவனைத் திருக்காவலூருக்குச் செல்ல வேண்டாம் என்று தடுக்கிறான். அவனது புத்திமதியை ஏற்காது மறுத்த தேவதாசனை, பசாசானவன் பயமுறுத்தித் துன்புறுத்த முனைகின்றான்.

அவ்வேளை, வழியின் அருகே இருந்த ஒரு மலைக் குன்றின் உச்சியில் தேவதாய் காட்சி கொடுக்கவே பசாசானவன் மறைந்து ஓடிவிடுகின்றான்.

இந்தப் புதுமையைக் கண்ணுற்ற தானாதிபதி தேவதாசனிடம் இதுபற்றி விளக்கம் கேட்டு, அவனது சமயத்திற்சேர ஆசை கொள்கின்றான். தேவதாசன் தானாதிபதியை திருக்காவலூர்க் குருவிடம் அழைத்துச் சென்று ஞானத்தீட்சை கொடுப்பித்து, மரியதாசன் என்னும் புதிய பெயரையும் பெறச் செய்கின்றான்.

ஞானத்தீட்சை பெற்ற தானாதிபதியாகிய மரியதாசன் சீன தேசம் செல்லாது தனது மனைக்குத் திரும்பி, மனைவிக்குத் தனது மதமாற்றத்தை விளக்கி, அவளையும் புதுமறையிற் சேரப்பண்ணி, தனது உத்தியோகத்தையும் துறந்து மனையிலே தங்கி இருக்கின்றான்,

நீண்ட நாள்களாகியும் சீன தேசம் சென்ற தானுதிபதி திரும்பி வராததை உணர்ந்த வரேந்திர மன்னன் தனது சேனுதிபதியை அழைத்து, தானுதிபதியின் மனைக்குச்சென்று நிலைமையை அறிந்து வரும்படி ஏவுகின்றான்,

தானுதிபதியின் மனைக்குச் சென்ற சேனுதிபதி, அங்கு புதிய சமயச் சின்னங்கள் இருப்பதைக் கண்ணுற்றும், தானுதிபதி தான் புதுமறையிற் சேர்ந்து விட்டது பற்றிக் கூறியதைக் கேட்டும், தானுதிபதிக்குப் புத்திமதி கூறுகின்றான்.

மரியதாசன் சேனுதிபதியின் புத்திமதியை ஏற்காது அவனோடு சமய தர்க்கம் செய்கின்றான். சேனுதிபதி கோபங்கொண்டு அவ்விடத்தை விட்டகன்று நேரே அரசனிடம் சென்று அவனைப் பற்றிச் சாடை சொல்கின்றான்.

சேனுதிபதி கூறியவற்றைக் கேட்டு வெஞ்சினமுற்ற அரசன் சேவுகரை அனுப்பி மரியதாசனை அழைப்பித்து, நயபயங் காட்டி, புதுமறையைக் கைவிடும்படி கட்டளையிடுகின்றான்.

மரியதாசன் அரசனது நயபயங்களுக்குக் கட்டுப்படாததினுல் அரசன் அவனைச் சிறைச்சாலையில் இருத்தும்படி உத்தரவிடுகின்றான். இவ்வேளை,

அழகாபுரியில் இருந்த தேவதாசன் மதமாற்றம் செய்யப்பட்ட மரியதாசனின் சமய வாழ்க்கை நிலைமையை அறிய விருப்புக் கொண்டு வலாரிபுரி சென்று, மரியதாசனது மனைவி மூலம் அவன் சிறையில் இருப்பதை அறிகின்றான்.

உடனே சிறைக் கூடத்திற்குச் சென்று மரியதாசனுக்குப் புத்திமதி கூறி அவனைத் திடப்படுத்திக் கொண்டிருக்கும்போது தேவதாசனைச் சேவுகர் பிடித்து வரேந்திரன் முன் கொண்டுபோய் விட்டு, அவன் மரியதாசனுக்கு துர்ப்புத்தி கூறியதாகக் குற்றஞ் சாட்டுகின்றனர். அரசன் தேவதாசனையும் சிறையில் அடைக்கும்படி உத்தரவிடுகின்றான். அதனோடு மரியதாசனையும் சிறையில் இருந்து அழைப்பித்து மந்திரி—சேனுதிபதி - கவுன்சல் என்பவர்கள் முன்னிலையில் விசாரணை செய்து, அவர்கள் சிபாரிசின்படி அவனைக் கழுவில் ஏற்றிக் கொல்லுமாறு பணிக்கின்றான்.

சேவுகர் மரியதாசனைக் கழுவேற்றுகின்றனர். அங்கு தேவதூதன் தோன்றி மரியதாசனுக்கு ஆறுதல்கூறி மோட்ச கிரீடத்தைப் பெறும்படி ஆசியுரைத்து மறைகின்றான்.

அழகாபுரியில் அரசுசெய்துவந்த அழகேச இராசன் தனது மந்திரி, சேனுதிபதி என்பவர்களை அழைத்து நாட்டின் நிலைமையை உசாவுகின்றான். அவர்கள் நாட்டின் சிறப்புகளை விளக்கியதோடு வலாரிபுரி சென்ற வணிகனுகிய தேவதாசனை வலாரிபுரி மன்னன் சிறைப்படுத்தி இருப்பதாகக் கூறுகின்றனர்.

இதைக்கேட்ட அழகேச மன்னன் கோபங்கொண்டு, தூதுவனை அழைத்து, சிறைப்பட்டவனை உடனே விடுவிக்குமாறு திருமுகம் அனுப்புகின்ருன். திருமுருகத்தை வாசித்த வரேந்திரன் சிறைப்பட்டவனை விடமுடியாதென்றும் முடியுமாயின் போர்புரிந்து அவனை மீட்டுக் கொள்ளலாமென்றும் கூறித் தூதுவனைக் கடிந்து அனுப்புகிருன்.

தூதுவன் உரைத்தவற்றைக் கேட்ட அழகேச மன்னன் நால் வகைப் படையுடன். வலாரிபுரி சென்று வரேந்திரனுடன் போர் செய்து அவனைத் தோற்கடிக்கின்ருன்.

வரேந்திரன் மன்னிப்புக் கோரியதினுல், அவனை மன்னித்து திறை செலுத்திச் சீராக அரசாளுமாறு பணித்து, மரியதாசனையும் அழைத்துக்கொண்டு அழகேசன் தனது நகர் திரும்புகின்ருன்.

''எளியாரை வலியார் ஒறுக்கின்
வலியாரைத் தெய்வம் ஒறுக்கும்''

சுபம்

## வடமாகாணத்தில் அரங்கேறிய
## சில நாட்டுக் கூத்துகளும், பாடிய புலவர்களும்

| கூத்துகளின் பெயர் | பாடிய புலவர் பெயர் | இடம் | காலம் |
|---|---|---|---|
| 1. அந்தோனியார் | சுவாம்பிள்ளை | பாஷையூர் | 1810 |
| 2. தொன் நீக்கிலார் | ,, | ,, | ,, |
| 3. கத்தரீனுள் | ,, | ,, | ,, |
| 4. மரிய கரிதாள் | ,, | ,, | ,, |
| 5. கிறிசாந்தப்பர் | ,, | ,, | ,, |
| 6. செபஸ்தியார் | ,, | ,, | ,, |
| 7. நொண்டி | அவுரும்பிள்ளை | கரையூர் | 1815 |
| 8. சம்பேதுரு பாவிலு | ,, | ,, | ,, |
| 9. சூசையப்பர் யாக்கோபு | ,, | ,, | ,, |
| 10. வரப்பிரகாசம் | ,, | ,, | ,, |
| 11. சுளியார் | ,, | ,, | ,, |
| 12. தேவசகாயம்பி | முத்துக்குமாரு | அராலி | 1836 |
| 13. அதிரூப அமராவதி | ,, | ,, | ,, |
| 14. அலங்கார ரூபன் | ,, | ,, | ,, |
| 15. காந்த ரூபன் ரூபி | ,, | ,, | ,, |

தடித்த எழுத்திலுள்ள கூத்துக்கள் அச்சுருவம் பெற்றவை

| | | | | |
|---|---|---|---|---|
| 16. | மீகாமன் (வெடியரசன்) | முத்துக்குமாரு | அராலி | 1836 |
| 17. | துரோபதை வஸ்திராபரணம் | ,, | ,, | ,, |
| 18. | அழகவல்லி | ,, | ,, | ,, |
| 19. | வாளபிமன்னன் | ,, | ,, | ,, |
| 20. | யூதகுமாரன் | சந்தியோகு | கரையூர் | 1856 |
| 21. | சபீன கன்னி | ,, | ,, | ,, |
| 22. | மூவிராசாக்கள் | ,, | ,, | ,, |
| 23. | என்றிக் எம்பிரதோர் | ,, | ,, | ,, |
| 24. | இசிதோர் | ,, | ,, | ,, |
| 25. | சந்தியோகுமையோர் படைவெட்டு | ,, | ,, | ,, |
| 26. | கனகசபை | தம்பாப்பிள்ளை | பறங்கித் தெரு | 1875 |
| 27. | தாவீது கோலியாத்து | ,, | ,, | ,, |
| 28. | ஞான சவுந்தரி | சுபவாக்கியம்பிள்ளை | பறங்கித் தெரு | 1895 |
| 29. | உடைபடா முத்திரை | ,, | ,, | ,, |
| 30. | கந்ப ரூபவதி | தம்பிமுத்து | மாதகல் | 1910 |
| 31. | தொம்மையப்பர் | ,, | ,, | ,, |
| 32. | பிரான்சீஸ் சவேரியார் | ,, | ,, | ,, |
| 33. | திருஞான தீபன் | ,, | ,, | ,, |
| 34. | கண்டியரசன் | மிக்கோர் சிங்கம் | பாஷையூர் | 1910 |
| 35. | கட்டப் பொம்மன் | ,, | ,, | ,, |
| 36. | கற்பலங்காரன் | ,, | ,, | ,, |
| 37. | சஞ்சுவாம் | பொன்னையா | சுண்டிக்குளி | 1915 |
| 38. | மத்தேசு மவுறம்மா | ,, | ,, | ,, |
| 39. | எஸ்தாக்கியார் | சூசைப்பிள்ளை | மாதகல் | 1915 |
| 40. | சங்கிலியன் | ,, | ,, | ,, |
| 41. | கருங்குயில் குன்றத்துக் கொலை | ,, | ,, | ,, |
| 42. | இம்மனுவேல் | ,, | ,, | ,, |
| 43. | கிறிஸ்தோப்பர் | யாக்கோப்பு | சுண்டிக்குளி | 1915 |
| 44. | மெஞ்ஞான வர்த்தகன் | ,, | ,, | ,, |
| 45. | தானியேல் | ,, | ,, | ,, |
| 46. | மாகிறேற்றம்மா | நீக்கிலஸ் (பரிகாரி) | கரையூர் | ,, |
| 47. | மரியதாசன் | மரியாம்பிள்ளை | சுண்டிக்குளி | 1932 |
| 48. | விசய மனோகரன் | ,, | ,, | ,, |
| 49. | மார்க்கப்பர் | சந்தியாப்பிள்ளை | ,, | ,, |
| 50. | தீத்தூஸ் | | கரையூர் | |
| 51. | செனகப்பு | | ,, | |
| 52. | பங்கிராஸ் | | | |
| 53. | ஆட்டு வணிகன் | | | |
| 54. | ஊசோன் பாலன் | | | |
| 55. | ஞானரூபன் | கிறிஸ்தோப்பர் | பாஷையூர் | |

அநாதிநம

யேசு மரி சூசை துணை

# மரியதாசன்

## நாட்டுக்கூத்து

### காப்பு விருத்தம்

ஆதிபிதாச் சுதனுடனே ஆவி யென்னும்
அவர்கள்திரு நாமமதை உச்ச ரித்துச்
சோதிமலர்ப் பாதமதை சிரமேற் சூடி
சுகந்தபரி மள ரோசா மலரைத் தேடி
நீதிபெறும் மரியதாசன் காதை தன்னை
நீணிலத்து நாடகமாய் நிகழ்த்து தற்கு
தீதிலதா யோர்குறையும் வந்தி டாது
தற்பரனே காத்திடுவார் காப்புத் தானே.

### தோடையம்

ஆதி பிதா சுதன் ஸ்பிரீத்து
அமலதிரீத்துவ ஏக பரன்
அவரது துணைமன நினைவுகொண்டு
அருங்கதையைப் பாட

அன்புறு சுத்த சந்தானுள் பெற்ற
அற்புதக் கன்னி அடைக்கலத்தாய்
நண்புறு மரியதாஸ் அவர்சரிதை
நானிலத்தில் பாட

இன்பரசாகிய சூசையப்பர்
இவருடன் சந்தந் தோனிமுனி
தன்னருள் நாவின் சுவையிலங்கு
தங்கக் கதை பாட

தங்குயர் இங்கிர்த மங்களம் சேர்
தற்பரனு மவர் காட்சிகொண்ட
தாட்சியுறும் மரிய தாசென்பவர்
தன்கதை பாட.

## கட்டியன் தோற்றம் — விருத்தம்

சிரத்தினில் வரத்தி சூடித் திகழ்மணிக் கவசம் நீடி
உரத்தினிற் பதக்க மாடி உயரொளிச் சரிகை நீடி
கரத்தினிற் பிரம்பு மின்னக் கார்சொரி வலாரி யென்மா
புரத்தினை ஆளும் இராச புனிதமா கதன்வந் தானே.

## கட்டியன் தரு (சித்திரமகு. எ. மெ)

இராகம் : பூரிகல்யாணி                தாளம்: ஏகம்

1. துங்கமுடி தங்கியொளிர் எங்களிறைவன் — சபை
தாங்கிவரப் பாங்குசிறப் போங்கிடச் செய்வீர்
2. கோங்கு மல்லி முல்லையுடன் தேங்கமழுறும் — நல்ல
கோமலரும் சண்பகமும் கூட்டித் தெளிப்பீர்
3. செங்கழுங்கு டன்கதலி எங்கும் நடுவீர் — உயர்
சேர்கமுகு தாழைகளும் ஆழநடுவீர்
4. கந்தநிறை சந்தனம் சவ்வாது பன்னீரும் — நல்ல
காமரங்கள் வீசிடவே தீவிரம் செய்வீர்
5. சங்கமுற்றிடு வீணை பேரிகை சங்கித நாதம் — நல்ல
சுதியிசைத்துமே பதிமகிழ்ந்திட சடுதியில் மீட்டும்
6. அன்ன நடை துன்னுமிடை மின்னிடையாரே — நல்ல
ஆலவட்டம் சாமரமோ டேமமாய் வீசும்
7. பங்கியொளிர் தீபமெங்கும் தொங்கவிடுவீர் — வெற்றி
பத்திரம் கொடி குடைகள் இங்கு தீட்டுவீர்

## கட்டியங் கூறல்—சந்த விருத்தம்

வளமெத்து நகரத்து அளிநத்து மலர்மெத்து
வதனத்து மொழி நத்தினுன்

படுதுட்டர் அடமொட்டி கெடுகெட்டி மிடவெட்டி
விருதொட்டிக் கெடி பெற்றுளான்

கலைசுற்று முலகத்து விலைபெற்ற மணிமுத்து
தனையுற்று நிலை பெற்றுளான்

முதிர்பட்ட மணியொட்டி அதிதிட்ட மொடுவிட்ட
மதிகொட்டு குடை நாட்டினுன்

**வசனம் :** இராாசதிராசன் — இராச மார்த்தாண்டன் — உக்கிர்மதீரன் உணர்வுற்ற ராசன் — வரைவுற்ற சேரன் — வலாபுரி நிருபன் — வரேந்திர சொரூபன் — கொலுவீதி வருகிறுர் — சமூகமெச்சரிக்கை —வெகுபராக்கு.

## வரேந்திர இராசன் தோற்றம்

**சந்த விருத்தம்** **தாளம்: ஏகம்**

எண்டிசை புகழ்ந்திடும் எமதரசைச் சூழ்ந்துமே
திண்டிறல் மிகுத்தராச திறலின்வன்மை யோர்வர
கொண்ட கன்னல் அன்னவன்னக் கோதையர்கள் சூழ்தர
கோகில நடம்புரிந்து கொவ்வையித ழோர்வர
கொண்டடி பணிந்துமே கொடிபடைக ளேவர
அண்டலர்கள் பாடியே அமிழ்சுரதம் நீடியே
கொண்டகா மரங்களும் குவலயத்தில் வீசிட
வண்டவம்பு மாலையணிவரேந்ர மன்னன் தோற்றினுன்.

## வரேந்திர இராசன் கொலுத்தரு (அதியுக்ரம. எ. மெ.)

**இராகம் :** நாதனுமக்கிரியை **தாளம் : ஆதி**

1. மணியொளிர் முடிசூடிக்—கரத்தினில்
மாண் பொரு கோல் நீடி—உலகினில்
மதியோங்கிடு புகழ் வலிதாங்கிடுமென
தரிதாங்கிடுகொலு விரைவிற் செல்வேனே.

2. காவலர்சூழ்தரவே—எழிலுறு
பாவலர் நீள் தரவே—எனதுடை
கடிவேல் கரத்துறப் படியாள் திறத்துற
நெடிசேர் அறத்துறு கொலுவிற் செல்வேனே

3. திருவெண்டுளேசூடி—இதழுறு
நறையுண்டளி பாடும்—படியினில்
திறை தந்தரசர்கள் முறை கொண்டடி தொழ
நிறைமுந்தவிர்மணிக் கொலுவிற் செல்வேனே

4. அடியிற்றெடுபடியா—அரசரின்
முடியிற்றிடக் கொடிதாய்—அரிந்துமே
அடுநித்திலகணி தொடுசித்திரவணிச்
சுடருற்றிடுமணிக் கொலுவிற் செல்வேனே

வசனம் : மனுநீதி தவருக் கோலோச்சுவேன்.

## கட்டியன் சந்த விருத்தம்

அழகொளி தவழ்மணி திகழ்நிரை எழுநனி
அணிராசனே வாழி
அடையலர் இடைவரை படைபொரு கெடிநய
அதிராசனே வாழி
வளமுறு பவளமின் எழுநிரை தவழுபொன்
மணிராசனே வாழி
வரைவில துறுதிறை பெறுமதி நயமுறு
வேல்ராசனே வாழி
களபம தெழுகுழல் இளமட வார்புகழ்
கவிராசனே வாழி
கனரண ரசகத இனநிரை துரகத
கெடிராசனே வாழி
குழலிசை சுதிநய ஒலிநட மிடுதிறல்
குணராசனே வாழி
குடைநிறு படிபொறு நெடிகர மடுகோல்
கொடிராசனே வாழி.

## வரேந்திர இராசன் விருத்தம்

வாழி யென்றின் நாழிவரை வருடுமா கதரே கேளீர்
ஆழி வரைசூ ழுலக டங்கலும் அமைத்துக் காக்கும்
நீளு மதியோ துமெந்தன் நிறைமதி யமைச்சன் தன்னை
நாழி வரையே யிறுமென் நற்சபை வரச்செய் வாயே.

வசனம் : கட்டியகாரனே ! மதிநிறை உள்ளத்தோனுகிய மந்திரியை எனது கொலுச்சமுகம் வரும்படி தெரிவிப்பாய்.

## கட்டியன் தரு (தேடியழைத் தோடி எ. மெ.)

இராகம் : தோடி தாளம் : ஆதி

விரைவில் நடந்தேகிடு வேனே—மந்திரிமனை
விரைவில் நடந் தேகிடு வேனே

1. விரைவில் நடந் தேகிடுவேன் வேந்தனுடை கட்டளைக்கு
விண்சுடர்தனை மறைக்கும் தண்படர் கொலுவமரும்
பன்மணிக் கவசம் பூண்ட மன்னவன் வரேந்திரனிப்போ
சொன்ன செய்திதன்னை யொரு பின்னமின்றியே புகல.. (விரை)

2. திங்கள் வெண்மணி நிலத்து சங்கமிழும் தரளத்து
துங்க வெண்சிறை யனமே தங்கரு வென்றே நினைந்து
அங்கடைகாத்தேகிடக்கும் பொங்குவள நாடுடையோன்
இங்கெனக் குரைத்தசெய்தி சங்கை மதிக்கேயுரைக்க (விரை)

3. வெண்ணவி ரொத்துநிரைத்த கண்கவர்வை'ரத்தூண்மேல்
ஒண்மணிக் கோபுரங்களும் விண்புகநிரை நிரையாய்
பண்ணொளிய தேததும்பும் தண்பணையும் நாடுடைய
அண்ணலிட்ட கட்டளையை திண்ணமதிக் கேயுரைக்க...(விரை)

## மந்திரி தோற்றம்

மின்மணி யிலங்க மார்பில் மிளிர்மணி வைரம் பூண்டு
பொன்னணி யாடை தாங்கும் பொருணனும் வரேந்திரற் கேதான்
தண்ணய மதிக டேர்ந்து தகைபெற வுரைக்கும் மந்திரி
இந்நிலம் மதிக்கும் இராச எழிலுறு சபை வந் தானே.

## மந்திரி தரு (நித்திலமணி எ.மெ.)

இராகம் : அடாணு தாளம் : ஆதி

1. சங்கினங்கள் கங்குகங்காய்ப் பொங்கியிமிழும்தரளம்
தங்கியே செறிந்தொளிரும் துங்கநல்ல நாட்டை
சிங்கணைக் கொலுவிருந்து தங்கணைக் கோலோச்சரசன்
இங்கெனைச் சமுகமழைத் தாரறியேன் நானும்

2. தவளவெண் நிலவொழுகு அழகுதிக ழும்வனச
பவளமின் வரைபுரையும் பார்த்திபரே றேனே
தளமதிகள் சிந்துமென உளமதிகள் தந்திடவோ
தானதனை ஆய்ந்தறியத் தாரணிசெல் வேனே

3. தம்புரு தவில் முரசம் விம்பமொலி பம்பையொடு
கொம்புகுழல் தும்பைசுரம் தானொலியே செய்ய
தங்குமிசை துங்கரசர் இங்கெனை அழைத்ததனை
சங்கைசபை போயறிவேன் இங்கிதமாய் நானே

4. ஆடகச் சிலம்பலம்ப பாடகமணிந்திலங்கும்
சூடகக் கணிகை மாதர் தித்திமியென் றேஒலி
அத்துவித சாமரங்கள் எத்திசையும் தூமரங்கள்
நத்திடு சித்ரக்கொலு நாடியே செல்வேனே.

## மந்திரி ஆசிரிய விருத்தம்

தவளவெண் நிலவே ஒழுகிடு வனச
தார்மணி மாலையே புனைந்து
தரளமே திரண்டு ஒளிசுடர் புரண்டு
தருகிர ணத்திரு முடியோய் !
திவளவே சூடி திரைமணிக் கோடி
தினமொளி பரப்பியே விதர்ண
சித்திர நிரையாய் கொத்திடு ரத்தின
செழுமணிக் கோல்கரம் நீடி

துவள்மணி யரசர் மகிழ்வது நல்கி
தூறெளிச் சொர்ணமே சொரிந்து
துதித்துவாய் புதைத்தே மதித்துட னேக
துளிரெழு மழகுள வதனே
பவளமால் சிதறி இலகொளி பரப்பும்
பாங்கரி தாங்குபொற் கொலுமுன்
பரிந்தெனைச் சமுகம் விரைந்தழைத் ததனை
பகர்ந்திடீர் பார்த்திபர்க் கேறே.

**வசனம் :** அரசிருப்பும் சிம்மாசனமும் ஆஸ்தான கொலுவும் சரணமே சரணம். என்னை அழைத்த காரியம் இன்னதென்று தெரிவிக்க வேண்டுமையா !

## அரசனும் மந்திரியும் நாட்டுவளப்பத் தரு

(பூவும் வானதும்... எ. மெ.)

**இராகம் :** பரசு — **அடதாளம்**

**இரா :** கலைமதி நிகரான எழில்முக
காந்திசேர் மதிப்பாந்தானேபூவில்
நிலையுறு வளமான தறிந்து
நிகழ்த்திடாயே விரித்தெனக்கிப்போ

**மந் :** அலைசெறி நிரை யாழியே சூழு
மழகுநாட்டுக்கதிபா சொற்கேளும்
இலகொளி ரெளிருந்தை நன்நாட்டின்
நிலவு மாவளம் நானுரைப்பேனறி

**இரா :** ஒளிசெறி மணியார் புயமேவிய
ஒப்பிலா மதிமந்திரி மேகம்
பொழிதரு மணியாகுநற் செந்நெல்
பொலிந்து மோங் கிறதா புகல்வாயே

**மந் :** தாரதி ரொளி யாரமணி செறி
தன்பணை நகரொண்ணரசே-நிதம்
காரது சொரிந்தூறிக் களம்விளை
போரெனப் பொலிந்தோங்குமுன் நாடே

இரா : நிறை சுடரொளி யம்பரனாலயம்
நேர்நிறை பலி பூசைகளென்றும்
முறைபெறு வழி வேதியரோதியே
மெய்ப்பரனடி யொப்பிறாரா செப்பு

மந் : மறை முறை நிறையே தவறா நிதம்
மாபரன் தளி பூசைகளென்றுமே
குறைவற மறையோர்களியற்றியே
குருபர னடியே தொழுறார் மன்னா

இரா : அடுதுடி தொடை அன்னம் பழிநடை
ஆனவேல் விழியாம் மடமின்னார்
படிநெடி கெடிதாகவே கற்பினில்
பங்கமின்றியே வாழுகிறாரா

மந் : முருகரு மளிபாடிடு நீள்குழல்
முகைநகைப் பொருவார் மடவாரே
திருமரு நறை வீசிடுங் கற்பினில்
தீதிலா அணி யென்னவே மின்னுறார்

இரா : செறிமணி யொளி சோதி தவழ்முடி
சிற்றரசரே உற்றெனக் கீந்திடும்
திறை முறை குறையாமலே நாளுமே
திட்டமாகவே இட்டு வாறாரா

மந் : கரிமுகடொறும் கட்டாரி யிட்டுமே
கார்மறைப் பொலியார் மணிமுத்தம்
நேர்நிரைப் பொருப் பென்னவே மன்னவர்
நேரடிகுவித் தேகிறார் மன்னா

மந்திரி வசனம் : உமது இராட்சியத்தில் பசுவும் புலியும் ஒரு தடாகத்தில் நீரருந்தவும், அரவும் கீரியும் அளைந்து விளையாடவும், கார் மேகம் பொழிந்து கன்னலும் வழிந்து செந்நெல்களுயர்ந்து ஓங்கவும், ஆடவருமரிவையரும் பூவும் மணமும் என ஒன்றித்து வாழவும் எல்லாம் சிறப்புற்று ஓங்குகின்றன அரசே.

## இராசா - விருத்தம்

விந்தைமதி யேயொளிருஞ் சுந்ர விம்பம்
விண்ணிலகும் தங்கிரணம் விரவித் தேங்கும்
சந்தமிகு தத்தையளி நத்தி யூர்ந்து
சாறுகன்னல் ஊறுவிளை சென்ன லேறு
சொந்தமணி சிந்தியொளிர் எந்தை நாட்டின்
சோபிதவ னப்பறிந்து மகிழ்ச்சி யானேன்
சந்ததமும் எந்தைநகர் விந்தை யான
சாற்றுமணிக் கொலுவதனில் வீற்றி ராயே.

இராசா வசனம்: புத்தியில் மிகுந்த உத்தம மதியே! எனது நாடு நகரங்களின் சிறப்பலங்காரங்கள் கேட்டு மிக்க மகிழ்ச்சியானேன். எனது நால்வகைப் படைகளுக்குந் தளகர்த்தனுகிய சேனைத் தலைவனைக் கொலுச்சமுகம் வரும்படி தெரிவிப்பீராக.

மந்திரி வசனம்: அப்படியே தெரிவிக்கிறேன் மன்னு,

## சேனுதிபதி வரவு: சந்த விருத்தம்

சீதள வெண்பிறை போலொளி ரும்பிரபை
சேர்மரு பொங்கிடவே
சிந்திடு முத்தொளி தந்திடு முடியணி
சித்தச ஜெத்திடவே
தாதுள ரும்நவ சோதிசெ றிந்திடு
தார்மணி சிந்திடவே
தாரைகள் கொம்புகள் பேரிகை பம்பைகள்
தானுமி லங்கிடவே
வாதுள ரும்சமர் போதுறு மொன்னலர்
வாடியே ஓடிடவே
வாட்டியே வன்றிறல் நாட்டியே வாகைகொள்
வரைமணி வாளேந்தி
கோதறு மாமணி போதொளி ரும்நனி
கொண்டொளிர் தண்டலைசூழ்
கொலுவுறு மரசனின் திருவுறு சேனைத்
தலைவனும் வந்தனனே.

## சேனாதிபதி பாட்டு (துணிவோ எ. மெ.)

இராகம் : அம்சத்தொனி தாளம் : ஆதி

1. பேரோங்கும் மணிமகுடம் புனை
பேசரும்வலி சாரவேயுறு
தாரோங்கும் தவிசுறு மாற்றலர்
தவிக்கவே மிகப் பதைக்கவே செய்து
தவறிப் பதறியகம் உதறித் திமிறிடவே
கதறி மதமுடைந்து சிதறச் செய்வேனே.

2. திண்டோளும் புயவலி மேவிய
திறத்துறும் பல மதத்த வீரரில்
உண்டோ எனக்கிணை யாகவே
உறுத்துவேன் குடல் பிறித்து வீழவே
உடலிற் றலையரங்க முடியிற் றுகள்எழும்ப
கடிதுற்றவர் இரங்கப் படியிற் கொல்வேனே.

3. பாரோங்கும் பகைவர்கள் மிகையுறு
படைத்தளங்களை அடிப்படுத்தியே
சீரோங்கும் மன்னர்முன் னேகியே
சீக்கிரத்தினில் ஆக்கிரத்துடன்
காற்றிற் கடிதெனவே தோற்றமுடன் நடந்து
சாற்றுமவர் மொழியைக் கேட்டறிவேனே.

4. இறையாகிய பொறையிறை முன்னவே
குறுத்த மன்னவர் செறுத்தரோ அதை
நிறையாகிய இறைமுறை பின்னமாய்
மறுத்தரோ உயிர் வெறுத்தரோஇனி
திரியுநரி கழுகு குருதிதனில் முழுக
திருகியவர் சிரசை மறுகிடுவேனே

## சேனாதிபதி சந்த விருத்தம்

அணிதிகழ் ரத்தின மணியது பொத்திடு
ஆதிபனே சரணம்
அதிபல முற்றிடு மணிநிறை பெற்றிடு
மதிநாயக சரணம்
பணிபல பெற்றிடு கணிசம துற்றிடு
பதமாமலர் சரணம்
பரசர்கள் மெச்சிட வரசை நடத்திடு
பார்த்திபனே சரணம்
கணிவுறு பெட்புய நடவு மிளிர்த்தொகை
கதிர்மாமுடி சரணம்
கருதரு மருவலர் வெருவுறு விரைசெறி
கடிமாமலர் சரணம்
திணிபுய நத்திடு மணியிர தத்தொடு
திறல்நாயக சரணம்
திருநிறை பொருவொடு வருநிறை சமுகம்
திருவுள முரையீரே.

## இராசா—சேனாதிபதி தரு (சற்குண எ. மெ.)

இராகம்: பைரவி தாளம்: ஆதி

இரா: வெற்புயம் விளங்குமணிக் கத்தனே—விள்ளீர்
விந்தைசேர் விறலணியென் சிந்தையே

சேனா: பொற்புயம் புகழ்நிறுநற் பூபனே—வாகை
பொங்குமுன் படைசேமம் துங்கனே

இரா: கணிதங்கொள் கரைதுறைகள் நாட்டியே—இப்போ
காத்திடாய் நகரமெங்கும் சீர்த்தியே

சேனா: அணிதங்கும் படைதிசைகள் நாட்டியே—அஞ்சார்
துஞ்சவே அமர்தொடுப்பேன் மிஞ்சவே

இரா: நற்றளம் கோட்டை முற்றும் பாட்டையே—நனி
கொண்டுமே காத்திடுவீ ரென்றுமே.

சேனு : கொத்தளம் பத்திரங்கள் சித்தமே—ஒன்னர்
கொள்மதம் மாற்றிடுவே னுன்னிதம்

இரா : விறல்தங்கும் வீரதள கர்த்தனே—அணி
விந்தைகொள் நகர்கரமே தந்தேன்

சேனு : மறல்தங்கும் மாற்றலரைச் சீற்றமே—கொண்டு
மாட்டுவேன் புகழ்நிலை நாட்டுவேன்

## இராசா எண்சீர் விருத்தம்

நித்திலமோ டொத்த நவரத் தினங்கள்
நித்தமொளி தத்துமுடிக் கற்பித் தானே
பத்திரியுங் கொத்தளங்கள் சுற்றிவாரி
பட்டமதி விட்டமது முட்ட நீரும்
நத்துமநந் தின்றுதண்டு நாட்டி மாட்டி
நாடடங்கத் தானைகள் பீரங்கி நீட்டி
மெத்துதுறை யத்துமுறை சித்த மாக
வென்றுவந்து நின்றுதண்டு நாட்டு வீரே.

இராசா வசனம் : தளபதியே ! என் நகரில் உள்ள கோட்டை கொத்தளம் துறைமுகம் யாவும் மிக எச்சரிக்கையான காவல் வைப்பீராக.

சேனுதிபதி வசனம் : அப்படியே செய்கிறேன் அரசே.

## தானுபதியும், தேவியும் தோற்றம்
## ஆசிரிய விருத்தம்

வண்டணி நறைபூக் கொண்டிடு குழலை
வாரியே பின்னிடு சடையில்
வருநிறை யரும்பப் பொருமலர் பொரும்ப
வனப்பொடு சூடியே நாளும்
துண்டவெண் பிறையை வென்றிடு நுதலில்
துலங்கிடு திலதமே யிலங்க,
துடிவரி விழிக்குப் பொடிதுமை வரித்து
துன்னிடு கரமது தன்னில்

விண்டொளிர் வயிரம் மண்டியே யொளிர
விருதரு சரப்பதை யணிந்து
வினைநவ மணியால் இழைகர கடகம்
விட்டொளி மட்டெழச் சிதறி
தண்டொடு சிலம்பு சதங்கையே பாதத்
தணீர்கணீர் என்றுமே யொலிக்க
தார்பொரு தானு பதிமனை யாளும்
தனிநிறை சபையில் வந்தனரே.

தானுபதி - தேவி (பொன்னொளியும் எ. மெ.)

இராகம் : நீலாம்புரி தாளம் : ஆதி

தானு : வாளனைய வரிவிழியே
வஞ்சியேயென் வரைமொழியே
ஆல கண்டனுஞ் சிவனை
அடிபணிந்து போற்றி—தாங்கள்
அகமகிழ்ந்து சாற்றி

தேவி : வெண்டரள மொளி சிதறி
கொண்ட மணிப்புயம் விதற
கண்டமறை ஐங்கரனைப்
போற்றி மலர் சாற்றி—அவர்
பொன்னடியைப் போற்றி.

தானு : வண்டு மொய்த்த மலர்க்குழலே
வனசநிகர் முகவெழிலே
பண்டுபணி மதி மிலைச்சும்
மங்கை பங்கனுரே—அவர்
செங்கமலந் தேரே.

**தேவி:** கண்டகங்கைக் கொண்டமன்னன்
கருதரு தானுபதியே
அண்ட ரிறையா மரனின்
அடிமலரைப் போற்றி—இந்தப்
படிதனிலே சாற்றி

**தானு:** மின்னிலங்கிடு மிடையே
மென் மலரன்பெடை நடையே
கன்னலாஞ் சுவை மொழியே
கார்குழலே மாதே—அரன்
நேர்கழலிப் போதே.

## தேவி கொச்சகம்

செங்கனக முடியொளிரச் செழுமுறுவல் சேர்வதனச்
சங்கைமிகும் மன்னவர்கள் தான்மதிக்குந் தார்மகிபா
கங்கைசடை யேயணிந்த காரணனைப் போற்றிசெய்தே
சங்குமொலி யேயெனவே தாரணியில் வாழ்வோமே.

**தேவி வசனம்:** பிராண நாயக! ஐங்கரனருளினாலே யாதொரு குறைவுமின்றி இருக்கிறோம். ஏழைகளுக்கு வேண்டிய தான மீந்து பரம்பொருளை மனதிலிருத்தி அன்புடன் வாழுவோம் தலைவரே!

## தானுபதி கொச்சகம்

கங்கரிகள் காவிநிற்கும் கதிர்நிறைசிங் காசனத்தில்
தங்குமர சின்சபைக்கே தாமதமில் லாதேகி
செங்கைவளை மாதரசே சேர்வளமை யேயறிந்து
இங்குவரு மட்டுமெங்கள் எழில்மனையில் வீற்றிருமே

**தானுதிபதி வசனம்:** பெண்கள் நாயகமே! நான் அரச சபை சென்று வருமளவும் பாங்கியருடன் நந்தாவனம் சென்று உலாவியபின் மனையில் இரும் தேவியே.

**தேவி வசனம்:** அப்படியே ஆகட்டுந் தலைவரே.

## தானுபதி பாட்டு (பானுலா எ. மெ.)

இராகம் : பைரவி                                          தாளம் : ஆதி

1. வானுளேந்தேறு மின்னி தானிழிந்தூறு நன்னீர்
வீறுளேந்தாறு கன்னல் ஆல் விளேந்தேறு சென்னல்
வடிவுற்றே வளமுறு நெடிநகர்
கெடிபெற்றே அடிபெறு மரசனின்
கொடிபெற்றே முடிபட இடுதிறை
துடியுற்றே படியினில் இடுமறு
வாருதிவாவுறு மீதினிலேபெரு
மீதுயிரேயிரு ஆயுடலேநரி
வீறிடுவேபசி ஆறிடவேயெறி
வேறிடுமாபதி ஏகிடுவேன்ததி

2. ஆழிசூழ் இந்நகர்ப்பொற் பாழிநீள் அண்ணலென்னே
நீளுமா இன்னகரம் ஆளவே துன்னுமுன்னம்
அள்ளுற்றே அடையலர் இடைவரை
விள்ளுற்றே விருதருமுரையது
தெள்ளுற்றே தெரிமுறை குறையது
கொள்ளுற்றே கொடிதுறு படைபொரு
ஆணவமுற்றுமே மாநகர் சுற்றியே
தானதையுற்றுமே தானெனே இத்தரை
நாடியழைத்தரோ தேடிய வித்தகன்
கூடிய சித்திர மாளிகை நத்துவேன்.

## தானுபதி விருத்தம்

சங்கினங்கள் முழங்கி யீனும் தரளமே கொழிக்கும் நாட்டில்
துங்கநற் கோலே யோச்சித் துகள்கழைந் தரசி யற்றும்
நங்குறு மரச ரேறே நளிலுறு நகரந் தன்னில்
இங்கெனே யழைத்த செய்தி இயம்புவீர் அறியத் தானே.

## இராசா—தானுபதி பாட்டு (அப்பனே அப் எ. மெ.)

இராகம் : பலகம்ச அடதாளம்

இரா : கதிர்மணி முடிபுனே கனகரூபா
கனமதி யுளயிள மதிவதனு
முதிர்மணி பொதியுமென் நகர்நிதியம்
முற்றுமறிந்திட உற்றுரை செய்

தானு : வெதிர்புரை பசியமென் ரூேளேநெடும்
வெற்புய மன்னவா பொற்புலவும்
விதிர்மணி பொதியுமுன் வெண்தவிசின்
விறல்கணக் குறும்முறை விளம்புவேன் யான்.

இரா : இலகொளி ரெளிரழ குளமதியே
இணேவத னும்புய முறும்பதியே
நிலமுறு மரசிறை யாம்வரியின்
றிறைவரு மானமென் ஞேதெனக்கே

தானு : அரசிறை உறுவரி யாறு லட்சம்
அறிவொன்று உறுசென்னல் ஏழுலட்சம்
திறைமன்னர் இறுபொன்னே தேரெண்லட்சம்
திருபொக்ச மிருலட்சம் தேறுலட்சம்

இரா : நிரைமணி பொருபுயம் நித்தநத்தும்
நிறைமதி செறிதானு பதிநிதியே
வரைமணி பொருவணி வண்டரென்றும்
வகையுடன் இறுதொகைத் தகைமையெதோ.

தானு : பானுறு மானக ரர்னதொரு
பவுள்சுறு மதிதிற மன்னரெல்லாம்
தானுறு மெம்திறை தந்திடவே
தருசின னெருவனே தான்மறுத்தான்.

## இராசா விருத்தம்

கொங்கமொடு தங்குவங்கம் கலிங்க முள்ள
கொற்றமுடி யுற்றமன்னர் குறிதப் பாதே
பொங்குதிறை இங்கிமிறப் புகழ்கொள் நாட்டில்
பொற்பொழுகும் வனப்பறிந்து புளக மானேன்
துங்கபதி யிங்கெனையே மதியாச் சீனன்
துன்னுநகர் சென்றுதிறை யின்றே கேளாய்
அங்கவனே மறுத்திடுகில் அனந்தம் போரென் (று)
அறைந்துபதில் விரைந்தெனக்குச் சாற்று வாயே.

இராசா வசனம் : தானுபதியே! இன்றே சீன தேசம் சென்று அந்த மன்னனிடம் திறைப் பணம் பெற்றுவருவீராக.

தானுபதி வசனம் : அப்படி செய்கிறேன் மன்னவரே.

### தானுபதி-பாட்டு (சொல்லமுடி....எ. மெ.) 24

இராகம் : தோடி — தாளம் : ஆதி

தேங்குமணி மாளிகை செல்வேன் - கெம்பாலிழைத்த
தேங்குமணி மாளிகை செல்வேன்.

1. ஓங்கிடு மணிப்புயனும் பாங்கரசனி னுரைக்கு
ஓடியே சீனனிடத்து நாடியே திறையெடுக்க
தாங்கிடுமருப்பொலிந்து வீங்கு குழலாளிடத்து
தானொரு மொழியுரைத்து மாநகருக்கேகிடவே. (தேங்)

2. இங்கிர்தக் கொடியிடை யலங்கிர்தப் பெடைநடையாள்
என்மனையாளினிடத்தே இன்றுநன் மொழியுரைத்தே
சங்கீதசுரக்கியானம் பொங்கிடுமரசனது
தந்திடாதுற்றிடுதிறை பிந்திடாது பெற்றுவர (தேங்)

3. பூமலி தடங்கள் நிறை காமலியிடங்களுறை
புட்களின்வனப்பெனது கட்புலன் கவருகுதே
பாமலிபடர்ந்திசையே கோமறுகிடுந்திசையே
வாவுமமரோன் நகரம் மேவுமிதற்கீடிலையே. (தேங்)

## தேவி (இன்னிசை) நந்தாவனம்

முத்துநகைப் பாங்கான மொய்குழலே தொய்யிடையே
மெத்துமலர்க் காவனம்போய் மென்மலர்கள் நாம்பறித்து
நத்திவிளை யாடியிதோ நறையுகுத்து விந்தையதாய்
சித்தமகிழ் வோம்வருவீர் சேடியரே என்பிறகே.

### தேவி - சேடி பாட்டு (முக்கனி...எ. மெ.)

இராகம் : கிரவாணி அடதாளம்

தேவி : தீங்கனிதேங்கிய பாங்கான சோலையில்
தேங்கிவழிந் தொழுகுஞ் - செழுந்தேன்
கோங்கனி தாங்கிய வீங்கிநறுங்கமழ்
பாங்கி மகிழ்ந்திடவே வருவாய்

தோழி : ரீங்காரம் செய்துமே தீங்கானம்பாடுமே
ஓங்குமலர் வனத்தே - யளியே
சிங்காரமாகவே யங்குள்ள பூக்களை
தாங்கிப் பறித்திடவே வருவேன்

தேவி : அல்லியும் முல்லை யலர்ந்திடுகாவனம்
ஆவலாய் ஏகிடுவோ - மிப்போதே
புல்லிய பஞ்சணை மீதிற்பரப்பிட
மல்லிகைப் பூப்பறிப்போம் மயிலே

தோழி : தண்டுள பூக்களைக் கண்டு மகிழ்ந்திட
தாவி நடந்திடுவோம் - விரைவாய்
வெண்டுளை கொண்டுமே கொண்டையிற்சூடிட
விரைந்துமலர் பறிப்போ மென்மானே.

தேவி : பிஞ்சாருந் தேனுறும் மஞ்சாரும் சண்பகம்
பேணிப்பறித் திடுவோம் - இப்போதே
வஞ்சியரே எந்தன் செஞ்சொல் மொழிப்படி
வாகுடன் வந்திடுவீர் வழியே

தோழி: வண்டளி பாடிடும் கொண்டகுழலுறு
வண்ணமதிமுகத்தாய் - அங்கே பாராய்
கொண்டமருவிழி கண்டுமே புன்றலே
தெண்டனிட் டேகிடுதே மயிலே.

மறுதரு (மானேமட எ. மெ.

இராகம் : பரசு அடதாளம்

தேவி : மானேர் மடவஞ்சியரே யெந்தன்
மாண்புள்ள பாங்கியரே - இப்போது
நாமே மலர் கொய்து மகிழ்ந்திட
நந்தா வனம் புகுவோம்.

தோழி: கோனுர் புகழ்ந்து துதித்திடு
கொவ்வை இதழ் மொழியே - நல்ல
பானேர் ஒளிர் பங்கியெறிவனப்
பாங்குள்ள பூப்பறிப் போம்.

தேவி : செஞ்சுடர் விழிஅஞ்சுகமே மொழிச்
சின்ன இடை யாளே - அப
ரஞ்சித மலரானதையே நாமும்
அக்களிப்பாய்ப் பறிப் போம்.

தோழி : மஞ்சுமா மதி துஞ்சுமெழில்முக
மாங்குயிலே கேளும் - செழுங்
கஞ்சமாமலர் கொய்து களித்திடும்
கானம யிலேநீர்

தேவி : வண்டு நேர்குழல் கொண்டவரிவழி
வம்பவிழ் மாலேபுனே - மொழி
கண்டுநேரிளங் காரிளேயே வாரும்
காந்தள் மலர் பறிப்போம்.

**தோழி:** தண்டுலாவிய சாகரந்தன்னிலே
தாவிடுமன்ன முந்தன் - நடை
கண்டு நாணியே காவிடைசென்றதே
கார்குழலே யளியே

**தேவி :** தேனே செழுங் செங்கயமே எந்தன்
சேடியரே கேளும் - நல்ல
பானேரொளி போல இலங்கிடும்
வாசமுகை பறிப்போம்.

**தோழி :** அன்னமே நடைமின்னற் கொடியிடை
சொர்ணப்பசுங் கிளியே - பல
வர்ணமேமலர் துன்னு வனத்தினில்
பண்பாய்ப் பறித்திடம்மா

## தேவி - இன்னிசை

பொழுதுதய மானமுதல் பொங்குமலர்ச் சோலையிலே
விழித்தரும்பும் பூப்பறித்து வெகுவிளையாட் டாயயர்ந்தோம்
எழுதகம்நேர் பாங்கியரே இப்பொழுதே நாம்நடந்து
பொழுதுமறை வாகுமுன்னே பொன்மனைக்குச் செல்வோமே.

## தேவி தோழி - தரு (செப்பரிய பூவில் எ. மெ.)

இராகம் : லாவணி தாளம். ரூபகம்

**தேவி :** பொங்குநறைப் பூங்குழல் சேர் சேடி - நாங்கள்
தேங்குறும்பூக் கொய்து விளை யாடி
அகங்களைத்துச் சோருதுதே நீடி - எங்கள்
அரியமனை சென்றிடுவோம் ஓடி.

**தோழி :** வீங்குநறைப் பாங்குமலர் சூடி - அழ
கோங்குமெழில் தாங்குடலம் வாடி
களையுடனே உளையுதென்ற மாதே - நல்ல
விளைமணியால் இழைமனைக்கிப் போதே.

தேவி : மாலைபுனை மாண்புடைய மானே - நாங்கள்
மாலைவரு முந்திமனை தானே
மாலைபுனை மகிபரென்னைத் தேட - முன்னம்
மாலைமய மாகவேயெம் வீடே

தோழி : முத்துமணித் தாழ்வடம் சூழ் மானே - நல்ல
கொத்து சிறைப்புள்ளிறைகோ மானே
நத்தியே கலங்கிடுமுன் னாமே - எங்கள்
சித்திரமனைக்குச் செல்லு வோமே.

## தேவதாசன் தோற்றம் விருத்தம்

அலகிலா மோன ஞான அமலனை யீன்ற சுத்த
நலமரி கோவி லாகும் நன்னயக் காவ லூர்க்கே
தலமதில் நேர்த்தி யாகத் தரளமும் மணியுங் கொண்டே
நிலவியே தேவ தாசன் நிறைமுறை சபைவந் தானே.

## தேவாரம்

அடிமுடியில்லாத்தேவ - அம்பரன்தனையேயீன்ற
உடுமுடிசூடியென்றும் - உம்பருக்கரசியான
கடிதனை மிதித்தபாதம் - கருதியே சிரமேற்சூடி
படிதனிலடி யேனுந்தன் - பதிவர அருள் செய்வாயே

## தேவதாசன் தரு (பொன்னினிறமு எ. மெ.)

இராகம் : பரசு அடதாளம்

1. செங்கமலமே தங்குபதமே
தங்கமே பரன் துங்கமே யொளிர்
இங்குனைநாடி மங்களம் பாடி
தங்காதேதேடி சுறுக்கினில்
நீங்காதே யோடி

2. தங்கத்தொளியும் - அங்கத்திகழும்
திங்கட்சுடருன் அங்கத்தொளிர
தங்குன்னுசரத் துங்கனும்பரன்
தன்னையே வேண்டி நெடுவனம்
முன்னையே தாண்டி,

3. கடல்மடையெனக் கொடுகருணையே -
கருதியுன்திருப் பதியில்வந்திட
அடல்மிதிபதத் திடனுடன் விரைந்
தண்டினேனம்மா - நினதருள் -
வேண்டினேனம்மா

4. பேரணிதயை - காரணிபிறை -
தாரணிமறை யோரணிநல
சிரணிபரி - பூரணிதனி
நேரணிகொண்டு - வரச்செய்வாய்
தாரணியின்று.

**தேவதாசன் வசனம் :** பரிசுத்த தேவதாயே ! அடியேன் இந்த அத்துவான கானகத்தில் உமது இரக்கப்பெருக்கை நம்பி உம்திருப்பதியை நாடி வருகிறேன். அடியேனுக்கு ஒரு தீங்கும் நேரா வண்ணம் பாதுகாத்தருளும் தாயே.

## தானுபதி - தேவி - தரு (பட்டுவர்ணக்கட் எ.மெ.)

**இராகம் :** லாவணி

**ஏகதாளம்**

**தானு :** காந்திமுகச் சாந்தகுணமாதே - நானும்
வேந்தனது கட்டளைக்கிப்போதே - சென்று
போந்தநகர்ச் சீனனிடந்தானே - திறை
ஒர்ந்தமுறை தேர்ந்துவருவேனே.

**தேவி :** வன்னமணி துன்னுமெழில் மார்பா - நீரும்
மன்னவனின் இன்னுரைக்குச் சார்கில் - வெகு
இன்னலுடன் இங்கிருக்கிலா றேன் - இந்த
மின்னிடையாள் உம்முடனே வாறேன்

**தாரு:** கந்தநறும் பூங்குழலே மானே - நீரும்
முந்துபகை வேந்தர் முன்பு வாரா - எந்தன்
விந்தைமனை வீற்றிருங்கண்ணுளே - நானும்
விரைந்துநொடி வருகுவேன் பெண்ணுளே

**தேவி:** ஈருடலே ஒருயர் போல்நாமே - ஒன்றி
இசைந்துமனம் மகிழ்ந்துமே வாழ்ந்தோமே—இந்தப்
பேருலகில் நானிருந்து வாட - நீரும்
பிரியமனங் கொண்டீர் மகிழ்கூட

## தாருபதி எண்சீர் விருத்தம்

கொஞ்சுகிளி யஞ்சுகமே இன்சொல்லாளே
கோனுலகர் மேனிலங்கொள் அரம்பை நாணும்
கஞ்சமலர் மிஞ்சுசுடர்க் கனகரூப
கானமயி லேயரசன் கணித்தே சொன்ன
மிஞ்சுதிறை விஞ்சுவரி கொண்டே வாங்கி
மீண்டுதிறல் பூண்டுமிங்கே வருமட் டாக
மஞ்சுமப ரஞ்சிதங்கொள் மாட கூட
மானதிலே தானிருமென் மடமின் ருளே

**வசனம்:** தேவியே! நான் சீன தேசம் போய் எங்கள் அரசரின் திறைப்பணம் வாங்கி அதிசீக்கிரம் வந்து சேருவேன். அது மட்டும் சேடியருடன் மாளிகையில் வீற்றிருப்பீராக.

## தாருபதி - கொச்சகத்தரு

### கொச்சகம்

செவ்வண் ணதரச் செழுமுறுவல்
திகழுந் தாமத் தொய்யிடையாள்
ஒவ்வெண் ணேரார் பிறைநுதலின்
ஒப்பா ரிப்பா ரில்வனச
அவ்வண் டார்க்கு மழகுமெழில்
நறைசொற் இறைபற் உறைமனைக்கு.

## தானுபதி - தரு (மெய்யற்ருவது எ. மெ.)

இராகம் : எதுகுலகாம்போதி தாளம் ஆதி

வெவ்வண் டிடுதிட ஒவ்வண்டிட வருவேன்
இன்னணிமனே
ஓதுறு மொழியர சாருறு வேநிறு
போதுறு திறைபெற்றே நான் விரைவேனே.

## தேவதாசன் கொச்சகம்

கானக் களப மயிலாடக்
கவிமென் மலரின் அளிகூட
வீநற்சுதியெற் குயில்பாட
விஞ்சா தின்சொல் அஞ்சுகங்கள்
தானச் சிறந்தார் சோலையெங்கும்
தாவிப் பாவிக் கூவுமிசை

## தேவதாசன் - தரு

நாஞெத்திடு தொனி தேஞெத்திடு செவியே
தேங்கு மின்சுவை
தருமனமின்புற அனேமரிபண்புறு
தயைதளி முன்பிதோ – தான் நடவேனே.

## தனுபதி - கொச்சகம்

காமென் மலரார் ஒதிமந்தான்
கருக்கொண்டுளே சங்கீன் தரளம்
தாமுன் கருவென்றடை கிடக்கும்
தங்கும் பழனத் துங்கவள
மாமுன் நகரைப் புரந்தளிக்கும்
மணியார் புயமே வணியிறைவன்

### தாணுபதி - தரு

போமென்திறைக் கெனத் தேமுன்னுரைக் கேதான்
தேர்ந்துமேசணம்
பொருவன மருகரி பரிவரி வெருவுற
நிருபனின் அருதிறையே பெறவிரைவேன

### தேவதாசன் - கொச்சகம்

காட்சிக் கணிபெற்ஹெளிர் வனப்பும்
கவிஞர் விந்தப் பொழிற்சிறப்பும்
மாட்சிக் கிருவா நறையுகுத்தும்
வனப்பார் அல்லிமுல்லை கொன்றை
நீட்சிக் கசோகாராம்பல் மற்றும்
நிரையா யொளிர்ந்தே எழில் நிலவும்

### தேவதாசன் - தரு

மாட்சிக்குறுநதி வீழ்ச்சிச் சிறப்பதையே
ஆட்சியாயுறும்
மருமலர் பொருமுகை திருமுகக் குறுநகை
ஒரு நலர் கருமிகையே வனத்தின் சூட்சியே.

### தாணுபதி - எண்சீர் விருத்தம்

காடுபட ரூடுசெடி கவிஞர் விந்தம்
கல்லுமுள்ளு மள்ளுபடி கரந்து தேங்கி
கோடுவரை கேடுநிறை கோர மான
கொல்மிருகம் மல்குமிந்தக் கொடிய கானில்
கூடுநட மாடுபர நீடு பாதம்
கொண்டுமனத் திண்டரசன் விண்டல் போல
நாடுநகர் தேடிவிரைந் தயனந் தாரா
நாட்டுதிறை கேட்டுவர நடவு வேனே.

## தேவதா - தானுபதி தரு (இகழ்ந்துள்ளோ எ. மெ.)

இராகம் : முகாரி அடதாளம்

தேவ : மின்னலங்கிர்த மேன்மரியாளே - மேவுன்சுந்தர
மிளிர்பதமதி மிலச்சும் விந்தர - மிதமாமலரின்
அன்னலங்கிர்த முன்னுந்தளியிலே - அன்பனின்புடன்
அடுத்து வந்திடக் கொடுத்திடாய்தயை-அமலோற்பவியே

தானு : ஆதிசத்தியின் நீதிநித்தியனே அரியோம் நமனே
அரகரசிவ குருபரா போற்றி அரியோம் நமனே
சோதிதத்துவ மானஉன்திருத் தாளேயேழை
துதித்திவ் வனத்தில் இதத்துடன் வாறேன்
மதித்துன்னருளே

தேவ : மஞ்சுமாமதி விஞ்சும்பாதமே – விரும்பியரும்பி
மருவுன்னுலயம் மனமதேலயம் மதித்துத்துதித்து
அஞ்சும் வனத்தென் அஞ்சுமடங்கியே அடுத்துன்னிடத்தே
ஆவலாய்வர மேவிடாய் தயை அடர்வனத்திலே

தானு : இந்தவனத்தின் விந்தைவியப்பதே - இழைத்தபொற்கதிர்
இணைமென் மலர்கள் அணையுங்காட்சியே இழைத்த பொற்
[கதிர்
கொந்தார் சண்பகம் கோங்கசோகுடன் அல்லிமுல்லையும்
கொன்றை செவ்வந்தி துன்னும் பூவந்தி மாட்சிநீட்சியே

தேவ : கானிறஞ்சிய கதிருடையாளே கருணைத்திருவே
காரதைப்பொருன் சீர்தயை கொண்டே கருதியுன்திரு
தேனிறஞ்சிய செம்பொற்பாதமே தேடியோடியே
தேங்கும்வனத்தே பாங்குடன் வாறேன் தேடியோடியே

தானு : புள்ளிமால்வரைபொருந்தவான் செறி பொருப்பேவிருப்பாய்
பிணைத்துவடத்தால் அணைத்து மேதாவி பொருந்த
வென்னரும்
வெள்ளி நீண்டுடர் துள்ளி வீழுயர் அருவிமருவி
விந்தை எந்தனின் சிந்தைகளிக்குதே விரைந்து செல்வேனே

## தேவதாசன் விருத்தம்

காரொருவு மேருவிந்தங் ககன கோளம்
கந்துபிள வுந்திடினும் கரமென் றுங்கும்
பாரநெடு தாரைபுன்னை பகர்தேக் கோடு
பற்றை செடி உற்றகொடி பகரார் வெற்றை

கோரவரி சோரநரி குறும்பார் பிற்றை
    தொள்ளுவனத் துள்ளவரி கொடிதாய்த் தாக்க
திரநடை யாருகளை யாகு சோகம்
    தேறிநிழ லாறிவழி யேகு வேனே.

வசனம் : பரிசுத்த தேவதாயே! உமது பதிவந்துசேர நினைத்தும், களையும் தாகமும் அதிகமாயிருப்பதால் இந்த மர நிழலில் சற்றுத் தங்கிச் செல்லுவேனாக.

தாருபதி வசனம் : ஆகா! இது என்ன அதிசயம், ஓர் அழகான வாலிபன் தனிமையில் இந்தக் கானகத்தில் எப்படிவந்தான்? சரி, நேரில் விவாரித்தறிவேன்.

## தாருபதி விருத்தம்

மின்னிலங்கு மென்மதுர வனச ரூப
    மேயிலங்கு செம்பவளத் தழகார் மேனி
பொன்னிலங்கு மலரங்கம் வியர்வை தூறி
    பொங்குவனத் திங்குதனித் திருக்கும் பாலா
மன்னிலங்கு முன்னுடைய ஊரும் பேரும்
    மற்றுநனி யுற்றகுல மகிமை தானும்
பின்னிலங்கு மென்னகரம் போவ தென்றும்
    பேதமின்றி யோதிடுமிப் போது தானே.

வசனம் : வாலிபனே! நீ யார்? எவ்வூர்? இந்த வனத்தில் தனிமையில்வந்த வரலாறு விபரமாகக் கூறுவாயாக.

## தேவதாசன் - ஆசிரிய விருத்தம்

ஊருடன் பேரே உரைத்திடு மென்ற -
    உயரிய குலமதி லுதித்த
உன்னரு மகுடஞ் சென்னியி லங்க -
    உருமணி மாலைகள் அணிந்த
வீரிய வரனே விளம்புவேன் கேளீர் -
    வேல்கர மணிந்திடு தரனே
வரைபெறென் நகரம் ஆனந்த புரியே -
    வளர்தேவ தாசனென் நாமம்

பாரிய வம்சம் பரம்பரை வணிகம் -
பதியெனும் காவலூர் தனக்கே
பரிவுட னன்னை மாமரி கோவில் -
பணிந்திட நேர்த்தியுங் கொண்டே
காரிய மாகக் கடுவனங் கடந்தே -
கலையது கொண்டுமே யிருந்தேன்
கண்ணிய மாயும் முரையது கேட்டே -
கருத்தினில் தெளிந்திடு வேனே

**வசனம் :** அன்பரே ! இதுதான் எனது வரலாறு. இனி, நீங்கள் யார் ? எவ்வூர் போகவேண்டி இவ்வழியாக வந்தீர்கள்? எல்லாம் விபரமாகச் சொல்லுவீர்களாக.

## தணுதிபதி - கலித்துறை

சங்கு தவழ்ந்திடு சார்வல ராம்புரி சாருகின்ற
தங்கு வரேந்திரன் தாணு பதியென் றெனையுரைப்பார்
சங்கை மதிசூரன் நாம மடைந்திட்டேன் சீனனிடம்
பொங்கு திறைபெற ஏகிடும்போ திங்குமைக் கண்டனனே

**வசனம் :** இதுதான் எனது வரலாறு. வாரும் தோழரே இருவரும் வழிநடப்போமாக.

## தேவ - தாணு - தரு (மெய்யற்ருவது எ. மெ.)

**இராகம் :** காம்போதி **தாளம் :** ஏகம்

**தேவ :** பரியே யுகழ்தர வரைதேர் ஊர்தோழா -
பாங்குறுவனம்
வரி கரி நிரையுறு - அரிஇரையது தரு
நிரையுறு விரைவழி தான்வருவேனே.

**தாணு :** மங்கா மதிநிறை துங்காவுரைகேளாய் -
மற்கடத்தொடு
மறமுறு குறுநரி உறுமுது குறுவிழி
சிறுகுறு நிறைவழி நான்வருவேனே.

தேவ : மெத்தும்மணிமுடி தத்துமென் தோழா
சாற்றுவேன் கேளும்
விரையுறு மருவியில் செறி தருதிரை பல
வரைமணி யொளியென வாவுதே தோழா

தானு : மதுரக்கனிமொழி அதரத்துறு தோழா -
வாட்டமா யொரு
மதகரியானது முதுகிடாதேதெரி -
சிதைவுடனேர்பரி முறுகுதே தோழா

பசாசு தோற்றம் சபை விருத்தம்

ஆதியம் பரன்சொல் மீறி யடங்கிடா தாண்மை கொண்ட
தீதுறு மசுத்த ஆஞ்சு திடமுறு தேவ தாசன்
கோதிலா மரிய தாயிற் கொண்டிடு மன்பை மாற்ற
வாதுடன் ரூபம் மாறி வழியினிற் தோற்றி னனே.

பசாசு - தரு (அந்தரவயி எ. மெ.)

இராகம் : மோகனம் தாளம் : ஏகம்

1. ஆதிபராபரனுருரை மீறி -
அடியழலுறு திறமறமுடைய
தீதினிலேயுர மேறிடு வீறெரு
திறமுறு தறுகணத் தலைவனும்நான்

2. அடருறு கொடியன் - இடருறுதுடியன்
ஆனகணங் களுக்கே கெடியன்
மடமொடுமானங் கெடநடவீனம்
திடமுட னேதரு சூரனல்லோ

3. மிடியுறுமோகம் படியுறுகோபம்
குண்டணி கோளது கொண்டுமேநாளும்
கடிதுறுசாபம் முறுகிய மோசம்
கொண்டு கெடுத்திடு மிண்டனல்லோ

4. நாட்டினில் ஒருவன் மேட்டிமையாய் மரி
நண்ணியே தண்டளிக்கேகிறனே
நாட்டிகமுடனே நாட்டமாய்ச் சென்று
சாற்றிடுமொழியா லேமாற்றிடுவேன்

மூவரும் - கொச் - தரு (தெரியு எ. மெ.)
பசாசு - கொச்சகம்

அரியும் வரியும் பரிநிரையும்
அடரும் கரியும் நிரைநிரையாய்
எரியும் மலேயும் குன்றுகளும்
எடுத்தே அடியும் வைக்கரிதாம்
வரியும் முள்ளுங் கல்லிடற
வினேயின் வசத்தால் நான் அலேந்து

தரு (நோக்கும் சமண்டலே விரை எ. மெ)
இராகம் : செஞ்சுருட்டி தாளம் ஏகம்

திரியும் வழிதனில் தானே உம்மைத்
தீர்க்கமாய்க் கண்டு கொண்டேனே
தெரியும் வழிதனேக் காட்டி அணேத்
தேகிடுவீர் எனேக் கூட்டி

தானு - கொச்சகம்

முன்னம் வழியே தெரியாது
மோதும் வனத்திலே யலேந்து
இன்னல் மிகவே யடைந்த னென்று
இசைத்தே வழியைக் காட்டிடச்சொல்
மன்னும் பெரிய வன்னியரே
மருவும் பேரு ரோடுமிப் போ

தரு

துன்னும் நகரெதுதானோ - அங்கு
செல்லுங் கருமம தேனோ

பின்னங் கெட உரைப் பீரே - அதைப்
பிரித்துமே அறிந்திட நீரே

பசாசு - கொச்சகம்

வெற்பே நிகர்த்த பொற்புயத்தாய்
வெவ்வேல் பொறுத்த நற்கரத்தாய்
துற்பே வெறுத்த என் நகரம்
தொல்லோர் சொல்லும் இல்புரமாம்
மூற்பேர் எனக்குச் சொற்றிடுவார்
முறையா யாத்ம வாமனென்றே

தரு

நற்பார் நெடிநகர் தானே ஏக
நாட்டமே கொண்டு விட்டேனே
சொற்பாரிது அறி வீரே முறை
செல்வழி காட்டிடு வீரே

தேவதாசன் கொச்சகம்

கல்லோலங்கள் கரை புரளக்
கவிந்தே செறியும் மகரலயத்
தில்லா புரமென் றோர்நகரை
இதுகால் வரையும் அறிந்திலமே
அல்லாமொழியை யிவன் யறைந்தான்
அதிலோர் ஐயந் தோன்றுகுதே

தரு

பொல்லானுரையது பொய்யே - எம்மை
பொருந்திட ஏய்க்கிறான் மெய்யே
நில்லாநடந்திடு வீரே - இந்த
நீசனை விட்டெம்வழி பாரே

### பசாசு கொச்சகம்

செஞ்சொல் மொழியார் சிலர்களே
செறியும் வனத்தில் அலறியுமை
தஞ்சமெனவே தான்வருடத்
தடுத்தே தனியாய் விடுத்தெனையே
கொஞ்சம் தயவுங் கொள்ளாது
கொடிதாய்ச் சினத்தல் முறையாமோ

### தரு

வஞ்சம்புரிந்திலன் நானே - இதை
வ"குடன் நம்பிடுவீர் தானே
கெஞ்சுமென்னை வழி கூட்டி இப்போ -
கேடில்லாப் புகழ்நிலை நாட்டி

### தாஞ - கொச்சகம்

வாகும் வளைந்த வரை மணியார்
வரித்த வணிகர் குலமணியே
ஆகும் வினைகள் அவன்பாலே
அஞ்சலெனவே கெஞ்சுகின்றான்
நாகும் படர்ந்த இடர் வனத்தில்
நடுவே தனியே விடல் முறையோ

### தரு

போகும் வழிமட்டுங் கூட்டி - அப்பால்
பொருந்த வழிதனைக் காட்டி
ஏகும் எம் வழிநேரே — இதற்
கிணங்கிடுவீர் மனம் நீரே

### தேவதாசன் கொச்சகம்

சொரி வெண்டரளச் சுடர் புரளச்
சுவர்ணத் தணிதிண் புயமுருள
வரிவண்டலம்பு குலம்புமுகை
வரத்தா ருரத்தே திறத்துறுகை
நெரிகொண் டொளிரும் நிதிபதியே
நிறையுன் முறையின் அறைமொழிக்கே

தரு

சரிகொண்டுளமதில் ஏற்றேன்-உந்தன்
சம்மதப்படி மனம் மாற்றேன்
விரிகொண்டடர் வனந் தாண்டி செல்வோம்
விறலுறுமெம்மனம் தூண்டி

**தேவதாசன் வசனம்:-** அன்பரே! அந்தரிக்கிற வழியில் இவனை விட்டுப் போவது முறையல்லவாதலால் உமது இஷ்டம்போல் அழைத்துச் செல்லுவோம் தோழனே.

மூவரும் தரு (ஆகமுமாய் எ. மெ.)

இராகம் : ஆனந்தபைரவி தாளம் : திரிபுடை

**தானு :** மன்னுமருப் பொடி நெடிநீட
மருவுமலைக் காவிடை நீளும்
மன்றலஞ்சேர் மருவிடுதருவே
மறைக்குதே விழி ஒளியே

**தேவ :** மின்னொளிரும் அழகெழுவதனே
மெய்யொளிசேர் துய்யனை நாளும்
இன்னிலத்தே ஏற்றிடு மவர்புகழ்
சொல்வோம் வருவீர்

**பசா :** நன்னயம் சேர் நறை முறையுறையும்
நலமுகையாய் நளிர்ந்தெழு பழன
இன்னலில்லா தில்பரன் பதமே
இனிதுட னேத்தினமே

**தானு :** பிறைமுடியான் பெருவருளொருவி
பேதமின்றி ஆதரை தனிலே
திறைதனையே சேர்த்து மேயரசன்
திறல்தனைக் கிளர்வேனே

**தேவ :** சென்னிசடை உடுமுடிசூடி
செங்கிரணம் திருவுரம் நீடி
பொன்னெனவே மின்னிடுமரியின்
பூம்பதம் போற்றி செய்தே

பசா : செய்வழியே தெரிமுறையுரைப்பேன்
தெய்வமதே செகமதிலில்லையே
உய்வதற்கோ ஊனுடை வழியே
உற்றிடு மொழியறியே

## தேவதாசன் கொச்சகம்

மின்னற் சுடர்போல் மிளிர்ந்தொளிரும்
மெருகே யருவி பெருகுமொளி
சொர்ணப் பசிதே சோபிதமாய்ச்
சொலிக்கும் நகரூர் காவலென்னும்
வன்னப் பதியில் வீற்றிருந்து
வரமே சொரியும் திருமரியின்
பொன்னப் பதத்தைப் போற்றிடவே
பொங்கும் மகிழ்வோ டேகுவனே

**வசனம் :** பரிசுத்த தேவதாயே! உமது இன்ப சந்நிதானம் தேடி வரும் அடியேனுக்கு ஒரு குறையும் இல்லாது காத்தருளும் அம்மா.

## பசாசு கொச்சகம்

மருப்பொலியும் மாலையணி மைந்தனேநான் செப்பிடக்கேள்
திருப்பதிசென் றால்உனக்கு சேர்ந்திடுமே துன்பமெல்லாம்
பொருப்புகளெல் லாம்தாண்டிப் பொங்குதளிக் கேகாமல்
விருப்புடனே யுன்மனைக்கு விரைந்திப்போ செல்வாயே.

**வசனம் :** அட மைந்தனே! தச்சன் சூசையின் மனையாளாகிய மரியாளின் கோவிலுக்குப் போகாதே. உனக்கு அங்கே அநேக தீங்குகள் சம்பவிக்கும். ஆகவே எனது புத்தியைக் கேட்டு உனது நகரம் போவாயாக.

## தேவதாசன் கொச்சகம்

வன்கணமெல்லாம் வருந்தி வலிநரகி லேவீழ
புன்கடிமி தித்தஅரும் பூரணியைப் போற்றிசெய்தேன்
உன்வழிக் கேயேக உணர்வறியா நீயுமிப்போ
என்வழியைக் காட்டுதற்கு எங்கிருந்து கற்ருயோ

வசனம் : அன்புள்ள அண்ணு! நீர் போவதற்கு வழி தெரியாமல் இருக்கும்போது எனக்கு எதற்காகப் புத்தி கூறவேண்டும்? நான் எனது வழியே போகிறேன். நீர் வந்த வழியே திரும்பிப்போவீராக.

## பசாசு சந்தத விருத்தம்

கண்டல மெண்டிசை யும்புகழ் கொண்டிடு
கண்டக னென்கலேயே
கண்ணனுந் தந்திமா வண்ணனுங் கார்முக
விண்ணனு மென்கலேயே
தண்டுடன் வானரச் சேனையை வென்றிடு
தசரத ராமனுடன்
தடமுறு மையனும் பன்னிரு கையனும்
தகைபெறு மென்கலேயே
திண்டனே இன்மொழி பலவழி சொல்லியும்
தீங்குடனே மறுத்தே
திகைதரு மரியுடை தகைபெறு மாலயம்
திரும்பிட எண்ணிடுகில்
கண்டவ னங்களு மாகமோர் ஏகமாய்க்
கப்பியே நான்மறைத்தே
கடகட மடமட தடதட வென்றுனைக்
கொன்றுமே தின்றிடுவேன்

பசாசு - தேவதாசன் (புத்தி எந்தனுக்கோத எ. மெ.)

இராகம் : மோகனம் தாளம் : ரூபகம்

பிசா : அத்தலத்துறு சித்த மூறியே
இத்தலத்துரை எத்துமாறியே
புத்தியெத்தலே பித்தமேறியே
தத்துவத்துடன் அத்துமீறியே
தண்டமிண்டது கொண்ட வண்டனே
துண்டகண்டமாய் இன்று உன்னுடல்
தறித்து வாயினில் கொறித்து மேஉயிர்
பிறித்துமே விடுவேனே.

தேவ : சென்னி துன்னிச் சிறந்தேயிரு
கன்னி சொன்னங் கறந்தேகெட
பொன்னி மின்னப் பொருந்தேதொடு
பின்னிவன்னப் பிறந்தாளடு
பொற்பிலங்கிடு கற்பலங்கிர்த
அற்புதப்பத முற்றெனக்கருள்
பொருந்துவன்புரி செறிந்து மிம்மிடி
திருந்திடாய் மரிதாயே

பிசா : கோளரிக் கெதிராய் நரிக்குரி
யாளெனக்கொரு தூளெனப்புரி
பாளுனக்கொரு நீளுனக்குரி
ஆளெனக்கொரு வாளுருக்கரு
தாக்கிடும்மதி நோக்கிடும்பதி
போக்கிடும் விதி சாக்கிடுங்கதி
ஆக்கியேயுனைத் தாக்கியே சுழல்
வீக்கியே யெறிவேனே

தேவ : கந்தமுந்துங் காவனந்தனில்
எந்தை விந்தைதைப் பூவனப்பணி
பந்தவிந்தப் பாவியான்கனி
வந்து சந்தந் தீவினைதவிர்

பட்டகட்டமுல் இட்டகட்டளை
கெட்டுமட்டுற திட்டமிட்டமாய்
பார்த்துமேயருள் ஈந்துமே துயர்
தீர்த்திடாய் மரிதாயே

பசாசு வசனம் : அடே மூடனே ! மாடாடுறையும் குடிலில் தங்க இடமின்றித் தன் மைந்தனையீன்றவளின் நாமத்தை இனி உச்சரிப்பாயானுல் உன்னுயிருக்குத் திங்கு சம்பவிக்கும் என அறிவாயாக.

## தேவதாசன் கொச்சகம்

ஆனைத்திரளோ டடர்பரியும்
அடர்ந்தே தொடர்ந்த பொருவரியும்
கானத் தொனிபோல் கறுவரியும்
கறுத்தே உறுத்துங் கானிடையே
ஊனக் களுது உறுத்தியென்னை
உலைத்தே குலைத்து உன்தளியில்
மானத்துடனே வரத்தடுக்கும்
மருளில் எனையாட் கொள்தாயே

வசனம் : அமலோற்பவமே ! அடைக்கல நாயகமே ! அத்துவான கானகத்தில் அடியேனை அலைக்கழிக்கும் கூளியின் கொடுமையில் நின்று என்னைக் காத்துரட்சியும் தேவதாயே.

## சகாயமாதா காட்சி - சபை விருத்தம்

உன்னரும் பொறையுஞ் சாந்தம் உயரிய தேவ நேசத்
தன்னரு தேவ தாசன் தான்படு மிடரைக் கண்டு
மன்னவர் குலத்துதித்த மாமரி காட்சி யாகப்
பன்னரும் மலையில் வந்து பரிவுடன் தோற்றி ஞளே

## தேவதாசன் பாட்டு (சுத்தனை நிதம் எ. மெ.

இராகம்: பூபாளம் தாளம்: ஆதி

1. பஞ்சவர்ணத் துஞ்சுமெழில்
கஞ்சமலர் செஞ்சரணே!
பஞ்சையா னுனைக் கெஞ்சினேன்—முகம்
பார்த்திட்டீர் துயர் தீர்த்திட்டீர்

2. மாசணுகா ரேசமலர்
தேசு நிறையும் மரியே
மாயமாம் மயல் வீயவே—மலை
தோற்றினாய் எனைத் தேற்றினாய்

3. பாவியென்மேல் அன்பு கொண்ட
பாதிமதி யாளேயின்றே
பந்தமே யகல் விந்தமே—அருள்
பாலியே செய சீலியே

4. மோட்சமதி லேயிருந்து
ஆச்சரிய மாக வந்து
காட்சியே தந்த மாட்சியே—இதை
மறந்திடேன் பதம் அயர்ந்திடேன்

## தேவதாசன் பரணி

ஈனனெனை ரட்சைசெய்ய வந்ததாயே
இடர்தவிர்த்தே இத்ததியில் எனையாட்கொண்ட
ஞானவரம் நிறைந்தொளிரும் நளினநோக்கு
நாளுமெனக் கேயிரங்கி நாட்டிடாயே

வசனம்: அம்மா தாயே! இந்த வன்னரகலகையின் மாய்கையில் நின்று எம்மைத் தற்காத்த புதுமையை நாமென்றும் மறவோம் மாதாவே.

## தாஞபதி - கலித்துறை

வன்மை யிலங்கிடு வர்த்தக னேஅருள் நத்தினனே
தன்மையி லேயிது சொர்ப்பனமோ அல்லால் தான்
[மருளோ
உண்மையி லேயுங்கள் தேவரின் மாட்சியு ரைக்கரிதே
நன்னய மாகவும் நன்மறை சொல்லுவீர் நம்பிடவே

தாஞ. வசனம் : தோழனே ! இப்போது இவ்விடத்தில் தோன்றிய சோதி சூரியர் போன்ற ஸ்திரீ யார் என்றும், அவள் எங்கிருந்து வந்து இந்த மாயப் பசாசிடமிருந்து எம்மைக் காப்பாற்றிஞள் என்றும் உமது சமய வரலாறும் விபரமாகக் கூறுவீராக.

## தேவதாசன் - கொச்சகம்

ஒன்றுமின்மை யாலுலகம் எப்பொருளேயும் படைத்து
துன்றும்சுட ரருவிதொல் மானுடராம் விலங்கோ(டு)
டன்றொருசொல் லாலமைத்த ஆரணனின் ஞானமறை
பொன்றுமெந்தன் புன்வாயால் புகலரிதென் றேதெளியே

தேவதாசன் வசனம் : தோழனே ! சுவர்க்க, மத்திய, பாதலமென்னும் மூன்று உலோகங்களேயும், அதில் அடங்கிய வஸ்துக்களாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களேயும், இன்னும் மானிடர், விலங்கு, ஊர்வன, பறப்பன, நீந்துவனவாகியவற்றையும், தாவரங்களேயும் ஒரு சொல்லால் ஆக்கவும் அழிக்கவும் கூடிய மகத்துவத்தை என்ஞல் சொல்ல முடியாது. இருந்தும் அறிந்தவரை சொல்லுகிறேன் கேளும் தோழனே.

இராகம் : செஞ்சுருட்டி — தாளம் : ரூபகம்

### தேவதாசன் - தரு (கற்புக் களஞ்சியமே எ. மெ.)

1. ஏகபரஞ்சுடரே ஒளிர்-
மாக நிறைபடரே—தேங்கும்
ஞானமேதிகழ் மோனமேயரும்
தீனமேபர ஏகனென்றுமே

2. பூவுஞ்சுடர் மதியோ டுயர்
மேவுமடர் நிதியே—வனே
மூலனூர் முதுகாலனூர் சிறு
பாலனாய் வினே தீர்க்க வந்தாரே

3. அடரும்வினே தொடுத்தே-எங்கள்
இடரின்முனே கெடுத்தே பிணே
கந்துமே கரனெந்துமே வலு
வந்தமா யுயிர் தந்துமீண்டாரே

4. புத்தி மனதறியாப் பரன்
சத்தி உளநிறைவாய் ஆரும்
கண்டிடார் துறை கொண்டிடார் முறை
விண்டிடாரெனக் கொண்டு தேர்வீரே

தேவதாசன் வசனம்: தோழனே! அனந்தாதி பராபரவஸ்துவாகிய சுதனாகிய சருவேசுரன் மானிடர் மீதிரங்கி வானுலகத்திலிருந்து பூவுலகின்கண் சென்ம மாசணுகாதவளும் எனக்குக் காட்சி கொடுத்தவளுமாகிய கன்னிமரியம்மாளின் வயிற்றில் ஜெனித்து பாலனாகப் பிறந்து, அரிய போதகங்களே மானிடர்க்குரைத்து, குருசில் மரித்து, மூன்றும் நாளில் உயிர்த்து, பசாசிடத்திலிருந்து எங்களே மீட்டு இரட்சித்தார். அவரே அளவில்லாத மெய்த்தேவன் என்பதை அறிவீர் தோழனே.

தாஞபதி - தரு (வாருகவந்தது எ. மெ.)

இராகம்: தன்னியாசி தாளம்: ரூபகம்

பல்லவி

முத்தகப்பட்டது போல்வயப்பட்டது
மோனவழி யெனக்கே நெஞ்சே, நெஞ்சே

சரணம்

1. முத்தகபட்டறை சத்தியமாமறை
முந்திடுபுன்றலே நொந்திடவீசுகோல்
பத்தைமறைவினில் நத்துமிரைக்கிரு
பந்த நரிக்கது வந்து பட்டாற்போல் (முத்)

2. ஆசைக்கொரு மக ஞர் உயிர் போய்விட
அந்கிய காலத்துக் கென்செய்வோ மென்றேங்கி
மைந்தன் கவலையால் சிந்தை வருந்தையில்
மாண்ட சடலத்து மீண்டுயிர்வந்ததாற் போல் (முத்)

3. அண்டமுயர்த்திடு குன்றமதில் நின்று
அந்தர மாகவே வந்து விழுந்துமே
ஆருயிர் போச்சென் றலறிவருகையில்
ஆங்கொரு கைவந்து தாங்கிப் பிடித்தாற் போல்
(முத்)

4. ஊன மலடென்று மானவரேசிட
உற்றவர் சுற்றவர் முற்றும் நகைத்திட
வாட்டமுற்றே மனக் காட்டமற்றேயேங்கும்
வந்தி தனக்கொரு மைந்த னுதித்தாற்போல் (முத்)

தானுதிபதி வசனம்: தோழனே! தாயைவிட்டு ஒரு காலமும் பிரிந்தறியாத குழந்தை அகஸ்மாத்தாய்த் தன் தாயைப் பிரிந்து அங்கலாய்த்து நிற்கும்போது அநேக சனக்கூட்டத்துள் தனது அன்னையைக் கண்டு ஓடிச் சென்று அரவணைப்பதைப் போன்று எனது மறைந்த கண்களுக்கு ஒளி கொடுத்த தேவனையும், அவரையீன்ற அன்னையையும் பின்பற்றுவேன் நண்பனே.

## தேவதாசன்—தானுதிபதி பாட்டு (அஞ்சு. எ. மெ.)

இராகம்: நாதநாமக்கிரிகை தாளம்: ஆதி

தேவ: தேங்கு புனல் காட்டிடையே நோக்கி-நல்ல
திருமரி நவமது குறையரிதே யதிப்
போதினிலே கைப்பலன் கண்டேனே.

தானு: ஊக்கு மனந் தூக்கு நிறைபோலே - என்னைத்
தேற்றியே நிறைமொழி சாற்றியே யுறுவழி
தெரித்ததயை கருத்தினில் மாறுதே.

தேவ: அன்னைமரி யாலயத்தில் வைகும் - அருங்
குருவிடமதிதிற மருவிடு கதியுற
ஆட்சியுறு தீட்சைதனைப் பெறவே

தானு : ஆதிசுத னைப்பயந்த தாயே - அவள்
அன்புறு மாலயம் இன்புடனேகியே
ஆகுலமெல் லாமகற்று வேனே.

தேவ : கொடு முடியின் தொடுசிகரம்பாரே - அந்தக்
கோபுரமானது தூபுரமோவென
கொண்டழகைக் கண்டு களிப் போமே.

தானு : முத்துமணி போலிலங்கும் வர்த்தி - எங்கும்
தளமுற ஒளிருது அழகொளி தவழுது
முற்றுமெழில் நற்றளிவந் தோமே.

தேவதாசன் வசனம் : தோழா ! இதோ அன்னை மரியாளின் ஆலயம். அவளுக்குச் செய்ய வேண்டிய பாதசேவைகளை முடித்துக் கொண்டு, குருவானவர் சமுகம் செல்லுவோம் அன்பனே.

தானுபதி வசனம் : உமது விருப்பம் போல் ஆகட்டும் அன்பனே.

## தேவதாசன் - பரணீ

பிரியபரி பூரணியே பிறை ஏர் தாயே
பெரிய பொருட் பேரருளைப் பிணைக்க வேண்டி
அரியமரித் தாயேயுன் அடியில் வந்தேன்
ஆதரித்துக் காப்பதுவுன் அடைவு தானே

## தானுபதி பரணி

ஈனலகை மயல்தனிலே இடரே பட்டேன்
இரக்கமுறுந் தாயேயுன் இணைத்தாள் தொட்டேன்
ஞானமறை கனவினிலும் நானே மாறேன்
நன்மொழியென் புன்வாயால் நவின்றிட்டேனே

## குரு தோற்றம்-சபை விருத்தம்

உன்னருந் தேவ நேசம் உயர்வுட னெழுகும் ஞானம்
பன்னருஞ் செபங்க ளோடு பலமதி யுரைக்குந் தீரன்
முன்னுறு மெவர்க்கு மீகை முழுமன துடனே நல்கும்
நன்குரு வேயரு ளப்ப நாதருஞ் சபைவந் தாரே.

## குரு பாட்டு (ஆதிநாதா எ. மெ.)

இராகம் : செஞ்சுருட்டி    தாளம் : ரூபகம்

1. முப்பொருளே கதியுறு நற்பொருளே-திருபர
முதல்வனே நேர் மரிதரு புதல்வனே நீர்

2. ஏகநாதா அருள் சொரி வேதபோதா – என்மேல்
இரங்கிடாயே திருவிழி பரிந்திடாயே.

3. பரவொளியே திருநிறை சுடரொளியே - முன்னோர்
பகர்மறையே மறையரும் பொருளுறையே

4. காத்திடாயே முகமது பார்த்திடாயே - உனதிரு
கழல் பணிந்தேன் எனதரு மனமகிழ்ந்தே.

தேவதாசன் வசனம் : குருவே தேவரீர் ! தங்கள் பாதார விந்தம் சரணம் சுவாமி.

## குரு இன்னிசை

பூத்தலரி கண்ட புஷ்பம் போல்வதனம் மாறுபட
வேர்த்து விடவிடத்து வேகநடை யாலுடலம்
ஆர்த்து நடைதளர்ந்து ஆயாச மாய்நீங்கள்
பேர்த்து வந்தசெய்தி தன்னைப்பிரிய மதாய்ச்
சொல்வீரே

குரு வசனம் : பிரியமான பிள்ளைகளே ! நீங்கள் இருபேரும் வெகு தொலை தேசத்திலிருந்து மிகுந்த களைப்புடன் என்னைக் காணும் படியாக வந்த கருமத்தை விபரமாகச் சொல்லுவீர்களாக.

## தேவதாசன் ஆசிரிய விருத்தம்

உரைத்திடு மென்ற உயர்நலக் குருவே
உறுநக ரானந்த புரியே
ஓதுவர் தேவ தாசனென் நாமம்
உயர்மரி கேர்விலுக் கேதான்

நிரைத்திடு நேர்த்தி நேர்மையாய்க் கொண்டு
நெடுவனங் கடந்திடும் போது
நிருபனும் வலாரி புராதிப தானு
நிறைபதி முகமதே கண்டேன்

நிரைந்திடு கானில் விரைந்திரு பேரும்
திடமுட னேவரும் போது
திறல்கடி செய்த தீங்கினில் நின்று
தேவதாய் எங்களைக் காத்தாள்

விரைந்திடு நவத்தை வேல்மதி கண்டு
வியப்புடன் கடிமயல் களைந்தே
விரிவுறு வேதம் வரைவுடன் சேர
விரும்பியே வந்தன மீண்டே.

தேவதாசன் வசனம் : குருவே ! தேவரீர், இவர் வலாரியபுரியின் தானு பதி. அரசர் கருமமாகப் போகும் வழியில் என்னைச் சந்திக்க நேர்ந்தது. சாக்கான் ஒருவன் குறுக்கிட்டு எம்மைக் கொல்லை செய்யும் சமயம் தேவதாய் காட்சிகொடுத்து எம்மைத் தேற்றி யருளினர். அந்த மகிழ்வுடன் உங்கள் முன்வந்தோம். இவ ருக்கு ஞானத்தீட்சை கொடுத்தருளுங் குருவே.

குரு வசனம் : தேவதாயின் காட்சி பெற்ற உத்தம தானுபதியே! நீர் தேவ சுதனுகிய யேசுக் கிறிஸ்துவை உலக இரட்சகர் என்று விசுவசிக்கிறீரா?

தானுபதி வசனம் : ஆம் விசுவசிக்கிறேன் குருவே.

குரு வசனம் : திருச்சபையிற் சேர்ந்து ஞானத்தீட்சை பெற ஆசைப் படுகிறீரா?

தானுபதி வசனம் : ஆம் குருவே, ஆசைப்படுகின்றேன்.

## குரு விருத்தம்

பேர்பிதாச் சுதனிஸ்பிரீத்து பெட்புறு நாமத்தாலே
ஆர்வமாய் ஞானஸ்நான அருளொளித் தீட்சையீந்தே
நேர்பெறு மரியதாசென் நிறைபெறு நாமமிட்டேன்
சீர்முறை தவறிடாது சிறப்புடன் வாழுவீரே.

குரு வசனம் : திரியேக சருவேஸ்பரனுடைய நாமத்தால் ஞானத் தீட்சையீந்து மரியதாசனென்னும் நாமமும் சூட்டினேன். தேவன் அருளிய பத்துக்கற்பனைகள் தவறாது நடந்து நித்திய மோட்ச பாக்கியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும் மகனே.

## மரியதாசன்-தேவதாசன் (மின்னங். எ. மெ.)

இராகம் : புன்னாகவராளி தாளம் : ஏகம்

மரி : பொறையு முத்தம நிறையு சத்திய
மறையு நத்தினனே - இனிப்
பொற் பெறிந்திடு அற்புதப்பர
நட்பகன்றிடனே

தேவ : மருவு சுந்தர திரு சவுந்தர
மரி பதந்துணேயே - அல்லால்
மாறிலா நிறை யீறிலா மறை
ஏறிலாதறியே

மரி : காந்தமுற்றுருக் கேந்து பற்றிடு
பாந்தமுற்றிடலே - போலச்
சாந்த தற்பர ஞான்றபொற்பத
நேர்ந்த பெற்றியிதே.

தேவ : எந்தை பந்தியிழிந்து நொந்தழல்
சிந்தை நைந்தெமையே - செய்யும்
தீங்கிலேகரந் தாங்கியே வரம்
பாங்கிலே புரியே.

மரி : விந்தை கேத்திர சொந்த நேத்திர
மந்த பாத்திரமே - ஒளி
வந்து சேர்ந்திடில் சிந்தை கூர்ந்திடும்
எந்தையோர் உளமே.

தேவ : அருப நித்திய பரனேதத்துவ
உரிய உத்தமனே - உம்மை
ஆற்றினர் மனந் தேற்றினர் பதம்
போற்றிடுவர் நிதமே

தேவதாசன் வசனம் : என்னுருயிர் அன்பனே ! நீர் எவ்வித சரீரத் தீங்குக்குமஞ்சாது சருவேஸ்பரனுக்கு உகந்தவராய்ச் சிவித்து வாரும். நான் எனது நகரம் சென்று வருகிறேன் தோழனே.

மரியதாசன் வசனம் : எண்ணற்கரிய நன்மைகள் புரிந்த என்னுருயிர் நண்ப ! வானஞ் சந்திரனைப் பிரிவது போல் உம்மைப் பிரிந்து செல்ல என் மனமஞ்சுகுதே. இருந்தும் எனது கடமையை உணர்ந்து விடைபெற்றுக்கொள்ளுகிறேன்.

## மரியதாசன் பாட்டு (விட்டுப். பிரி. மெ.)

இராகம் : மலையாமி — தாளம் : ரூபகம்

மட்டுக்கடங்காதே - மனமகிழ்
மட்டுக்கடங்காதே ... மனமகிழ்

1. மட்டுக்கடங்காது கட்டழல் செய்திடும்
மாறுற்ற வஞ்சகம் மாறுபட்டே கெட
கொட்டியே ஞானத்தைக் கிட்டி விளக்கியே
கோணறு பூரண மானது தானுமே. (மட்டு)

2. ஊறுபடுத்தி யுடலை வருத்திட
உற்ற மனத்தினர் சுற்ற முறைகெட
மாறுபடுத்திடு மண்டழல் வஞ்சத்தை
மாற்றியெனக்கருள் தேற்றிடு ஞானத்தை (மட்டு)

3. கண்டகன் தெய்வமென் றண்டி வணங்கிட
கொண்டகலை யென்று மண்டழல் சொன்னதால்
கண்டேனலகையின் பண்டுள வஞ்சகக்
கட்டதை வெட்டிய இட்டபரன்தயை. (மட்டு)

## தேவி - கொச்சகம்

அணிதிகழு மாதிபனின் அடர்பகுதி வாங்கவென்று
மணியொளிரும் மார்பகனே மதிபலவே போய்நிறைசேர்
கணிதமுறை தப்பாது காத்துவழி பார்த்திருந்தேன்
திணிபுயனே தேன்மதியே தேவியைவிட் டெங்கு சென்றீர்

தேவி வசனம் : பிராணபதி ! இத்தனைநாளும் என்னை விட்டு எங்கு சென்றிருந்தீர்கள் நாதா?

## மரியதாசன் - விருத்தம்

கண்டுமொழி கெண்டைவிழி கொண்ட மானே
கார்குழலே ஆரமுதே கரும்பே தேனே
மிண்டுதிறை கொண்டுவர வென்றே யேக
முற்றுமெனக் கன்பான தேவ தாசால்
பண்டுமறை மண்டுமழல் கொண்டே யேகும்
பழிவழியென் றிழிமறையின் பற்றே யற்று
அண்டர்பரன் விண்டமறை கொண்டே நானும்
அன்பொழுக உன்சமுக மடைந்திட் டேனே.

மரியதாசன் வசனம் : பிராணநாயகி ! நான் திறைப்பணமறவிடக் காட்டு மார்க்கமாக ஏகும்போது தேவதாசன் என்னும் ஒரு நண்பன் வழித்துணை வந்தான். அவனுடன் செல்லும்போது ஒரு பிசாசு எம்மைப் பயப்படுத்தும் சமயம் பரிசுத்த தேவதாய் தோன்றி அவனிடமிருந்து எம்மை மீட்டார். நாம் குருவான வர் சமுகம் சென்று ஞானத்தீட்சை பெற்று, அந்த மகிழ்ச்சியுடன் உன்னிடம் வந்தேன். நீயும் சத்திய மறையிற் சேருவீர் காதலியே

## தேவி-மரியதாசன் பாட்டு (மாகரு. எ. மெ.)

இராகம் : கீரவாணி தாளம் ; அடதாளசாப்பு

தேவி : நேசவுல்லாசனே மாரனே தீரனே
நேர்மதியே பதியே — இப்போதிலும்
பூரணமாமதி காரணம் போந்தது
புகன்றிடு மென்நேசா — இப்போதினில்

மரி : அத்தன் சபித்து அழல் தனில் வீழ்த்திய
ஆழ்கண மானதையே — இப்போதே
அண்டி வணங்கியே மண்டு மழல்தனில்
ஆழ்வது புத்தியோ சொல் — பெண்ணுளே

தேவி : முன்னோர் பரம்பரை முற்றுந் துதித்திடு
மோசமில் தேவர்களை — இப்போதே
முற்றுமழல் என்று சொற்றிடல் நீதியோ
மூதறி வாய்ந்துணர்ந் தோய் — என்நாதா

மரி : சின்ன வயசினில் தம்பலந் தின்றதால்
சேர்ந்ததையே தொடர்ந்து — தப்பாது
செய்திட வேணுமோ சேரிடந் தேடாமல்
செப்பிடுவாய் மயிலே — இப்போதே

தேவி : இன்னில மீதி லெனக்குயிர் ஆகிய
ஏந்தலே யென்தலைவா — மதிசெறி
உன்னருஞ் சொற்படி உண்மை மறைசேர
உவந்து நான் வந்திடுவேன் — என் நாதா

மரி ; மின்னி மறைந்திடு மண்ணினின் வாழ்வினை
மேவியே நற்கதியை — விட்டிட்டு
மன்னு மழலினில் துன்னு கணமொடு
மாள்வது புத்தியதோ — சொல் மானே.

## தேவி - இன்னிசை

மலரும் மணமெனவும் மதியுமொளி யேயெனவும்
குலவி மகிழ்ந்தேயிருந்த குணமதி கொள் காதலரே
இலகு மகிதனிலே யேந்திழைநின் சொற்படிக்கே
அலகில ராமாதிபரன் அருட்சமயம் சேர்வேனே.

தேவி வசனம் : தலைவரே! அடியாள் உமது சொல்லை மீற வல்லவள் அல்லவே, தங்கள் விருப்பம் போல் சத்தியமறையில் சேர ஒருமனதானேன் நாதா.

## மரியதாசன் - தேவி. பாட்டு (மஞ்சார்வாகன. எ. மெ.)

இராகம் : முகாரி தாளம் : அடதாளம்

மரி : மனதுக்கிசைந்த மங்கை திலகமே மானே கேளும்
சங்கைக்குருவின் பங்கயப்பதம்
தங்கிடாதேகித் துங்க ஞானமே
பங்கமின்றியே பரிந்துபெற்றுமே பாங்குடன் வர

தேவி : அருணனொளியின் கிரணகாந்தனே
— அன்பனேபாரும்
கந்த மலரின் சிந்தும் தேனினை
கொந்தலரளி சிந்தையே களி
அருந்தி விருந்தாய் ஆர்ப்புறுகுதே
— அன்பனே பாரும்

மரி : சங்கொலிதவழ் செங்கைமின்னாளே
— சரசமொழியே
பொங்குறும் வனம் தங்குறும் மிருகம்
எங்குமுரமாய்ச் சங்கமே யென
ஒலிக்கு மொலியின் ஓகையே பாரும்
— சுந்தராங்கியே

தேவி : ஆரமணிந்த அழகுபுயனே யென்
— அருமைத்திருவே
பொங்கு கயத்தைச் சிங்கம் மதத்து
அங்கந் தியங்கப் பங்கம் செய்யுதே
ஆவலாயதை மேவிப்பாருமே
— அன்பரேயதோ

மரி ; மின்னிடையாளே மேவலங்கிர்த
— மெல்லியேயிதோ
இங்கு மலையில் பொங்கி வழியும்
கங்கை நீரினை மங்கையே பாரும்
முதல்வனைத் துதித் தேகுவோம் வாரும்
— மொய்குழலாளே

தேவி ; வாலப்பருவ வசிய சுந்தரா - வன்னலங்கிர்த
வான்சுடரொளி தானிடுமெழில்
வான்மரிதளி தான் மருவினோம்
வாக்கு மனத்தென் போக்கென் புகலுவீர்
— புனிதனேயிப்போ

மரியதாசன் வசனம் : தேவியே ! அதோ குருவானவர் கோவிலிடமாக இருக்கிறார். வாரும் அவர் சமுகம் செல்லுவோம் காதலியே.

மரியதாசன் வசனம் : குருவே தேவரீர்! தங்கள் பாதார விந்தம் நமஸ்காரம் சுவாமி. இவள் எனது மனைவி. இவளையுங் கத்தோலிக்க மறையில் சேர்த்து ஞானத்திட்சை கொடுப்பீர்களாக.

குரு வசனம் : மிகுதியுஞ் சந்தோஷம். பிதாச் சுதன் இஸ்பிரீத்துச் சாந்துவெனும் திரி ஏக சருவேஸ்பரனுடைய நாமத்தால் உனக்கு ஞானத்திட்சையீந்து அருளம்மா என்னும் நாமஞ் சூட்டினேன். நற் சேமமே சென்றுவாருங்கள் மக்காள்.

## மரியதாசன் அருளம்மா பாட்டு (அந்தரிக்கிறுனே)

இராகம் : தோடி

தாளம் : ஆதி

மரி : அஞ்சுடர் அவித்து வந்த
அஞ்சனக் கழுது நலியாலே - எம்மை
அன்பு தயையே சொரிந்து
இன்பு பான்மதி சுடரால் மீட்டாள்

அரு : நஞ்சுல கொடு நசையாம்
மிஞ்சிடுமலகை மயல் நீத்தே — எனக்
கிஞ்சுக மொழி யுரைத்தே
செஞ்சுடர் ஒளி நிலவச் செய்தே.

மரி : சொந்த விழியந் தகர்க்கு
வந்த இரு விழியதனைப் போலே — நல்ல
முந்து சுடரோன் கருணை
தந்தெமக்கு ஞான விழியீந் தோய்

அரு : அதிஷ்டவசத் தாலெமக்கு
கிடைத்த பொற்குவியலது போலே - நல்ல
திடத்துறுஞ் சுருதிமறை
இடம்பெறவே வந்து விட்டோம் நாமும்.

மரி : இரும்புவி யிலே யெமக்கு
அரும்பிய மெய்ஞான விசுவாசம் — ஆரும்
விரும்பிடு விருட் சமென
விண் செறிய வோங்கிடவே வேண்டும்.

அரு : சோபிதச் சுடர் வதனே
சுந்தரஞ்சேர் என்தலைவா - கேளும்
அங்கே சோதி செறி எங்கள் மனை
வீதிதனில் வந்துவிட்டோம் நாமும்

## மரியதாசன் - கொச்சகம்

நாடும் நகரும் நன்மணியும்
நயந்தே உயர்ந்த பணதிகளும்
கூடும் பொருள்கள் எந்தனுக்கே
குவித்தே மதித்துக் கொடுத்திடினும்
கேடுந் தொடர்ந்து கெறுவமுற்று
கதியே யழிக்கு முத்யோகம்
ஆடும் புவியில் நீத்துவிட்டு
அரசன் கொடுத்த அணிகளைவேன்.

மரியதாசன் வசனம் : பெண்கள் நாயகமே! அரச பதவியும் புயபல பராக்கிரமங்களும் எல்லாம் அனர்த்தம் விளைவிப்பதோடு தேவனையும் பின்பற்ற முடியாது துன்புறுத்தும். ஆகவே இந்த ஆடைகளைக் களைந்து ஆண்டவனுக்குப் பணிசெய்வேன்.

அருளம்மா வசனம்:- எதுவுந் தங்கள் விருப்பம்போல் ஆகட்டும் காதலரே.

## இராசா விருத்தம்

முற்றுமொன்னர் கொற்ற சென்னி அற்று வீழ்த்தி
முந்துவலி சிந்துமெந்தன் முறைவாள் கொண்டு
சிற்றமுறு பெற்ற படைக் கற்பித் தாமே
சீனனிட மான திறைக் கென்றே சென்று

பற்றிவர வெற்றி யுறு மதிய சூரன்
பரிந்து இன்னும் விரைந்துவராப் பாங்கை நீரும்
நற்றமனை யுற்றுவள மேற்றசெய்தி
நாடிவிரைந் தோடி யென்முன் நவின்றி டீரே.

இராசா வசனம்:- சேனைத் தலைவரே! சினனிடந் திறைப்பணம் வாங்கி வரச்சென்ற தானாபதி இத்தனை காலமாகியும் திரும்ப என் சபா மண்டபம் வராதிருக்கும் காரணம் இன்னதெனச் சென்று அறிந்துவருவீராக.

சேனாபதி வசனம்:- அப்படியே செய்கிறேன் மன்னவரே.

## சேனாபதி பாட்டு (ஆனை புலிகள்)

இராகம் : மோகனம தாளம் : ரூபகம்

1. முத்தும் பவளக் கொத்து ஒத்தும் பசும்பொன்வைத்து
பொத்தும் முடியோன் சொற்றே சித்தந்தனிலேயுற்றே
மெத்தும் மதிய சூரன் நத்தும் மனைய துற்று
மேவும் மொழியறியத் தாவும் வழி செறிவேன்.

2. துங்கச்சுடர் முடியான் தங்கூற்றிடு திறைக்கே
துன்னுந் துவசசீனன் மன்னும் நகர்க்கே சென்று
அங்குற்றிடு பகையோர் தங்கட் கழிவு கொண்டு
பொங்குற் றவர்க்கே யேதும் பங்கம் விளைத்தனரோ.

3. வட்டப் பவளத் தூண்கள் நட்டுத் தமனியத்தால்
விட்டம் பிணைத்துத் தட்டும் கட்டுஞ் சுவர்ணத்தாலே
மட்டற்றவர் மனையில் கட்டுற்றிருக்கும் மதி
சூரனிடம் விரைந்தே ஆரமொழி தெரிவேன்.

## சேனாபதி ஆசிரிய விருத்தம்

நிறைமதி பெருகும் நிருபனின் தானா
நிதிபதி யேயுரை கேளும்
நிலைபெறு திறைக்கே மலைவுறச் சென்று
நிருபனுக் கோருரை புகலா

உறுமனை தனிலே யுற்றுநீ யிருத்தல்
உன்மத்த மோவிது வறியேன்
உற்றிடுன மனையில் மற்றதோர் சமய
உருவமா சின்னமு மேதோ

மறையது மாற்றிக் குறைபுரிந் தனையோ
மருவுமுன் னறிவது பிறழ்வோ
மண்டல மதிலே மறையவர் போற்றும்
மாயனைத் தானுமே வெறுத்து

முறைபெறு மரசன் நிறையுமுத் யோக
முழுநய மதனையும் விடுத்து
மூர்க்கர் போலிங்கு வீற்றிருப் பதனை
முற்றுநீ விளம்பிடு வாயே.

## மரியதாசன் ஆசிரிய விருத்தம்

விளம்புவேன் கேளீர் விட்டுணு செய்த
வேடிக்கை யாமது தன்னை
விளங்கிய ஏழு மனைவியர் இருந்தும்
வேடுவ மாதொடு மருவி

தளம்பிடாத் தாயைச் சகோதரி தன்னை
தாவிநின் மாந்ரமாய்ப் புணர்ந்து
தலமதி லத்தை தன்னையுங் கெடுத்து
தன்குரு மனையையுஞ் சேர்ந்து

வளம்பெறு மரமா யரக்கி கற்பழித்து
வாளிடைப் பெண்களைக் கெடுத்து
வழிகொள் மாதரை வலுவந்தம் செய்து
வரித்துமே வம்புகள் புரிந்து

களமுறு மடவா ராடைகள் களைந்து
கவிபுனை மரத்தமர்ந் திருந்தோன்
கருதிடு தேவனென் றுரைத்திடு முனக்கு
கப்பிய பித்தமோ வறியேன்.

## சேனு - மரியதா பாட்டு (பாலகனே

இராகம்: பைரவி தாளம் : ஆதி

சேனு : மாயனிலே பிழையோதிடு மூடனே
மாமரியாள் முறையே தவருய்
சேயெனவே தரு நாயக னேசொரு
சேர்பரனே மறையோர் சுதனே.

மரிய : திரிபுரத் தரக்கியை மருவிட நெருக்கியே
தேர்ந்துரை மாறிடப் பேர்ந்தவளே
திருவரை சென்றுயர் பொருதரு வொன்றியே
தீங்குற வணைந்தோ னீங்கரனே

சேனு : அறமதி மோசத் துறுசதி நீசத்
தடருறு தேவ துரோகியென
திறமுட னணத் துறவொரு தூணில்
திறமை யிழந்தவனுறு பரனுமோ.

மரிய : நாவரை பேசிடவே யுரைகூசும்
நரனது குறியுந் திருபரனே
மேவுரை பேசும் மாபெரும் மோச
மேன்முறையோரது சீர்முறையோ

சேனு : மழையொடு குளிரில் இழைபனி நளிரில்
மாடுறை குடிலில் கேடுறவே
பழையதோர் கந்தை வழியிலா துந்தை
பரனது நிந்தை பகராதே.

மரிய : அத்தையைப் புணரச் சித்தம துற்றுமே
அடத்தொடுகஞ்சனைக் கெடுத்தழித்த
மொத்துறு வஞ்சக னத்துறு நெஞ்சன்
முறையுறு தேவனென் றறைமுறையோ

சேனு : வளனது சிந்தைந் களமது நைந்தே
வாடியே வன்துயர் கூடிடவே
உளமது களவாய் இளமரியீன்ற
உரியவ னில்லா னருபரனே.

## மரியதாசன் ஆசிரிய விருத்தம்

சிவனது சரிதை செப்புவேன் கேளும்
செறிதரு தாருகா வனத்தில்
சேர்முனி பெண்கள் தன்னையே களவாய்
சேர்ந்திட லாலவர் சினந்தே

அவனுடை குறியு மற்றுமே வீழ
அரிவையர் சாபமே பெற்று
ஆண்டிபோ லுருவாய்ச் சாம்பலைப் பூசி
அடர்திரி சூலமும் கொண்டே

இவன் சுடுகாட்டின் பேய்களின் தலையாய்
இடுநடம் புரிந்துமே திரிந்து
ஈதுறு சரவணப் பொய்கையா மதிலே
இசிவுறு கிரீடையின் போது

தவனுறு கோபிகா பெண்கள் நிர்வாணம்
தனையுறச் சுக்கிலமே கழிய
தன்மனை காட்டித் தயவுட னெடென்ற
தழலெரி பவன்பர னாமோ.

சேனு-மரியதா. பாட்டு (சொல்லரி)

இராகம்: ஆனந்தபைரவி தாளம் : ரூபகம்

சேனு : தாலமதிலே பிரமன் தானருள் சதுர் மறையை
தானிழித்துரைத்தவதி தாறு மாறுள் ளோனே.

மரி : நல்லறிவு சொல்லுமறை உள்ளமுறை யானதுகேள்
நாடுமுங்கள் தேவர் பெண்கள் நாட்டமே
கொண்டாரே.

சேனு : நாட்டமுறு மேமரிய மார்த்தாளா மிருவர்மனை
நத்தியே திரிந்தவனும் நாடு பரனாமோ

மரி : உங்களரனே துரோணர் மங்கையை நிர்வாணமொடு
உண்ணசனத் தாமிலையில் ஊறுவிந்திட்டானே.

சேனு : வீதியெங்குமே திரிந்து வேதகலகம் புரிந்து
வேதனையுடன் மரித்தோன் வேண்டும் பரனுமோ

மரி : அத்திரி முனிவருடை பத்தினியாரின் மகிமை
முத்தொழிலுடைய தேவர் முன்னமறியாரோ

சேனு : பொருத்த முறையே விடுத்து விருத்த சேதனம் படைத்த
பொங்குமதி யங்கிழந்தோன் போந்தபரனுமோ

மரி : கோட்டு மசுரர்க்கொளித்து நீட்டுமமரோனிடத்து
கேட்டுதவி கொண்டவனின் கெட்டியறியாயோ.

சேனு : நத்திடும் யூதர்க் கொழித்து சுத்தி நகரே சுளித்து
நாற்றிசை யலைந்தவனும் போற்றிடுந் தேவாமோ

மரி : இறுங்குமுனி பத்தினியா ளோடுற அவன் சினந்து
இடுங்குறி யற்றிடச் சாபம் ஏற்ற சிவன் தேவோ.

## சேனுபதி விருத்தம்

வம்புகள் பேசி நாங்கள் வணங்கிடுந் தேவர் தம்மை
கும்பிட மறுத்து மெத்த குத்திர மொழிகள் சொன்னுய்
அம்புபோல் பறந்து சென்று அரசனுக் கறிவித் தேநான்
சிம்புகள் எழும்பிச் சென்னி சிதைவுறச் செய்விப்பேனே.

சேனுபதி வசனம் : என்னையும் எனது தேவரையும் இழிமொழிகள் கூறிய உன்னைப் பற்றி மன்னருக் கறியச் செய்து சின்னு பின்னம் செய்விக்கிறேன் பாரடா.

## மரியதாசன் விருத்தம்

காரிருளை யோரவரு கோர நெஞ்சான்
கருணைமங்கு பொருணனுக்குக் கள்ள மாக
நீருமொப்பச் சாடைசெப்ப நிருபன் சீறி
நித்திரமாய்க் கந்தரத்தை நெட்டி வீசி
கோரநரி தீருபசிக் கெறிந்திட் டாலும்
சொந்தநர குந்துகண முவந்து போற்றேன்
பேரருளே சாருமரி அளித்த தீரன்
பேசரிய யேசுபத மயரேன் நானே.

மரியதாசன் வசனம்: தளபதியே! உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது. புலி பசித்தாலும் புல்லுண்ணுது. அதேபோல உன் வெருட்டுக்கும் அரசன் மருட்டுக்கும் அஞ்சுபவன் இந்த மரிய தாசனல்லன். இனிமேல் அஞ்ஞான தேவர்தனை வணங்கப்போவதில்லை. உன்னால் செய்யக்கூடிய கருமத்தை செய்து முடிப்பாயாக.

சேனுபதி வசனம்: அப்படியா காரியம். சரி எதற்கும் அரசர் முன் போகிறேன். அப்போதுதான் உன்வாய் மதமடங்கும்.

## சேனுபதி ஆசிரிய விருத்தம்

கலைநில வுமிழு மொளிதவழ் வதனே
கருதலர் அடிதொழு தரனே
கருசெறி கடல்சூழ் கனபல முடைய
கணிதிகள் காவலா கேளும்
நிலைபெறு தானு பதிமதி சூரன்
நாடுமெம் தேவரைப் பழித்தே
நாம்தொழும் லிங்கம் நரனது குறியாம்
நாரியர் லீலையே மறையாம்
சிலைதனில் தேவர் நிலைபெற விலையாம்
சிற்பரன் நரகுறை கணமாம்
சார்தலை விதியுஞ் சணக்கண வுரையாம்
சதிகணப் பேயதே மறையாம்

நிலைபெறு சத்ய மறையதில் சேர்ந்தே
நேர்மரி தாசனும் நாமம்
நிலவியே பெற்றுன் அணிகளைக் களைந்து
நிலைபெற் றிருக்கிறு னரசே.

## இராசா கழில்நெடில் ஆசிரிய விருத்தம்

மகுடமொடு வடகமுடி யடியிடறிப் பாறியே
மடமட வென்றுடி விடினும்
மாறிவரு மூளிதோ ருழிவரை யேறியே
மருப்பது பொடிப் பொடியினும்
சகடமது பொருகடக நிகடுமுக டாடியே
சந்துசந் தாகி விடினும்
சண்டலடு கொண்டலொடு நின்றுகச் சான்தூறி
சாடி யுலகாடி விடினும்
மகுடமட திடவிகட வருமகட மூற்றுமே
மூறுவிரு தேறு மரசர்
முதிர்கிரண விதிர்மணிகள் சதுர்கோடி யாகவே
முறைமுறை புரந்து போவர்
திகடகிரி உகடவரு திடமிகட நாட்டினில்
திருமறை யொருவி டாத
திண்டனன் இண்டுவிடல் கொண்டுமுடல் தன்னையே
தின்னநரி முன்ன ரெறிவேன்.

## இராசா சிந்து

இராகம்: மோகனம் தாளம்; ஆதி

இப்படி மனந்துணிந்தானே — மதிசூரனுனவன்
இப்படி மனந்துணிந்தானே

1. இப்படி மனந்துணிந்த தப்பிலி தனைப்பிடித்து
கப்பிய கால்கரங்களில் ஒப்பிய விலங்குமாட்டி
சக்கை சக்கையாய்த்திரித்து திக்குகளெல்லாம் அதிர
திக்கிமுக்கி நெக்கிடவே இக்கணத்தடிப்பிப்பேனே
—இப்படி

2. கங்கையணி சங்கரனைத் துங்கமுடி தங்கிரண
பொங்கரசரிங்கு வந்து சங்கையுட னேபணிய
கண்டு கொண்டிருந்தானே, எனது சொல்லை
கொண்டுமே திரிந்தானே இந்நாடெங்கும்
பண்டுபரவணி தொட்டு கண்டமுழுதுங் கும்பிட்டு
தெண்ட அரிச்சனை போட்டுகொண்டசிவன் தன்னை
விட்டு—இப்படி

3. வங்க மதங்கந்தெலுங்கம் கொங்கமெங்குந் தங்குபுகழ்
சங்கு முழங்குங் குலிங்கம் சிங்களங் கலிங்கமுறு
வேந்தரு மெந்தனையே துதித் திறஞ்சும்
பாந்தரு மந்தனையே மறுத்துரைத்த
கெட்ட புத்தியுற்றுமேதான் பட்டணத்தில் இட்டமுடன்
கிட்ட இருந்தட்டி செய்த துட்டனை நான்
வெட்டிடுவேன் — இப்படி

4. துங்கமதி யென்றுகந்து சங்கமதி லேயிருந்து
பொங்குறு மறை புகுந்து பாங்கர செனைமறந்த
துடிய்னை விடுவேனோ-படியிலவன்
முடிதனை யரியேனோ பார் பார் இனி
கண்ட கங்கைக் கொண்டுதலை துண்டு துண்டதாய்ச்
—சிதற
அண்டரக மேயுதறக் கண்டவர் மனம்பதற—இப்படி

## இராசா சந்தத விருத்தம்

சங்கொலி தங்கி விளங்கு மலங்கிர்த
தத்துவ மந்திரியே
சத்த சமுத்திர மொத்த பூவொத்துறு
தடவரை யடையலரே
கங்குறு முத்த மிழைத்த விசித்திர
கதிருற் றிடுமுடிநீள்
கத்த மகத்துவ முற்றிடு தத்துவ
கவினு ருறுகொலுமுன்

துங்க வனப்புறு பொங்கு மணித்திறை
துய்த்தடி நத்திடவே
துண்ட மணித்தவி சண்டி மணித்திறு
துட்டனே இட்டுடனே
கங்க மதுற்றுமே அங்கம துண்ணுடல்
கண்டமா துண்டமதாய்
கழுகிரை யெறிகுவன் விரைவுறு மழுவரை
கடிதினிற் சபைஅழையே.

இராசா வசனம்: அமைச்சே! அதிவீரதீர பராக்கிரம சேவகர் இருவரை இங்கு வரும்படி தெரிவிப்பீராக.

மந்திரி வசனம்: அப்படியே செய்கிறேன் இராசனே.

## சேவகர் தோற்றம்

கங்கொளி தங்கு வாளும் கடுவிலங் குடனே மெய்யில்
பங்கமா யடிக்குங் கோலும் பாசமு மெடுத்துக் கொண்டு
சங்கைசேர் வலார் புரியின் தகைமைசேர் வரேந்ர மன்னர்
பொங்குறு மழுவர் தாமும் புகழ்சபை தோற்றி னரே.

## சேவகர் பாட்டு (எல்லவரும்...)

இராகம் : பூரிகல்யாணி தாளம் : அடதாளம்

1. சுத்த நத்தும் முத்து ரெத்ன மேநிறைந்திடும்-முடிச்
சுந்தரஞ்சேர் இந்த நகரம் புரந்திடும்

2. விந்தை யுற்றிடு மந்திரப் புயனும் வரேந்திரன் இப்போ
விட்டழைத்திடு கட்டளைதனைக் கிட்டியேயறிவோம்

3. வெற்றி பெற்றிடு கொற்ற வீரவர் முற்றுமென்பாலே
—இல்லை
வேற்று மாற்றவர் சீற்றமுற்றிடில் ஒட்டமென்போலே

4. மேக மண்டலமே முழங்கிடக் கோபங்கொண்டுடனே
—நானும்
மாடி மண்டபம் ஓடி நின்றுமே வாடினேனுடலம்.

5. அரசனின் சுபமாதினத்திலே யாறுபடியே —சாதம்
அள்ளிவிட்டேன் கொள்ளுமட்டு மேறுபடியே

6. தற்பணத்திலே உற்றொருவனும் மூற்றுமென் போலே
—தோற்றத்
தாவியே புறம் போயினேன் மறைந்தானே மின்போலே

## சேவகர் விருத்தம்

அடர்மணிக் கொலுவில் நீடி அசைந்திடாச் செங்கோ லோச்சும்
சுடர்மணி கொளிக்கும் நாட்டின் சுந்தரா போற்றி போற்றி
படர்பெறு பருதிமங்கும் பங்கயப் பதத்தின் முன்னே
விடைதர அழைத்த செய்தி விளம்புவீர் விரைவதாயே.

சேவகர் வசனம்: இராசாதி இராச பெருமானே! அடியோருக்கு ஏது பணிவிடையெனத் திருவாய் மலர்ந்தருளுவீராக.

## இராசா விருத்தம்

நடங்கொண்ட எங்கள் தேவை நம்பிடா திகழ்ந்துரைத்த
மிடங்கொண்ட மதியசூரன் மேட்டிமை யடக்கி வாளால்
குடல்தனைப் பிறித்து வீழ்த்திக் குருகுணக் கொடுக்க இப்போ
திடம்மிகும் அவனை என்முன் சீக்கர மழைத்திடீரே.

இராசா வசனம்: வீரகொலைச் சேவகரே! எங்கள் தேவர்களை இகழ்ந்து பரிகாசமும் செய்த மதிசூரனென்னும் தானுபதியை என்முன் அதிசீக்கரம் அழைத்து வருவீர்களாக,

## சேவகர் தரு (வணங்கிலர் எ. மெ.)

இராகம் : அமிர்த கல்யாணி தாளம் :ஏகம்

1. மைத்துனர் மிகுந்த - அரசிறை - உத்தரம் - வகுத்த
மொழிக்கே - மேவிடு தானு பதிமனையேகிடுவோமே

2. நயமுறுவயத்தான் - மந்திர - புயமுறு செயத்தான்
நவிலுறு - நன்மொழி யெடுப்பேன் விரைவிலே
முன்வழி நடப்பேன்

3. அண்டமுமதிர - எங்கும் - விண்டுமியுதிர எகிறி
அம்பரம் மேலே - சுழல்வேன் பம்பரம் போலே

4. கட்டளை மறுத்த - அடலுறு - துட்டனையுறுத்த
திறமுறக் - கப்பிடுவேனே நிறைசபை ஒப்பிடுவேனே

5. நத்திடுமூரில் - பொருதிடு - சுத்தமாப் போரில்
எதிர்வரில் - குத்துவேனீரல் கெடிபடத் தத்துவவீரர்

6. கடல் மடை பிறிப்பேன்-சோதிச்-சுடர்மதி மறிப்பேன்
—பெரிதுறு
மந்திரக்குறிப்பாய் - அங்கைக் குத்திஞல் முறிப்பேன்.

## சேவகர் - விருத்தம்

பொங்குறு மரவஞ்சூடும் புரந்தரன் தன்னை நீயும்
சங்கைய தின்றி யீனஞ் சாற்றிடு மொழியைக் கேட்டு
அங்கணங் கோப முற்று அடர்அரி போலே சீறி
தங்கிடாதழைத்துக் கொண்டு சடுதியில் வரச்சொன்ஞரே.

சேவகர் வசனம்: தாஞபதியே! நீர் எங்கள் குலதெய்வத்தைப் பழித்தீர் என்று மன்னர் மன்னன் கோபமுற்று உம்மை அழைத்து வரச்சொன்ஞர், வருவீராக.

## மரியதாசன் இன்னிசை

என்ஞளும் என்னுடனே யின்பமொழி யேபேசும்
நன்னயஞ்சேர் சேவகரே நயந்துநொடி யிங்கிருங்காள்
இன்மனையாள் தன்னுடனே இசைந்தோர் மொழிபுகன்று
பின்னமின்றி யுங்களுடன் பெட்பாக நான்வருவேன்.

மரியதாசன் வசனம்: என்றும் எனக்கன்பான சேவுகரே! எனது தேவியிடம் ஒரு வார்தை கூறிவருமளவும் வெளிமாடத்தில் வீற்றிருப்பீர்களாக.

சேவகர் வசனம்: அப்படியே ஆகட்டும், சீக்கரமாக வந்து விடுங்கள்.

மரியதாசன்-அருளம்மா பாட்டு(என்மகனே பொன்மகனே)

இராகம் : கரகரப்பிரியை                                    தாளம் : சாபு

மரிய : வலாரிபுரி தனையாளும் உக்ர
வரேந்திரவர்மனென்னை
அலரி மறை வாகுமுன்னம் வரவழைத்தார்
நான் போய்வாறேன்

அரு : வண்டணுகும் மாலையணி எந்தன்
வன்னமணிப்புயனே
மிண்டனுக்கு வாசலுறை கொலைச்
சேவகர் வந்ததென்னே

மரி : கஞ்ச மலர்ச் செஞ்செழிலே - எந்தன்
கார் குழலேயரசன்
வஞ்சமுடன் வெஞ்சினமாய் மழு
வரையனுப்பினனே

அரு : திண்புயனே இன்வசனே யெந்தன்
தேர்மதியே துரையே
பண்புடைய வன்திறலான் அந்தப்
பார்த்திபர்க்கேது செய்தோம்.

மரி : மன்பதைக்கவதைபுரியும் பொல்லா
னென்பதை யேயறியும்
வன்பகையாய் முன்பழைக்கும் விந்தை
ஏதெனவேயறியேன்

அரு : உண்ணீர் தவிர்த்துடல் ஒறுத்து உந்தன்
உருவந்தனை நினைந்தே
கண்ணீருடன் காதலியாள் வழி
காத்தே யிருந்திடுவேன்.

## மரியதாசன் இன்னிசை

வட்டமணிக் கொலுவில் வாத்தியங்களே முழங்க
இட்டமுட னாட்சிசெய்யும் இறைவனிடம் போய்வாறேன்
கட்டடங்கான் தன்னைநம்பிக் கனதுயரம் கொள்ளாமல்
அட்டமணி யாலொளிரும் அழகுமனை வீற்றிருமே

மரியதாசன் வசனம்: என்னாருயிர்க் காதலியே! யான் அரசர் சமுகம் சென்று அதிசீக்கரமாகத் திரும்பிவருவேன். அதுவரைக்கும் பாங்கியருடன் சந்தோஷமாக வீற்றிருந்தேவியே.

அருளம்மா வசனம்: அப்படியே எம் பெருமான் யேசுவினருளால் நற்சேமமே சென்று வாருங்கள் நாதா.

சேவகர் வசனம்: சீக்கரமாக வாரும் தாஞபதியே, அரசர் கோபங் கொள்ளப்போகிறார்.

## மரியதாசன் பாட்டு (வானபூலோக நாதா...)

இராகம் : ஆனந்தபைரவி தாளம் : ஆதி

1. கத்தனே யாதிபரி சுத்தனே யெம்மையாளும்
நித்தனே யேழையென்மேல் சித்தமே வைத்திரங்கும்
நீங்கிடாதிருவிழி தேங்கிய கருணையால்
பாங்குடனே யெனைக் காத்தருள்வீரே.

2: மோனமே யொளிபெறு ஞானமே திகழ் நிறை
தீனனே யெங்கும் நிறை வானேனே யருள்சொரி
ஈனன்நான் செய்பிழையான தகற்றியே
தானெனையாட்கொள்ளத் தருணமீதாமே.

3. ஞாயமே ஐந்துபர காயமே நினைந்தென்மேல்
நேயமே கொண்டு அநியாயமே செய்யிறைவன்
தீங்கினிலேயருள் தாங்கியே காத்திடும்
பாங்குறுமருமலர்ப் பாதமே நம்பினேன்-

4. கல்லதே சொல்லிதய வல்லதே வெல்லரசன்
புல்லிடக் கோல் மழுவர் எல்லிலேயிழுக்கிறுர்
சொல்லொடு பொருளென நல்ல உன் துணை தந்து
வல்லகுருபரனே வரிந்தெனைக்காரே.

## மரியதாசன் ஆசிரிய விருத்தம்

கூனது வளையில் சங்கினந் தவழுங்
குருமணி கொளித்தருள் நாட்டை
குடையொரு தனிலே கெடிபுரந் தருளும்
கொற்றமா மகிபர்கள் கோவே
வானது தாரைக் கணமது நடுவே
வரைசுடர்ப் பகலவ னெனவே
வாரணி பொருநற் கோரணி யாக
வழங்கிடு கொடையுறு கரனே
கானது சுதிகள் மேனல ரிசைக்க
கருதலர் நவமணி குவிக்க
கணிகையர் பரத நடனமே விரவ
கதிர்மணிக் கொலுவமர் அரசே
ஏனது கொடிய தூதுவர் விடுத்து
ஏற்றஉன் சமுகமே விரைந்து
இட்டெனை யழைத்த கட்டளை வழுத்தும்
இறையவர்க் கேறெனு மிறையே.

## இராசா ஆசிரிய விருத்தம்

இறையவ னென்றே யிறைஞ்சிடு மெனது
எழில்மதி சூரனே கேளாய்
ஏற்றதோர் திறைக்கு இணங்கியா னனுப்ப
இசைந்துமே சென்றிது காலும்
முறையுட னெனக்கோர் மொழிபுக லாது
முற்றுமே மறந்தனை யேனே
மூதறி வுணர்ந்த தீதறு வரனே
முனைந்துமே புராந்தர னகும்

மறைமுத லோனே மாற்றியே வேறு
மறைதனில் புகுந்துமே மெத்த
மட்டிலா வசைகள் கொட்டியே யெமது
மாயனைப் பழித்தனே யென்றும்
நிறைபெறென் சமுகம் உரைத்தன ரிதனே
நிட்சய மோவென விரைந்தே
நின்னுடல் தனேயே முன்னேயே பேணி
நிசமொழி யுரைத்திடு வாயே.

## மரியதாசன் ஆசிரிய விருத்தம்

மணிமுடி புனேந்த மண்டலா திபனே
மாமதி யொளிருறு வதனே
மருவலர்க் கேறே பெருகுநின் சமுகம்
மனமுவந் துரைத்திடக் கேளும்
அணிபெறு ஞானச் செபங்களேப் படித்தேன்
அழலுறு குணுங்கெலாம் வெறுத்தேன்
அருளுறு ஞானத் தீட்சையும் பெற்றேன்
ஆதியாங் கடவுளே யறிந்தேன்
கணிபெறு குருவால் மரியதா சென்று
காரண நாமமும் பெற்றேன்
கர்ரிரு ளடர்ந்து நேர்முறை பிறழ்ந்து
கதிதனே யிழந்துமே கொடிய
பிணியுறும் பஞ்ச பாதக மைந்தும்
பிரபல்ய மாகவே புரிந்த
பிளவுறு நரகாள் புன்கண மாவி
பிரியினும் போற்றிடேன் மன்ன.

## இராசா கழில்நெடில் ஆசிரிய விருத்தம்

வடவநெடு அடிமுடியும் முடியடிய தாகவே
வரைமுறை தவறி விடினும்
வருகரட கரியினெடு பொருகிரிகள் மோதியே
வானிறைந் தூளி படினும்

நடவநட சோதியும் இடமுகடு மாறியே
நள்ளிருள் அள்ளி வரினும்
நற்பொருவு மிந்துமீன் விண்புவியிற் சிந்தியே
நாடுமிகக் கேடு படினும்
திடவநெடு படிநடிய முடியுடைய சேடனும்
திடனழிந் துடல் சிதையினும்
திரைசெறியு நிரையாழி வரையேறி மீறியே
சிந்து நகரந்த முறினும்
அடவுடைய வரேந்ரனென் ஆணையைக் கேட்டிடில்
அட்டதிக் கெட்டு மசையும்
அலையேறு வரைபூவில் உரைமீறு தலைவேருய்
அரிந்தரிந் தெறிகுவேனே.

## இராசா - மரியதாசன் பாட்டு (ஆளிப் )

இராகம்: பைரவி தாளம்: ஆதி

இரா: கோனென்றே யெனதுறு மொழிதனைத்
தானின்றே மறுமுழு மூடனே
நானின்றே உனதுர மறுகிட
நாணுற்றரி வேனே

மரி: சத்திய மறை தனிலேயுள
நித்திய இறைதனையே தொழு
முத்தியே யடைவதி னுளுள
மோசமென்றே தானே-

இரா: பொங்கரன் புகழுறு மறைதனை
பங்கமே புரிமற முறுமுனை
அங்கமே அலறி விழுந்திட
ஆக்கினை செய்வேனே

மரிய: மங்கையர் மயலுறு மாய்கையைச்
சங்கையாய்த் தொழுதிடில் இலகொளி
துங்கனும் யேசு பரர்க்கது
துரோகமென்றே தேரும்

இரா : பேருறும் அரசனு மெனதுரை
மீறியே பெருமொழி தூறிய
வாதுறு மூனதுடை கெறுவது
வாட்டிஉடல் கொய்வேன்

மரிய : நீள் கொண்ட கரமது பொருவுறு
வாள் கொண்டே சிரமதை யரியினும்
பாழ் கொண்ட நரக கணங்களைப்
பரிந்து யான் போற்றேனே.

இரா: எங்குற்ற எழிலுறு மரசரும்
சங்குற்ற தளியது தொழுதிட
தீங்குற்ற மொழியுரை நாவதைத்
துண்டித்திடு வேனே

மரி: மின்னெனும் வாழ்வது நத்கியே
வன்னரக காழ்வது புத்தியோ
புன்மனப் பேயதைச் சித்தமாய்
போற்றிடேனோர் நாளும்

## இராசா சந்த விருத்தம்

தத்துவ மெத்திய வித்தக ஞெத்துறு
தகைபெறு மழுவர்களே
தடவரை புவனத் திடமுட னெவரும்
தருவுரை வெருவிடவே
மெத்த மகத்துவ முற்றதோ பித்தமோ
மேவுல குக்கழிவோ
மேரெனு விந்தர மானது சிந்தூர
மேதுக ளாயினதோ
அத்தனை தத்துவ முற்றதோ கற்றதோ
ஆதிய னென்முனிலே
அடருற் றிடுமொழி திடமுற் றிடுமதி
ஆகிய சூரனேயே

நத்தள தத்த மிதத்த பதத்தரு
நட்டணை யிட்டுறவே
நலிவுறு மறமுறு சிறைதனி லிறுதிற
நனிமுறை காப்பீரே.

இராசா வசனம்: வீரகொலைச் சேவகரே! எனது ஆணையை மறுத்தது மன்றி எமது தேவரையும் நிந்தனை கூறிய இவனைச் சிறைக் கூடத்துள் அடைத்து வைப்பீர்களாக.

சேவகர் வசனம்: அப்படியே செய்கிறோம் மன்னவரே. நடவும் மதி சூரனே சிறைக்கூடம் போவதற்கு.

## மரியதாசன் இன்னிசை

வாரியொழு குமுதிரம் வடிவமதி லேயிமிழ
வாரியிடு நீள்சடைமேல் வற்புறுத்து முள்முடியும்
வாரிமலை மேடதன்மேல் வானமிடை தொங்கினதும்
வாரிதனைக் காட்டுதற்கே வரையடங்காத் தண்கடலே.

## மரியதாசன் பாட்டு (அண்ணன் மனைவிதன்னை)

இராகம் : ஆனந்தபைரவி — தாளம் : ஆதி

துள்ளுங் கதையாற் துட்ட ருள்ளும் யூதர்கள் கொட்ட
அள்ளும் வதையே பட்ட உள்ளங் கொண்டெனைக் குட்ட
ஆதித்திரு வேதத்தரு நீதிக்குரு வேதற்பர
பிடித்து எனைவதைப் படுத்தி யாக்கினைப்
படுத்திறார் அருள்நாதா

## சேவகர் பாட்டு (வாரும் )

இராகம் : கலியாணி — தாளம் : அட

1. எட்டி நடந்திடு மூடமே - உனக்
கேற்ற இடஞ் சிறைக் கூடமே
நட்டணை செய்திட்ட பாடமே - உந்தன்
நாமொழி யேடா கூடமே

## மரியதாசன் பாட்டு

2. நெஞ்சிலிரக்கமற்றே வெஞ்சினமாகவுற்றே
வஞ்சமனத்தான் சொற்றே மிஞ்சும் சேவுகர்பற்றே
நிறையுற்றிடு முறைபற்றிடு கறையுற்றிடு இறைசொற்றிடு
வாட்டியெனைச் சிறைக் கூட்டுக்கிழுக்கிறுர்
நீட்டு கருணையே நாதா.

## சேவகர் பாட்டு

3. கன்றிக் கரைந்து கதறுருய் - ஒரு
காரணமின்றிப் பதறுருய்
வென்றி மொழியேன் விதறுருய் - இப்போ
வேடிக்கையாக அலறுருய்

## மரியதாசன் பாட்டு

குற்ற மற்றிடு மென்னை கொற்ற சேவகர் முன்னை
உற்றே மறிப்பில் புன்மை வெற்றே யதிக சன்னை
புரிந்தேயுள மெரிந்தேயழல் சொரிந்தேயழ விரைந்தேகள
மதத்த மழுவர்கள் சிதைத்துமேயெனை
வருத்தியிழுக்கிறுர் நாதா

## சேவகர் கவி

புரவலர் பணிந்து போற்றும் பூபதி மொழியை மீறி
திரிபுர மெரித்த மூர்த்தி தீந்தளி யிகழ்ந்திட் டோனை
நெரிவுறு தளைகள் பூட்டி நெடும்பெரும் விலங்கு மாட்டி
திரமுறு சிறைக் கூடத்துள் சீக்கர மடைத்திட் டோமோ

சேவகர் வசனம்: மதிசூரனே! எமது மன்னர் உத்தரவுபோல உன்னைச் சிறைக் கூடத்துள் அடைத்தோம். உன் தேவனை வேண்டுவாயாக.

## மரியதாசன் கொச்சகம்

இட்டமுடனே யெமக்காய் ஏற்றவடி வானதிலே
பட்டடியாலே யுதிரம் பாய்ந்தொழுகச் சோர்ந்தயர்ந்தே
நட்டணை யெல்லாம் பொறுத்தீர் நாயேனை மீட்பதற்கே
இட்டசிறை யானதிலே யிரங்கியருள் தந்திடுவீர்.

## மரியதாசன் பாட்டு (எந்தன் மதி)

இராகம் : நீலாம்புரி தாளம் : திரிபுடை

ஆதிய கிலப்பொருளே - இந்த - அடரதனிலெனக்கருளே
வாதரசனின் மருளே சுற்று வஞ்சக மனத்தருளே
பான்மதிச் சுடரொளியே சூடும் - பங்கயப் பதமணியே
கோன்குலத்துதிக்கனியே - அருள் கூருமெந்தன் நன்மணியே
ஆறுலெட்சணமுள்ளோனே ஆதி அம்பரனே எம்பரனே
வீறுலெட்சணமுள்ளோனே புரி வினையிலெனை யாளுங்கோனே

## இர்சா சந்த விருத்தம்

சிந்துல கந்த முவந்து புரந்திடு
சீரடு பேரெடவே
சித்த சனத்திறு மொத்தணி பொத்திடு
சீர்த்துறு பார்த்திபரே
வந்து பணிந்து கணிந்து கெணிந்துமே
வாரணி தாரிடவே
வட்டமணித்தவி சிட்டகணித்திரு
வாகு வரேந்திரனே
விந்தை மகிழ்ந்து விதந்து துதித்திடு
வீரமா தேவரையே
விண்டகை கொண்டவர் துண்டெழ மண்டசை
வீறுரை மாறிடவே
பந்த மிகுந்துர மந்தமளிந்திடு
பண்டரன் அண்டிடவே
படுமுறை இடுதிற மடுமறை கொலுமுன்
பரிவுட னழையீரே

இராசா வசனம்: சேவகரே! எனது சொல்லை மறுத்த மதிசூரனென் பவனைச் சிறையினுல் எடுத்து எனது கொலுச் சமூகம் கொண்டு வருவீரே.

## சேவுகர் தரு (அசைவிலான்)

இராகம் : பூரிகல்யாணி தாளம் : ஏக

1. மட்டவிழும் மாலைபுனை
 மார்பனு மெங்கள் - மன்னன்
 கட்டளைப்படிக்கே நாமும்
 எட்டிச் செல்வோமே

2. இட்டமுறுந் தேவர்களை
 ஏற்றிடாவஞ்சன் - என்னுந்
 துட்டமதி சூரனையே
 கிட்டியழைப்போம்

## சேவகர் விருத்தம்

மறைதனில் சிறந்த எங்கள் மாயனின் சமயந் தன்னை
குறையது சொல்லி மெத்தக் கொடுமொழி புகன்றதோடு
இறையவன் சொல்லை மீறி இறுமாப்புக் கொண்ட உன்னை
சிறையதா லெடுத்துக் கொண்டு சீக்கரம் வரச்சொன்னுரே

சேவகர் வசனம்: மதிசூரனே! அரசர் உம்மைச் சிறைக்கூடத்தால் எடுத்துவரச் சொன்னுர். சீக்கரம் வருவாயாக.

## மரியதாசன் தேவாரம்

துட்டநெட்டுரக் கொடியன் துரையேரோது
 துன்பமுறவைது மைத்தான் சோரனென்று
இட்டுவெள்ளைச் சகலாத்தை இழிவதாக
 ஈனமுறு போஞ்சு பிலாத்திடத்தே விட்டான்
நட்டணைசேர் பிலாத்துமொழி நவின்றிட்டானே
 நாட்டுகழுவாட்டியுமை நலித்தே கொல்ல
இட்டமுடன் சிலுவைதனை யேற்றேகொண்டீர்
 எனையாள வேண்டியருள் தாரும் கோவே

மரியதாசன் வசனம்: அனந்த காருண்ணியராகிய கடவுளே! அடியேனுக்கு ஒருகுறைவும் வராது காத்தருளுந் தேவனே.

## இராசா ஆசிரிய விருத்தம்

அரசனு மெந்தன் ஆஞ்ஞையின் படிக்கே
அரிபரந் தாமனை நீயும்
ஆசரித் தெமது ஆலயந் தனிலே
அதிவிதி முறையனுஷ் டித்து
சிரமது டணிந்து சிலையது தனக்கு
தீ மா தூபமுங் கொடுத்து
திரும்புவா யாகில் விரும்பியே யதிக
திரவிய மானதுந் தருவேன்
முரசெறி யரசர் மதிக்கவே யெனது
முழுஅர சுரிமையு மீவேன்
மருவிய பச்சை பங்கிடா வைரம்
மாமணி யானதுந் தருவேன்
விரைசெறி மாலை யுரமதிற் சூட்டி
விரலதி லாழியும் பூட்டி
வரைமணித் தேர்மேல் நிரைவலஞ் செய்வேன்
வணங்கிடில் எமதுதே வரையே.

## மரியதாசன் ஆசிரிய விருத்தம்

வணங்கிடு மென்று வகுத்துரை செய்த
வள்ளலே யெனதுரை கேளும்
வலிமையே யுடைய அசுரர்க ளோடு
வசையுறு தேவர்கள் தாமும்
இணங்குபாற் கடலை கடைந்தமு தெடுக்க
இசைகிரி மந்ர மத்தாக
எழிலர வாகும் வாசுகி கயிருய்
இடுகடைந் தமுதுறும் போது

மணங்கமழ் அமுது அசுரரே யருந்தா
மடிந்திடக் கிருஷ்ணன் தானும்
மருவிள மடவாள் சாயலே யெடுத்து
மயக்கியே யசுரரை யழித்து
அணங்கெடு ரூபென் றரன்மொழிக் கிருஷ்ணன்
அழகுறு பெண்ணொடு மயலால்
அடர்செடி மறைவில் அவளையே புணர்ந்த
அறிவிழந் தவனை வணங்கிடேனே

## இராசா கழில்நெடில் ஆசிரிய விருத்தம்

அண்டரண்ட புவனமும் அண்டகோ ளங்களும்
அடிபெயர்ந் தாடி விடினும்
அடரேழு முகில்களும் கடகடத்தே மோதி
அண்டமுடி துண்டு படினும்
மண்டியொளிர் சோதியுங் கொண்டநிலை மீறியே
மண்டலத் திடிந்து விடினும்
மடரேறு கடல்களும் திடராக வேவெந்து
மாதிரங் கருகி விடினும்
வண்டமொழி விண்டுமுயிர் கொண்டவரு முண்டதோ
வரேந்ர னென்முன்பு நின்று
வரிநிறுவு மரியது முன்புருவை தானுமே
வல்லபோர் புல்லு மோதான்
கொண்டமதி மாறியே பண்டுமறை தூறியே
கொஞ்சமும் அஞ்சி டாதே
கொண்டமறை கண்டுகுறை அண்டமறு வண்டனே
கொன்றுவதை இன்று புரிவேன்.

## இராசா மரியதாசன் பாட்டு (கூனற்)

இராகம் : மோகனம் தாளம் : ரூபகம்

இரா: வாகுற்றிடு மனந்த தேவுக்களை யிசழ்ந்து
நீ கெச்சிதமிகுந்து நாவுற்றடங்கிடாது
வாதுற்றிடர் மொழிந்த தீதுற்றவனே முந்த
வாளுற்றெனது சொந்த நீளுற்றதன மிந்த
வரைபொங்கத்தரையெங்கும்குருகங்குஇரையங்கம்
வரிந்துண்ண அரிந்துன்னை எறிந்திடுவேனே.

மரி: கள்ளங்கபடமற்ற உள்ளந்தனிலே ருத்ர
முள்ளுங் கரமேபத்ர அள்ளும் வதையேசித்ர
கண்டம் படவதைத்து மிண்டென்னுயிர் சிதைத்து
கொண்டென் மனம்மதித்து அண்டேன் கணந்
துதித்து
கடிசொந்த அடிநைத்தே கெடிசந்த மரிதந்த
கதிநிந்த சுதனெந்தன் கருத்தில் மாறேனே

இரா: கோனேன் றெனைமதியா ஈனம் புகன்ற பொய்யா
மானங்கெடவே வெய்ய ஊனம் விடவே செய்வேன்
கடிதிற்றுக ளெழும்ப படியுற்றவர் புலம்ப
கெடிதுற்றவரும் வெம்ப அடியிற்றலை மலங்க
கடிதுன்னு முடிவென்ன தடையின்றி விடைமுன்னு
கணமுன்னு நிணமுண்ணு கூளிக்கெறிவேனே.

மரி: தடமுற் றகழிசூழும் திடமுற்றதிபா கேளும்
குடையுற்று லகையாளும் வடமுப்படையே நீளும்
தவத்தில் மிகுத்த சிட்ட அகத்துமனை யார்கிட்ட
அவத்தையுறவே கெட்ட விதத்து மருவித்துட்ட
தனமுற்ற தணலுற்ற சிவபற்றே மனமற்றேன்
தலையற்றும் நிலைபெற்ற நிரையம் போற்றேனே.

இரா: ஐஞ்சும் மறம் மிகுந்து விஞ்சும் பிறையணிந்து
பஞ்சம் மறையறைந்தும் நஞ்சங்களிநிறைந்த
அந்தம் பணியும் விந்தை உந்துஞ்சிவனை நிந்தை
முந்தும் மொழியுஞ்சிந்தை பந்தமுறவே யெந்தை
அணிபெற்ற கணிகொற்றமணிசித்ர தனுவுற்ற
அடர்வஞ்சா கெடநெஞ்சம் படமிஞ்சுவேனே

மரி: ஈனந்தனை நினைந்து ஏனிந்தனைபுரிந்து
மானம் மறமிழந்து மோனமுறைபிறழ்ந்து
இழிந்த வழிசினந்து மொழிந்துமெனைமுனிந்து
இடருற்றகம்பிழந்து கெடிவுற்றிடினுமந்த
இருளுந்து மழல் சொந்த உளமைந்தன் கொளநிந்தை
எழில் தங்கு மரிதுங்க சுதன் தஞ்சமாமே

## இராசா விருத்தம்

வண்டர்கள் மதமடக்கும் வலிமைசேர் மழுவர் கேளும்
அண்டர்கள் அடங்க வாகை அடர்ந்திடு மென்சொல் மீறி
மிண்டுறு மொழிகள் பேசு மிவனைமுள் ளிலகிற் கட்டி
துண்டெனத் தசைகள் சிம்பத் துடித்திட அடித்தி டீரே

இராசா வசனம்: மழுவரே! இவனுடைய வாய் மதம்போகும் வரை முள்ளிலகில் கட்டி நன்றாக அடிப்பீர்களாக.

## இராசா மறுவிருத்தம்

இன்னுமொரு வார்த்தை தன்னை இயம்புவேன் மழுவர் கேளீர்
முன்னமே இவர்க்குப் புத்தி மொழிந்திடு கயவ ராரும்
நன்னய மாக எந்தன் நகர்தனில் வருவா ராகில்
பின்னமே யின்றி நீங்கள் பிடித்துடன் வருகு வீரே.

## மரியதாசன் கொச்சகம்

ஒற்றைச் சுடரோரத் திகிரி
ஒருங்கே மருங்க இரும் புவியாள்
தெற்றும் முடியோன் செறுத்து மெனே
தறித்தே தசைகள் பிறித்துறுத்த
சற்று மிரங்காத் தறுகணர்கைச்
சதிக்காய் விதித்தான் கதிக்கிறையே
உற்றே வருத்துற் றிடினுமெழில்
உன்னூர் பொன்னம்பதம் துணையே.

## மரியதாசன் - தரு (கன்னூரும்.. எ. மெ)

இராகம் : கீரவாணி தாளம் : அடதாளசாப்பு

1. ஆன முதற் பொருளே -இந்த
அன்பனுக்குன் தயை ஈந்தருளே
ஞான மறைதனிலே - உள்ள -
நன்னறையே அதன் உள்ளுறையே.

2. ஈன னெனவெறுத்து - மெத்த
இன்னல் புரிந்திடு மன்னவனின்
ஊன மறைபணியா – ஒளிர்
உன்னடி போற்ற உணர்வருளாய்.

3. முள்ளின் முடியமுத்தி-ஒரு
மூங்கிற்றனைகரமே பொருத்தி
ஆளும் பகை வறுமை-புரி
ஆகடியம் பொறுத்திரெமக்காய்

## சேவகர் விருத்தம்

நள்ளெயிர் செறுத்த பொல்லா நாவினைப் படைத்ததுட்டன்
துள்ளியே யலறி வீழ்ந்து துடித்தவ னுதிரம் தோய்ந்து
முள்ளில கதுவே பீறி முதுகது பிய்ந்து போக
எள்ளள விரக்க மின்றி இறுகவே பிணித்திட் டோமே.

சேவகர் வசனம் : தோழனே! இவனை இறுகக் கட்டினேம் இனி உதிரம் ஆருயோடுமட்டும் அடிப்போம் தோழா.

மரியதாசன் - சேவுகர் தரு (தேவ நற் கிருபையே...)

இராகம் : ஆனந்தபைரவி தாளம் : ரூபகம்

மரி : ஆதியம்பரனே அநியாய மதாகவே,
வாதுடன் எனையே வதைக்கிருர்கள் -
பந்தமாய்வலுவந்தமாய் - நெகு
இந்த வேளை யுகந்திடாயருள்.

சேவ : வல்லினப் பளையே சென்றே புகுந்திடும் நரி
புல்லு மோவிரையே அரசனின்று
ஏற்றிடா மொழி சாற்றிடும் பழி
மாற்றிட வழி கூற்றுவர்க்களி

மரி : தூறியே கொடியோர் என்மேலே மெத்த
சீறியே புலிபோல் அடுத்து மெத்த
அடிக்கிருர் மனம் துடிக்குதேகதி
முடிக்கு நாயகா கடைக்கணீந்தருள்.

சேவ : பீறியே தசைகள் சிம்பாயெழும்ப வேதான்
வீற தாயடித்தே வருத்தியிவன்
போற்றிடும் மறை மாற்றிடும் வரை
ஏற்றிடும் மறை சாற்று மாமுறை

மரி : போதநாயகனே இப்போதே துட்டர்
மோதியே யெனையும் வருத்துருர்கள்
பொருத்தியே மனம் இருத்தியேயினம்
கருத்திலேநயந் திருத்தமாகவே.

சேவ : மண்டலத்தவரே மெத்த வருத்தியிவன்
கொண்டிடும் மடலே விடும்மட்டும்
வாட்டியே பகை கூட்டியே மறம்
ஓட்டியே வசை மாட்டுவேன் விசை

மரி : சோதியே சுடரே நிறைந்திலங்கும்
ஆதியேயிறையே சுயவரென்னை
மாறு கூறியே சீறுசொரியவே
ஆறு தூறிட மாறிடாவருள்-

சேவ : கொண்டனே கெறுவோ அல்லாதே சுத்தப்
பண்டுகொள் மறையே மறுத்து நீயும்
கொண்டனே புதுக் கண்டனே மறை
வண்டனே தசை துண்டதாக்கிறேன்

## மரியதாசன் இன்னிசை

கட்டியடித் தேயுமையும் கார்நிறையும் வன்கணர்கள்
பட்டடிகள் மேலடித்தும் பங்கமிக வேபுரிந்தும்
இட்டமுட னேயெமக்காய் இணங்கிமன மேபொறுத்த
மட்டதடங் காதவன்பென் மனதைவிட்டு நீங்காதே

## அருளம்மா கொச்சகம்

தெள்ளொளிரும் வள்ளலுடை தேர்சபைக்கே யேகிவர
அள்ளுமதி கொள்ளுமெனக் காசைமொழி சொன்னதுரை
புள்ளினங்கள் போயொதுங்கி பொழுதுமறை வாச்சுதையோ
விள்ளுமெம தாச்சிரமம் விரும்பிவரக் காணேனே.

அருளம்மா வசனம்: ஐயோ தேவதாயே! இராசவாசல் சென்ற எனது பிராண நாயகன் இன்னும் வரக்காணேனே எங்கு சென்று தேடுவேன்.

## அருளம்மா கொச்சகம்

இலங்குமணி யேயொளிர் ஏற்றதொரு துல்லிபமாய்
துலங்குமதி வதனம் சோர்வடைந்தே வேற்றுருவாய்
விலங்கு துலங்குடனே வெந்நீர்த தும்பிடவே
அலங்கோல மாகஉம்மை ஆயிழைகண் டாறுவேனோ

## அருளம்மா தரு : (மின்னு ஞாயிறு எ. மெ.)

இராகம் : கரகரப்பிரியை தாளம் : ஏகம்

1. தங்கத் தெழும் சுடர்போல்-அங்க அழகு எங்கே
பொங்கித் துடித்தயர்ந்தே-பொற்பிழந்திரெதற்கோ
2. அன்பார் மொழியதெங்கே-ஆனசொரூபமெங்கே
அந்நீதமாக உம்மைப்-பின்னப்படுத்தினரோ
3. பிடித்தே உமையடித்து-துடித்தேயயர்ந்து மெத்த
பெண்ணணங் கென்னையெண்ணிக்-கண்ணீர்சொரிந்தனையோ
4. முள்ளார் இலகடுத்தே-அல்லார்வினை யடுத்தே
விள்ளார் தொடுத்தேயும்மை-வேற்றுருவமாக்கினரோ
5. பதறுதே அங்கமெங்கும் பதியேயென் னுருயிரே
பகர்வீர் மின்னுளெனக்கே-பங்கயத்தார் வதனே

## மரியதாசன்-அருளம்மா தரு (வண்டலம் பூ எ. மெ)

மரி : மதுர மொழி மாங்குயிலே - எந்தன்
மயிலினமே மாதரசே
வரிவிழியில் நீர்ததும்ப - வெகு
வன்துயரம் கொள்ளாதீர்

அரு : சொயசவுந்தர மதிவதனே-நேசச்
சுந்தரனே இந்திரனே
நயமுலந்த உம்வதன-எழில்
நரண் மலரும் தான்வதனே

மரி : செம்பவளமே யொளியே-நல்ல
செவ்வதரச் சேயிழையே
அம்பரனே மனுவுருவாய் - அன்று
அருங்குருசிலே யிறந்தார்

அரு : இலங்குதசையே சிதற - உந்தன்
எழில் வடிவமே பிதற
விலங்குதனைப்பூட்டி யுமை - யீனர்
வேதனை செய்தாரெதற்கோ

மரி : தீனபர னெங்களுக்காய் - வெகு
துயருடனே பாடுபட்டார்
ஈனமுறு மெந்தனுக்கு - வந்த
இடர்கள் இன்னும் போதாதே

அரு : உருகிமன மாறுதில்லை - உமக்
குறுதுயரோ பேசவல்லை
கருதியுமை நான் பிரியேன் - கண்ணின்
கருவிழியே அருள் ஒளியே

மரி : கட்டழகே கார்குழலே - இளங்
கன்னிகையே கலங்காதே
மட்டடங்காத் துயர்தவிர்த்து - நீரும்
மாளிகைக்குச் செல்வீரே

அரு : மணியிருக்க ஒளிபோமோ—நிறை
மலரிருக்க மணம் போமோ
அணிதிகழும் இன்புயனே - உம்மை
அன்றி யெனக் கார்துணையோ

மரியதாசன்-இசலி சந்தம்

அதியன்புநேச எனதின்பமான
பதியன்பு கொள்ளு மயிலே
சதிதங்கு மாயப் பிரபஞ்ச வாழ்வு
தனை நம்பி யலைவுறுதே
நிதிபொங்கும் ஞான பரமன்ற வாழ்வு
நிலைதங்க வேணு மதுவே
கதிதங்கு தேவ பதிமுந்த லாகு
கடைநிந்த மென்று அறிவாய்

கலையெங்கு நீள மதிபொங்கு பூவில்
கனதுன்ப மேவி வருமே
அலைகொண்டு மாக மலைவிண்டு நாளும்
அடல்விண்டு மதிக திடனாய்
விலைதந்து மீண்டு அலகின் கைநின்று
விறல்தங்கு யேசு பரனே
நிலைகொண்டு மோன சுடர் தங்குவான
நிலை தங்கலாகு நிசமே

மரியதாசன் வசனம் : எனது ஆசைக்குகந்த தேவியே! நான் கால் கரங்களில் விலங்கு மாட்டப்பட்டு வேதனை படுவது பற்றி நீர் மனவியாகுலப்படவேண்டாம், எம்பிரானாகிய யேசு இரட்சக பெருமான் எமக்காக சொல்லொண்ணாத வேதனைகளை அனுபவித் தார். அவருக்காக நாம் பாடுபடுவதில் உமக்கு வியாகுலம் வேண்டாம். நீர் அரண்மனைக்குச் சென்று தேவதாயைத் தினமும் வேண்டுதல் புரிந்தால் எனது கவலை ஒழியும் தேவியே.

அருளம்மா — தாளிசை

மின்னொளிர் மணிகள் அன்ன நற்பணிகள்
மின்னு சுந்தர நல்லாரமும்
மிளிரு மாங்கிலிய அருளு தங்குநய
மீறையார் கிரண கூறையும்

கன்னலென் மொழியாள் சின்னஎன் வயதில்
கவர்ந்துமே எனை வதிந்துமே
களித்துமே விளித்த தளிக் கொளியவே
கருதிவாழ்ந் தமணப் பாந்தனே.

முன்னு சத்யமறை உற்றதா லரசன்
மூறியே சினமதேறியே
முள்ளிலக டுத்துக் கொள்ளிடத் தொடுத்து
மோதிடுங் கொடிய வாதிலே

பொன்னொளிர் கனக மன்னிடுங் கதியின்
போதனே பரம நாதனே
பொருந்துமென் தலைவன் வருந்துமித் ததியில்
போந்தவுன் கருணை யீந்திடாய்.

## அருளம்மா பாட்டு (அண்ணன் ம...)

இராகம் : தேசிகதோடி தாளம் : ரூபகம்

1. புன்னொத்திறை சினந்து என்னற்றலைவன் நொந்து
மின்னல்தனிலே வெந்து உள்ளந் தயவு வந்து
புரையாறிட விரைவாகிட நிரையேறிட
புரிந்துமேயருள் சொரிந்திடாய்மறை
இறைஞ்சிடும் மரியாயே

2. மதன சவுந்தரத்தை அமிர்த மொழிரசத்தை
புவிபதிதான் வதைத்தே விதனமுடன் சிதைத்தே
மங்கச்சதை பொங்கப் பதை பங்கத்தின மங்கைக் கதி
மாதேயரசியே தீதேயரு கிடா மாறிலாதருள்வாயே.

## அருளம்மா - பரணி

நிறைஞான மறைசேர நிருபன் சீறி
நிந்தனையாய் பந்தனைசெய் நிறைவார் சோதி
உறைவாகு நிறைசோக முறவே நைந்து
உயர்தலைவன் துயர் நினைந்து உருகின்றேனே.

அருளம்மா வசனம் : அளவில்லாத தேவனையீன்ற அன்னையாகிய பரிசுத்த மரியாயே! கொடியோனுகிய அரசன் புரிந்து வரும் தீச் செயலில் நின்று என் நாயகனைக் காப்பாற்றியருளுமம்மா.

## தேவதாசன் கொச்சகம்

நித்தம் நிரையத் தழுந்தாது நிறையற்றிடு புன்மயல் விரைந்து
சுத்தம் ததும்புஞ் சத்யமறை சுருதியொருவிச் சுடர்பரனை
நத்தும் மரிய தாசனெனும் நண்பன் மனைக்கே நயந்து சென்று
சித்தம் தனையே யறிந்துவரச் செல்வேன் வலாரிபுரிநகர்க்கே

## தேவதாசன் பாட்டு (பட்சி சாலை)

இராகம் : நீலாம்புரி தாளம் : ஆதி

1. நீதி நிறைந்தேயிலங்கும் நேர்மரிய தாச னென்னும்
சோதி மறை சேர்ந்திடு மென் சுத்தன் மனைசெல்வேன்
அவர்-சித்தமதையுள்வேன்.

2. அன்று வனத்தே மரியாள் துன்று நவமே புரிந்தாள்
வென்றிமறையே புகுந்த வீரனுளங் கண்டே
வரத்-திரமனங்கொண்டே.

3. மாடமணி மண்டபமும் கூடமொழி நின்றுலவும்
ஆடகப் பொற்பதத்திலகும் - அழகு மனைநாடி
நானும் – மகிழ்வு மிகக் கூடி

4. நீண்மணி மரகதமும் நித்திலமு மொத்திலகு
வெண்மணியடு முடியோன் வெற்றி நகர் தேடி
அவர் - சித்ரமனை நாடி

5. வான் கதி நிறை பதியின் தேன்மலரின் பூந்ததியின்
தான் துதித் திறஞ்சிடுமென் தண்ணளியான் தானே
அவர் - இன்மனையீ தாமே

### தேவதாசன்–கொச்சகம்

கந்தங் கமழும் கார்குழலே கண்டே மொழியே கெண்டைவிழி
சித்தும் அருவி யெனவுனது சிறந்த அழக மவுள்சிதற
இந்தும் மறைக்குமெழில் வதனம் இருண்டே மருண்டுன் திரண்டபுய
முந்தும் தலைவன் மனையிலின்றி மோதும் துயர்தான் ஓதெனக்கே

தேவதாசன் வசனம் : சகோதரியே! என்ன நேர்ந்தது நான்தான் உமது கணவனின் நண்பன் தேவதாசன். எதற்காக கலங்கிய கண்ணும் சிந்திய மூக்குமாகக் காணப்படுகிறீர். எங்கே மரிய தாசன். எல்லாம் விபரமாகச் சொல்லுவீராக.

## தேவதாசன் - அருளம்மா பாட்டு (என்ன செய்...)

இராகம் : லாவணி                                             தாளம்: ரூபகம்

அரு : ஆகுலமேல் ஆகியுடல் அயர்ந்து சோருதே
அருந்தலைவ னார்துயர்வில் நாத்தடக்குதே

தேவ : சீதமதி யாளனுடை சித்ரப் பாவையே
வாதுடனே வந்தபழி, வழுத்துமிப் போதே.

அரு : தெள்ளு மறை யுள்ளியதால் ஏந்தல் சினந்தே
முள்ளிலகி லேவதைத்து மோசமே செய்தான்

தேவ : கானமயிலே கலங்கிக் கண்ணீர் சோராதே
வானபர னார்எமக்காய் வாதை பட்டாரே.

அரு : ஈருடலே யோருயிரென் றிணைந்து வாழ்ந்தோமே
ஆருயிரா மன்பரின்றி யரைக்கண மாறேன்

தேவ : ஆதிபர னார்தனையே அந்நீதஞ் செய்தே
போதிலொரு தூணதனில் பிணிக்கவில்லையோ.

அரு : கோடுமணி சூடுமெந்தன் கொழுநன் தோழனே
நாடுமுயிர்க் கூடழிய நாட்டங் கொள்ளுதே.

தேவ : வாழவென்று வந்தவர்கள் வையம் இல்லையே
வருந்திடினும் பிரிந்தவுயிர் வருதல்வல்லையே.

தேவதாசன் வசனம் : என்னருமைத் தங்கையே பிறந்தவர் இறப்பதே நிசம். எதுவரினும் வருந்தாதே. அவன் சித்தமின்றி ஆவதுமில்லை அழிவதுமில்லை. தங்காய்! தேவ நேசத்துக்காகப் பாடு பட்டு மரிப்பதொன்றே மேல். அந்த ஆன்மா நித்திய பேரின்ப வாழ்வடைவது நிசம். நான் சென்று உமது கணவரைக் கண்டு வருகிறேன் தங்கையே.

அருளம்மா வசனம் : அண்ணா! நீங்கள் அங்கு போவதை நான் விரும்பவில்லை. அரசன் அறிந்தால் உங்கள் உயிருக்கும் தீங்கு சம்பவிக்குமல்லவோ?

தேவதாசன் வசனம்: எதற்கும் ஆண்டவன் இருக்கிறார், வருகிறேன் தங்கையே.

## தேவதாசன் - பாட்டு (பன்னீரரசகுல...)

இராகம்: உசேனி

தாளம்: அட

1. கள்ளங் கபடறியர் - அந்தக்
   கார் மதியாளனுஞ் சீர்தயைகொள்
   வில்லும் மரியடியான் — தன்னை
   மேதினி மீதிலே காணச் செல்வேன்

2. கலங்கா உளம் படைத்தோன் - அந்தக்
   காதகனுகும் வரேந்திர மன்னன்
   மலங்காத் திறமுடையோன் - தன்னை
   மாற்றி மறைவிடச் சாற்றினனே

3. ஈனமுறை புரிந்தே - நசை
   ஊற்றிடு மற்றட மொத்தரசன்
   தானந்த அன்பனையே - மிகத்
   தாக்கினனே உயிர் போக்கினனே.

4. வில்லார் மறைதனிலே - விறல்
   சேர்ந்ததினால் மனஞ் சோர்ந்தயர்ந்தே
   முள்ளார் இலகினிலே - முனைந்
   தீடினனே உடல் வாடினனே.

## தேவதாசன் - கொச்சகம்

நத்தங் கிழித்தே எழுமதியின் நாணும் பசிய நயசவுந்தர
சுத்தம் ததும்புஞ் சுடர் வதனம் சோகந்ததும்பிச் சுவர்ணமணி
பொத்தும் வடிவிற் பொங்கு ரத்தம் புனலாய்ப் பெருகப் பொற்பிழந்து
சித்தம் கலங்கிச் சீர்குலையச் செகத்தினுமை யார் வருத்தினரோ

## மரியதாசன்-தேவதாசன் பாட்டு (நவரெத்......)

இராகம் : எதுகுலகாம்போதி தாளம் : ஆதி

தேவ : களிபொங்கிடு மொல்காச எழில் தங்கிடும் விலாச
கனமெங்கே போயினதோ எனக்கிதை
அளி கொந்திடும் வனச பொழிலுந்திடு மென்நேசா
அறிந்திட உரைப்பீரே - என்னன்பரே.

மரி : சோதிச் சுடரொளியான் நீதி மறையெளியான்
சேர்ந்ததினுல் எனக் கே யரசனித்
தீதுவரை புரிந்தான் ஓது நிரையழிந்தான்
சித்தத் துணரு வீரே - என்தோழனே.

தேவ : தங்கத் தகட்டை யொத்த அங்கத்தடிக்க மெத்த
அவதிகள் பட்டீரோ ஐயோ மெத்த
பொங்கித் துடித்தனையோ பாங்கன் நினைந்தனையோ
பொருந்திடவுரை யெனக்கே - யிப்போதினில்

மரி : துங்கமுடிபுனைந்த பங்கம தேவனைந்தே
துடிபொருமிறையவனே சினந்துமே
இங்கென்தனை முனைந்து சிங்கமெனக் கனைந்து
சித்தம் வருந்திடவே - செய்தானிப்போ.

தேவ : காலில் தளேயே பூட்டிக் கோலங்களேயே வாட்டி
கனதுயர் கொண்டிடவே வதைத்துமை
ஆலத்தகத்தே காட்டி ஞாலத்துமையே கட்டி
அடித்திடத் துடித்தீரோ - என்னன்பரே.

மரி : நான் படும்பாடுகண்டு ஊன்கெடும் உண்மைஎன்று
நன்மனமே வருந்திக் கலங்காதீர்
கோனருள்தானே கொண்டு நான் மரிப்பேனே யின்று
கொள்நிலேதான் பிசகேன் - என் அன்பனே.

தேவ: சிலுவைதனை வரித்தே அலகில் பரன் மரித்தே
செழுங்கதி தந்தனரே செகத்தோர்க்கே
நிலைபரர்க் காகவீய நலமுளர்க் கல்லால் தூய
எல்லோர்க்கும் கிட்டிடாதே - உணர்ந்திடீர்.

மரி; தேவப்பிர தீர்த்தனமோ பாவசங்கீர்த்தனமோ
அருட்பிரசாதமதோ எல்லாமிப்போ
மேவிப் பரிந்திடவே ஆவிபிரிந்திடவே
மெத்துந்துயர் களையே - என் தோழனே.

## தேவதாசன்-கொச்சகம்

தேசுநிறைந் தோங்குகின்ற தேவமரி தாசனேகேள்
ஆசையுறு கொம்பிசமும் அவஸ்தைமுத லானதெல்லாம்
மாசணுகா ஆசையதால் மாறுமலேகிடைத்து
வீசுநிறை மோட்சமுடி மேன்மையுட னேபெறுவீர்.

தேவதாசன் வசனம்: தோழனே! மெஞ்ஞான ஆசையும் பச்சாத்தாபமும் உள்ள உமக்குச் சருவேஸ்பரனுடைய பரகதி வீடுகிடைப்பது நிச்சயம். எதற்கும் அச்சப்படாதீர் அன்பனே.

## சேவகர் விருத்தம்

எத்தியே எங்கள் ராச எழில்தன பதியை நீயும்
புத்தியே சொல்லி யீனப் புதுமறை சேர்த்த தாலே
மெத்திய உனக்கு நல்ல மேல்வெகு மதியே யீய
நத்தியே யுன்னைக் கட்டி நரபதி முன்செல் வோமே,

## தேவதாசன் கொச்சகம்

பொன்னூர் கதிக்கிறையே போந்த தயைக் கடலே
மின்னுமலே விழுந்த மேலசனி போல் எனையே
இன்னலுற வேபிடிக்க ஏது குறைசெய் தேனோ
உன்னூர்திரு விழிகொண் டுவந்தெனைக் காத்தருளே.

தேவதாசன் வசனம் : ஓ! பரிசுத்த தேவதாயே! எதுவித தீங்கும் புரியாத என் அன்பனுக்கு இத்தனை வாதை வருத்தமானால் அவரை எனது மறையில் சேர்த்த எனக்கு எப்படியான வருத்த வேதனைகள் புரிவான். எல்லாம் வல்ல இறைவா! எதுவும் உமது சித்தம் போலாகட்டும் ஆண்டவனே.

## தேவதாசன் பாட்டு (உள்ளங்...)

இராகம் : ஆனந்தபைரவி தாளம் : ரூபகம்

1. திக்கற் றெனைப் பிடித்தே முக்குற்றிடர் தொடுத்தே
இக்கொற்றவனிடத்தே பொய்க் குற்றங்கள்தொடுத்தே
கூற்றேயிவர் தூற்றேமன
மாற்றேனிதை யேற்றேன்சரண்
ஈறிலாப் பெறு பேறதேயருள்
மாறில்லா நிறையோனே.

2. எள்ளத்தனை யிரங்கா குள்ளத்துறும் நரக
துள்ளத் துறு மருங்கா வள்ளற் கிடை நெருங்க
பிடித்தே வசை படித்தே மனம்
துடித்தே பகை முடித்தே விரை
சுற்றியிரு சரம் பற்றியிழுக்கிறார்
துணைபுரி பரபோதா.

3. மட்டற்றொளிர் கிரண முட்டுற்றடர் பரனே
கெட்டுற்றழித் திரண விட்டிற்கிணை போரன்ன
பொதித்தேயுடல் சதித்தேவிட
மதித்தேயுனைத் துதித்தே நிதம்
மறமா மழுவர்கள் புறமே இழுக்கிறார்
மருவிடாய் அருள்போதா

## சேவகர் விருத்தம்

மன்னவ ரேறே கேளும் மாறுடன் நகர்க்கு வந்து
நன்னய மதிசூ ரர்க்கு நயந்திடு மறையீ தென்று
முன்னரு மெங்கள் தேவர் முழுப்பசா சென்று சொன்னான்
பின்னமே யின்றி நாங்கள் பிடித்து முன்கொடு வந்தோமே.

சேவகர் வசனம் : அரச பெருமானே! இவனேதான் எங்கள் தாஞு பதியை துட்டமார்க்கத்தில் சேர்த்த துரோகியென அறிந்து உங்கள் சமுகம் இழுத்து வந்தோமையா.

## இராசா கழிநெடில் ஆசிரிய விருத்தம்

வானைத் துயர்ந்துவட மானத் தகன்றகிரி
மாறிநிலை வேறுபடினும்
வாருதிரு பாரதிர வேசுகறு நீறுகரு
வானிலைய மேகுலையினும்
மீனைத் துயர்ந்தசுடர் வீனத் துதிர்ந்துமே
மின்னியிடி வன்னிபடினும்
மிடநடவு கடகுகடு பொடிபடவு நெடிபடியு
மிந்துமீன் சிந்துபடினும்
தானைத் துயர்ந்தபிர தானத் துரந்தரன்
தன்னுணை தட்டியாரும்
தாருமுட லோருமுயர் ஆடுவரை கூடியே
தானிருந் ததுவுமுண்டோ
பானைத் தொளிர்கிரண மேனத்திடும் விதர்ன
படியவாள் கடிதுமேந்திப்
பரகுருகு நரிகழுகு விரையிரை யதுண்ணவே
பங்குபங் காக்குவேனே

## இராசா - தேவதாசன் தரு (இத்தலத்தே எ. மெ.)

இராகம் : மோகனம் தாளம் : ரூபகம்

இரா : என்றுமண்டம் பணிந்தே புகழ்
அண்டரென்றுங் கனிந்தே தொழ
கண்டமுண்டங் கணிந்தேகொள
தண்டுகொண்டுந் தணிந்தே திகழ்
ஏற்றமுற்றிடும் இறைவன் என்தனை
மாற்ற முற்று மதித்திடாவுனை
எகிறச்சிரம் மறுகியே உன
திறுதி திறமறிவேனே.

தேவ : சங்குதங்கித் தழைத்தே மலர்
அங்குதங்கிச் செழிப்பேயுறும்
கங்குகங்க தாய்த் தரளமே
தங்கு செங்கோ லோச்சரசனே
சாற்றியே பழி யேற்றியே தளி
தூற்றிய மொழி மாற்றமென்னவோ
சார்ந்தகுறையது ஓர்ந்து புரிந்திலேன்
வேந்தனே அறிவீரே

இரா : முத்துரத்தினம் தத்தவேமுடி
வைத்திழைத்திடு கொற்றவரடி
கொத்து முத்தம் குவித்தே நெடி
நத்து நித்தம் துதித்தே கெடி
மிண்டு கண்டிறை கண்டமொண்டிய
பண்டுமாமதி கொண்ட சூரனை
முன்னெனதுரை பின்னிடப் புரி
வன்னல மறிவேனே.

தேவ : சித்தசற்கினை யொத்த மாமதி
மெத்துதத்துவ முற்றபூபதி
சித்தசத்துவ முற்றுமேபதி
எத்துமெத்தவே நத்திலென் ததி
சித்தமெத்திய முத்திநத்தலை
சுத்தசத்திய பத்தி நித்திய
சிறந்தவழிமொழி பகர்ந்த நான்பழி
புரிந்திலேன் அறிவீரே.

இரா: துண்டவெண்டப் பிறை சூடிய
பண்டுகண்டம் மறைநீடிய
தண்டு மண்டந் தறைந்தூடிய
கொண்டதொண்டருறைந்தாடிய
துங்கசங்கனை மங்கைபங்கனை
இங்குவந்தனை பொங்குமெந்தனை
துதியதுபுரி மதியசூரனைச்
சதியது புரிந்தாயே

தேவ: சிந்துமுந்தத் தெறித்தேமணி
சந்தவிந்தப் புயத்தேயணி
கந்துகந்தக் கவித்தேரணி
உந்து சொந்தச் சிரத்தேயணி
சித்திரக்குடைக் கித்தலத்தினில்
மெத்திடப்புரி தத்துவத்தனே
சிந்தைகொண்டுமே உந்தனுக்கொரு
நீங்குசெய்திலன் நானே

## இராசா சந்த விருத்தம்

கங்க விரங்க வுரங்க வரங்கரி
கடிவாள் நெடிதேந்தி
கழுகொடு நரிகுரு கருகிட விரைவெறி
கார்மன வீரர்களே
பொங் கர வுந்திடு சங்கர னின்தடு
பொன்னவி ருந்தளியே
போற்றிடா மாற்றுரை சாற்றிடு சீற்றலர்
பொங்கிம டங்கிடவே
அங்கரி தங்கு மனத்த சினத்துறு
அண்டலர் மண்டிடவே
அட்டக யங்களும் முட்டி யுதிர்ந்துமே
அம்புலி இம்புறினும்
வெங்கரி யேறிட வேயுரை கூறுவன்
வீறுடல் மாறிடவே
வேரடு மாலிட வேசிறைக் கூடதில்
விரைவுட னிடுவீரே

இராசா வசனம்: வீரரே! இத்துட்டனை விலங்கு பூட்டிச் சிறைக் கூடத்தில் அடைப்பீர்களாக.

## தேவதாசன் தரு (அள்ளிக்கொ எ. மெ.)

1. கொண்டார் மணிக் கண்டமொளிர்
மன்னவன் வரேந்திரன் சேவுகரே - என்னைக்
கோட்டிசெய்தே-கூட்டுசிறைக்
கேயிழுத்தே போரூர்காரெம்பரனே

2. ஆரணமெய்க் காரணனும்
அன்பருளத்தின் புடனுறைந்தே - அருள்
அம்பரனே கெம்புசினம்
ஆன பொல்லா இவ்விடரில் காரே

3. தெள்ளொளிரும் புள்ளியள்ளி
கொள்ளுதலை மீதொளிரும் தாயே - அருள்
தேங்கும் சுடர் ஓங்கொளியான்
ஆன உந்தன் சுதனை வேண்டியருளே

4. அள்ளார் செடி முள்ளதுள்ளே
அக்கினியில் மிக்க மோயீசனுக்கே - அந்நான்
அளவில்செக சோதிமயம்
ஆனகாட்சி யேகொடுத்தபரமே

## சேவகர் விருத்தம்

முறையின்றி யெங்கள் நாட்டில் முறனுறு கலகம் செய்து
இறைவன்சொல் தன்னை நீயும் ஏற்றிட மறுத்த தாலே
அறைந்திடு முனது கைகால் அழுத்தியே பிணைத்து நாங்கள்
சிறைதனி லிடுவோ மெங்கள் தோர்வேந்த னுரைபோல்தானே

## தேவதாசன் இன்னிசை

வாட்டியுமைக் கோட்டிசெய்த வன்மமுறு யூதர்தாம்
ஈட்டியத னுற்பிழந்த எண்ணடங்காக் காயமுடன்
நாட்டிய சிலுவைதனில் நாணமுட னேமரித்த
ஏட்டடங்கா நின்தயவென் நெஞ்சைவிட்டு நீங்காதே.

## தேவதாசன் - பாட்டு (ஐயோ நான் என்ன.. எ. மெ)

இராகம் : பரசு

தாளம் : அட

1. கருணைச் சமுத்திரமே உன்விழி நோக்கி
பொருநன் படுத்துமிந்த - அன்னீதமான
குருளைக் கொடுமையிலே - பரிவதுதான்
கொண்டே அருள் சொரியே.

2. விண்ணரசாள் மணியே கண்ணொளிபோலே
எண்ணியுனை நினைந்தே - மனங்கரைந்து
கண்ணீர் சொரிகிறனே - மனதிரங்கி
ஏழைக் கருள்சொரியே

3. இறையே யுலகுயிரே இலகொளிர்
முறையுடன் கர்த்தளிக்கும்—உமையேயீனர்
சிறையே புரிந்திருக்க—கசடனுக்கு
இன்னிடர் போதிலதே

## அழகேச இராசன் கட்டியன்

தலைதனில் முண்டாக் கட்டித் தாதுறு மாலை சூடி
இலகுகுண் டலங்களோடு இருகரப் பாளி மின்ன
நிலைசிலம் பதுவே காலில் நேரொலி பொலிந்தே காட்ட
கலைநிறை அழகே சன்தன் கட்டியன் வருகின் றனே.

## கட்டியன் - தரு (மஞ்சார்சந்தன )

இராகம் : செஞ்சுருட்டி

தாளம் : ரூபகம்

1. பொன்னுலக னன்னழகை
முன்னு வளநாடுடை யோன்வாருன்—நல்ல
பாரத் தெருக்களை வாரிப் பெருக்கிநீர்
வாரக்கரும் பொடு சேரத்திரள்நடு வீரே

2. கிரணமிகு அருணனெளி
கொடிமுடியான் நெடிசபையேவாருன்—நல்ல
கிண்ணறம் யாழிசை பண்ணுற மேவிசை
தண்ணறங்கூடியே யண்ணலடி நண்ணுவீரே

3. கொண்டணிதார் வண்டணிபூங்
கண்டொளிரு விண்டமதி மாரன்—வாருர்
கொங்குமந்தாரமுந் தேங்குசிந்தூரமும்
ஆங்குமிந்தோரமாய்த் தேங்கித்திகழச் செய்வீரே

4. முருகவிழும் குழல்மடவீர்
திருநிலவும் மாத்தாண்டன்வாரூர்—சோதி
முட்டும் நவமணிக் கட்டும்பலவர்ணத்
தட்டுகள் இட்டுமே கொட்டிக்குவித்திடுவீரே

## கட்டியன் கூறல் சந்தம்

பலசுத்து முலகத்து நிலவொத்து நளினத்து
முகமெத்து மொழிநத்திஞன்
அணிதங்கு பணிபொங்கு ரணதுங்க மணிசிந்து
கணிபொங்கு மிகுசங்கைமான்
எதிரிட்ட மதிகெட்ட அதிதுட்டர் எனுமுட்டர்
தலைவெட்டி விருதொட்டினுன்
படியெட்டு மிசைமுட்ட திசைவட்ட கொடிநட்ட
அடி தொட்ட கெடிபெற்றுளான்

முடிசூழும் படியாளும் கெடிராசன் கொடிராசன்
குடைராசன் குணராசன்
செங்கோல் கரங்கொண்ட புகழேசர் மகிழ்நீதி
அழகேச மகராசன் கொலு வீதி வருகிறுர்
சமுகம் எச்சரிக்கை சாமி பராக்கு

## அழகேச இராசா வரவு - சந்த விருத்தம்

கொம்பு தாரை பம்பையோடு குமுறு தும்பையும் வர
கோங்குமலர் அங்குதங்கு கோதையர்களேவர
அம்பு அஸ்திரங் களோடு அளவில் சேனையே வர
அழகுவாகு வலையமோடு இலகு பாவலர் வர
கொம்புரக் குடை கொடியும் இம்பரம் நிறைதர
கேந்திரம் பூ மன்னவர்கள் தோத்திரஞ் செய்தேவர
தும்பிதழ் மடந்தையர்கள் சோபிதங்கள் வீசிட
துப்பொளிரு மற்புதனைத் துதியிறைவன் தோற்றினன்

### இராசா கொலு தரு (அதியுக்... )

இராகம் : நாதநாமக்கிரியை தாளம் : ஆதி

1. பவளத் தொளி நிலவும் பளிர்முடி
தவளத் தொளிநிலவ—மகிபனென்
இடவாளிடையணி மகுடாதிபர்பணி
சுடர்மேவிடுமணிக் கொலுவிற் செல்வேனே

2. அலையேறிடு புவனத் தெவருமென்
சொலை மீறிடில் விதன—முறைமுறை
அடாத்தனுதலை தொடரத்தினநிலை
படரப் பொருமணிக் கொலுவிற் செல்வேனே

3. நிறைமுந்தொளிர் மகுட அரசர்கள்
திறை தந்தடிவருட—முறைப்படி
நிரைகாவலர்அட வரைபாவலர்நட
திரைசேர்அலைசுடர்க் கொலுவிற் செல்வேனே.

4. மருமாமணி மார்பன் குசேசய
திருமாதணி நேர்பன்—நுடங்கிடா
மடவார் இடுநட எடுபாவிசைபட
அடுதாரணி மணிக் கொலுவிற் செல்வேனே

சித்திரமணிக் கொலுவதனை நாடுவேன்.

## கட்டியான் விருத்தம்

மன்னவர் மன்னு போற்றி மாமணி முடியோய் போற்றி
ஒன்னலர்க் கேறே போற்றி ஒளிகவழ் செங்கோல் போற்றி
இன்னிலம் புரப்பாய் போற்றி இறையவர்க் கேறே போற்றி
நன்னயக் கமல பாதம் நாளுமே போற்றி போற்றி

## இராசா விருத்தம்

போற்றியென்றென் பொற்பகத்தை யர்ச்சனைசெய்
ஏற்றமுறு மாசுகரே இயம்பக்கேளும்
தேற்றமுடன் எந்தனுக்கு மதிகளோர்ந்து
சாற்றருமென் னமைச்சையிங்கு அழைத்திடாயே

இராசா வசனம்: கட்டியகாரனே! எனது மதிவல்லோனாகிய மந்திரியை அதி சீக்கரமழைத்துவருவாயாக.

## மந்திரி - வரவு விருத்தம்

கொத்துறு செய்ய கஞ்ச குளிர்மதி வதனந் தன்னில்
மெத்துறு மகிபன் ஆண்மை மேவியே இலங்கித் துன்ன
மூத்துறு மவுலி சூடி முறையிறை யழகே சர்க்கு
நத்துறு மதிக ளோதும் நல்மதி சபைவந் தானே

## மந்திரி பாட்டு (சுந்தரஞ்...)

இராகம் : தேசிகதோடி — தாளம் : அட

1. முத்துறும் மணிவைத்து இழைத்திடு
    மூதுறுமதி மன்னவனேனோ
நத்துறுமுயர் நன்மதி தந்திட
    நாடியேயெனைத் தானழைத்தாரோ

2. நாற்றிசைபுகழ் நாடெழிலீடரும்
    நல்கியே நகரானதை வேறு
மாற்றல ராருஞ் சீற்றமுடன் வந்து
    மாறுசெய்தாரோ நானறியேனே

3. ஏற்றமுற்றிடு மன்னவன் தன்கழல்
   என்றுமே போற்றும் மாற்றலராரும்
மாற்றமுற்றும் அவர்தனதாணை
   மறுத்து விட்டனமரா அறியேனே

4. மானிலந்தனில் மானலமுற்றிடும்
   மன்னவர்க்கதி மன்னவரேறே
தானிலந்திகழ் தண்மதி தந்திட
   தானழைத்தாரோ நானறியேனே

## மந்திரி ஆசிரிய விருத்தம்

திங்கள் வெண்மதிகள் தங்கியே யொளிரும்
   தீம்புன லாறதே பெருகி
திருகுளே யரம்மை முருகுறு கரும்பை
   தேங்குளே யசோகுமே பெருகும்

பொங்கிய தடஞ்சேர் பொற்சிறை யன்னம்
   பொகுட்டுறை முகட்டுமென் மலரில்
பள்ளியே கொள்ள வெள்ளையோ ரள்ளும்
   பள்ளையே கொள்வள நாட்டில்

தங்குவெண் சுடரோன் பங்கெறி யொளிபோல்
   தரளமென் மணிசெறிந் திலங்க
தரியலர் கவுரி இருநிறை விசிற
   தாங்கரி பாங்கொலு வமர்ந்து

துங்க மாமகிபர் தங்கமா மணிகள்
   துதித்தடி குவிக்குமுன் சமுகம்
தூதனை விடுத்து ஏதெனை யழைத்த
   தோதெனக் கிழைத்தபொன் முடியோய்.

## இராசா மந்திரி பாட்டு (கத்திவாள்)

இராகம் : தோடி தாளம் : அடதாளசாப்பு

இரா : இந்துநேர் எழில் மந்திரி கேளாய்
சந்ததமுமே எந்தன் நாட்டினில்
சிந்துமும்மாரி தேங்கியே செந்நெல்
தேங்குதா விளைந்தோங்குதா

மந்தி : வன்னமாமணி மார்பனே கெடி
வீரனே கொடையாளனே
துன்னுமும் மாரிசொரிந்துமே பயிர்
தேங்குதே விளைந்தோங்குதே

இரா : பசிய சுந்தர வசிய அலங்கிர்த
பாந்தனே மொழிச்சாந்தனே
திசைசொரிகுழல் அரிவையர் கற்பின்
நசைவுறுதென்றும் இசைவுறூர்களா

மந்தி : கெண்டைநேர்விழி கொண்டமாதர்கள்
என்றுமே நிலை கொண்டுமே கற்பைச்
சண்டவேகமாய்க் கொண்டுயிர் அன்ன
காக்கிறூர் புகழீர்க்கிறூர்

இரா : சீலனே மதிலோலனேயொரு
காலமே தவறுமலே தினம்
ஆலயந் தோறுஞ் சாலவேபலி
பூசைகள் நடந்தேறுதா

மந்தி : வேதவேதியர் ஓதுமாமறை
தீதிலாப்பலி பூசைகள் என்றும்
போதநாதனின் பாதமேதினம்
போற்றுறூர் மறைசாற்றுறூர்

இரா : நிறைகொள்ளும் மலர்மாலை சூடிடும்
நிருபர்கள் புகழ்மந்திரி
இறையவர் எனக்கீந்திடுந் திறை
குறைவில்லாமலே தருகிறூர்களா

**மந்தி :** வன்திறல் மிகும் வாய்மையோங்கிய
வாளனே யறிவாளனே
முன்பளித்திடு மென்று மேதிறை
குன்றென நிறைந்தோங்குதே

**இரா :** கெடிநக ருறு குடிகளுக்கொரு
கேடுமின்றியே கூடிவாழ்றுரா.
படியுளோர் என்றும் நெடி பெறவென்று
பகைமையின்றியே தகைமை கொள்றுரா

**மந் :** வல்லவா நகருள்ள மாந்தர்கள்
வாழ்வதொன்றியே தீது மின்றியே
சொல்நகர்க்குடிக் குள்ளொருவனே
சென்றனன் பிறதேசமே

**மந்திரி வசனம் :** அரசபெருமானே! எமது நாட்டில் உள்ள குடிகள் அத்தனையும் எதுவித குறைவுகளுமின்றி நற் சேமமே வாழ்ந்து வருகிறுர்கள். ஆயின், எமது வர்த்தகர்களில் ஒருவனுகிய தேவ தாசன் என்னும் வணிகன் வலாரிபுரி சென்று இன்னுந்திரும்பி வராதிருக்கிறுன் அறிவீராக.

## இராசா விருத்தம்

வண்டரள மெண்டிரைகொள் அண்டவாவி
வேளமரும் பாளியொப்ப அகழிசூழும்
தண்டலைகள் அண்டுவளங் கொண்ட நாட்டின்
சாற்றுமுறை யேற்றுநிறை மகிழ்ச்சியானேன்
வண்டனைதா ரண்டுபுய வணிகன் தானும்
வாவுநக ரேகிவரா வளமைதன்னை
பண்டுமுறை இங்கறிந்து பகர்வதோடு
பற்றுநிறை கப்ரனையிங் கனுப்பிடாயே.

இராசா வசனம் : வணிகர் குலதிலகன் பிறநாடு சென்று இன்னும் நகர் திரும்பாததை அறிவதோடு தளபதியை என் கொலுச் சமுகம் வரச்செய்வீர் அமைச்சே.

மந்திரி வசனம் : அப்படியே தெரிவிக்கிறேன் மன்னு.

## சேனதிபதி தோற்றம்-சந்த விருத்தம்

கலைமா மதிமுக மதுமே வியசத கதிரா டிடுசுடரோன்
கடிதார் மலரணி நெடிநீள் புயவணி கனகா ரெளிர்ஒளியான்
நிலமா மணியொடு மணிமே கலையடு நிரயா யொளிதவழ
நித்தில மொத்து இழைத்த விசித்ர நெடிமா முடிசூடி
மணிமே வியபுய மதுதா வியகர மணிவா ளதுநீட
மகரா லயமதின் முருகா ருருவய மருவா ரடிபோற்றி
நிலையா கியபல வலிமா படையுள நிலமா னுறுமகிபன்
நிதியா கியதள பதியா னவன்சபை நிரைமே வியேவந்தான்

## சேனதிபதி பாட்டு (துணிவோ )

இராகம் : அம்சத்தொனி

தாளம் : ஆதி

1. அவிரேறும் அணி மணி சித்திர
அடுத்தமாமுடி தொடுத்துமே கெடி
தவிசேறும் மாற்றலர் வேர்ப்புறத்
தடுத்துமே படை தொடுத்துமே நெடி
படியிலுடல்கள் நெடி முடிகளிடறுபட
நொடியில் அடறிவிழக் கடிதிற் செய்வேனே.

2. திறமாவலி தத்துவ மெத்துற
திட்டியே புகழ் நாட்டியே நிலை
மறமாமுறு கூட்டுறு மாற்றலர்
மடித்துமேயுர மொடித்துமேதிற
மதத்த மதகரிகள் எதிர்த்து வரினுமவை
சிதைத்து மருவுமெந்தன் புயத்திறந்தானே

3. அடிதாளும் மாற்றலர் சீற்றமாய்
அடுத்தரோபடை தொடுத்தரோ சணம்
முடிநீளும் கெடுபதி படுபடை
முடுக்குவேனமர் தொடக்குவேனிதோ
மறமூற்றறம் தெரிந்து திறமுற்றுரம் பிரிந்து
புறமூற்றிணை வரிந்து திற முற்றுவேனே.

4. விருதேறும் விண்டொளிர் மண்டிடும்
விழைத்து மாமுடி தழைத்த மன்னவர்
கருதூறுங் கட்டளை தட்டிடில்
கனத்தவாள் பொரு மனத்த மாகிட
ககன மலை கலைய புவன நிலைகுலைய
விதனமுயர்நிலைய அதனைப் போக்குவேனே.

## சேனாதிபதி சந்த விருத்தம்

மின்னிய மணிமுடி சென்னி யிலங்கிடும்
அண்ணலே செயசரணம்
மிளிர்வயி ரத்தொடு ஒளிகனல் பளிரெனும்
முடிநா யககசரணம்

மன்னவர் அடிதொழு இன்னலர் கெடியுறு
மகரா சனேசரணம்
மணியிடு நடதேர் கரிவரி காலாள்
மருபுய னேசரணம்

கன்னல் நிகர்மொழி மின்னிடை யார்களின்
கர்வலா செயசரணம்
கந்த கதம்ப நறங்க ளெழும்புகை
கருதல னேசரணம்

துன்னிய வாளது மின்னிய கோலுறு
துரைரா சனேசரணம்
துங்கம ணிக்கொலு தங்கி யிருந்திடு
துணைத்தாள் செயசரணம்.

## இராசா – சேனாதிபதி - தரு (விண்டமர் எ. மெ.)

தாளம் : அடதாளசாப்பு இராகம் : முகாரி

இரா ; மட்டொளிர் விட்டெறி
மங்காச் சுடர் முகக் கர்த்தனே — நகர்
இட்டணி தொட்டுமே மட்டுறக்
காத்திடென் சித்தமே.

சேனா : வட்டமணிப்புய மட்டவிழுந்
தொடை மார்பனே - இந்த
பட்டணமெங்குமே திட்டமாய்க்
காப்பேனுதாரனே

இரா : வெண்டர ளண்டிடு துண்டச்
சுடரளி தண்டமே-காராய்
தண்டமதண்டுபூ வண்டர்கள்
அண்டிடா தென்றுமே.

சேனா : முத்தொளிதத்திடு சித்திர
கோல்கரக் கத்தியே-எங்கும்
மெத்திடக் காவல்கள் வைத்திடு
வேன்புகழேத்தியே.

இரா : வண்டர்கள் மண்டிடக் கொண்டு
வதைத்திடு கர்த்தனே-இந்த
மண்டல மெங்குமே
இன்றளித்தேன் உந்தன் சித்தமே.

சேனா : தண்டுறு சண்டையில் நின்றுயிர்
கொண்டாரு முண்டதோ-எல்லா
அண்டலர் கண்டுள மண்டிடக்
காத்தலும் பண்டதே.

## இராசா எண்சீர் விருத்தம்

கங்குகதிர் அங்குமுடி தங்கி யோங்கி
கற்பிலகு மற்புயனே செப்பக் கேளும்
தங்குமணிக் கோட்டைமுன்றில் பேட்டை யோடு
தார்களனி சேர்பளனத் துறைகள் யாவும்
துங்கபடை யெங்குநிரை யங்கு நாட்டி
துட்டரெனு மொட்டலரை யிட்டே வெட்டி
பொங்குபுகழ் தங்குநக ரெங்குங் காவல்
பொட்டெனநீ நாட்டுவிறல் பெட்ப தாயே

இராசா வசனம் : தளகர்த்தனே ! நமது கோட்டை, கொத்தளங்கள் துறைமுகம்யாவும் எச்சரிக்கையான காவல் வைப்பீர்களாக.

## சேனுதிபதி சந்த விருத்தம்

திட்டமா யென்னுரை கேட்டு நடந்திடு
தீரமா சேனைகளே
வட்டமா யட்டகோ ணத்துறு துட்டர் கை
வெட்டி மடங்கிடவே
பட்டண முன்றியே திட்டமா யொன்றியே
பாட்டைகள் கோட்டைகளே
இட்டமா யொட்டலர் கிட்டிடா தெட்டவே
இன்னகர் காப்பீரே.

சேனுதிபதி வசனம் : படைத்தலைவர்களே ! கோட்டை கொத்தள மெங்கும் மிக்க அறுக்கையான காவல் வைப்பீர்களாக.

## வரேந்திர இராசா-மந்திரி-சேனுதிபதி பாட்டு

(ஒப்பருஞ் செல்லப்……)

இராகம் : புன்னுகவராளி — தாளம் : ரூபகம்

இரா : வித்துறுமுத் தாரமணி
விறல் மதியே கேளும்—இந்த
மெத்துரமத் தோன் தனக்கேன்
மேட்டிமை தானுமோ.

மந் : சததளத்தோர் ஷயமுகத்தார்
தவிசிறையே முறையே-அந்த
மதமடுத்தோன் தொழுமதத்தை
மாற்றிடில்என் குறையோ.

மறு பாட்டு (அப்பனே அப்பனே)

இராகம் : பலகம்ச தாளம் : ரூபகம்

இரா : தினமண்டர் கெடிமண்டுந் தீரவீர
திறமெத்து தளகர்த்தா பார தூர
எனவிண்டே பழிகொண்டா னுற்றுநீரே
ஏற்றதாய் மதியொன்று சொற்றுவீரே.

சேனு : நிறைமண்ட முறைகொண்ட நிருபர் போற்றும்
நிலைபதிமொழிவில கதுவேகூற்றம்
விறல்பெற்றே மதிதன்னை விட்டே கெட்டோன்
வினைகொண்டோன் தனைப்போன்றே
[மதியிற்றெட்டான்.

மறு பாட்டு (மாகருணைகர...... )

இராகம் : கீரவாணி தாளம் : அடதாளசாப்பு

இரா : மந்திரநேர்புய சுந்தரனே வய
மந்திரியே கேளும் பழி கொள்ளும்
தந்திரமாமதி சூரனுக் கோர் விதி
சாற்றுவீர் விரைந்தே யிப்போதே.

மந் : முழுமதியே யொளிர் குளிர் வதனும்புய
மேலிலங்கும் மதனு முன்னேரே
தொழுமுறை தூறியபழிமுறை தீர்த்திடேல்
தொல்லுல கோர் மதியார் அரசே.

## இரா-சேனு.மறு பாட்டு (மின்னலங்......)

இராகம் ; பூரிகல்யாணி
தாளம்: ஏகதாளம்

இரா : துன்னுமின்னுெளி மன்னு பொன்முடி
வன்னலங் கிர் தனே —நல்ல
சுன்னலஞ் சொலனே
சொல்லும் இன்னிலத்திவனே — எங்கள்
தேவரைப் பழித்தானிதற் கொரு
நீதிசெப்பிடுமே.

சேனு : திங்கள் தங்கி விளங் கலங்கிர் த
துங்கநற்றிதனே — நத்தும்
பங்கயப்பதனே
நித்தங் கங்கையைச் சிரமேல் — அணி
ஈசனைப்பழி நீசனுக்கொரு மோசமேயுரியே

## இராசா விருத்தம்

சுத்தமன மொத்துஎனக் குற்ற நீதி
சொற்றுமதி பெற்றுநிறை யமைச்ச னேகேள்
கத்தனெனை இத்தரையில் எத்திக் கோரும்
கழல்பணிய விழல்மொழியும் மதிய சூரன்
சித்தமது மெத்துதிற மத்தைப் போக்கச்
சீக்கிரத்தி லென்சமுக மழைப்ப தோடு
வித்தைநத்து வித்தகனுங் கவுன்சல் தன்னை
விரைந்துமொழி யறைந்துசணம் வருவிப் பாயே.

**இராசா வசனம்:** அமைச்சே ! மதியசூரனை என்சமுகம் கொண்டுவரும்படி மழுவரிடங் கற்பிப்பதோடு, எனது நாட்டின் புத்திநுட்ப மதிவல்லோனாகிய கவுன்சற் தலைவனையும் வரும்படி தெரிவிப்பீராக.

**மந்திரி வசனம்:** அப்படியே செய்கிறேன் அரசே.

## சேவகர் கவி

பொய்மாயம் செய்துமெங்கள் புரந்தரன் தனையே என்றும்
வைதிடு முனக்கிப்போது வலியுறு கவுன்சல் தானும்
மெய்யதை விளங்கிநீதி மேன்மையா யுரையே செய்ய
ஐயமே யின்றியுன்னை அழைத்துடன் வரச்சொன் னாரே.

## மரியதாசன் இன்னிசை

கற்பொருவு நெஞ்சுடைய கருவினையதே புரிந்த
துற்புறணியாயமைந்த தொல்லுலகோர்க்காய்ப் பொறுத்த
அற்புதனின் ஆழமதை ஆரறிய வல்லவரோ
பெட்புநிறை யற்புதனே போந்ததயைக் கடலே.

மரியதாசன் வசனம் அளவில்லாத இரக்கம் நிறைந்த தேவனே ! இவர்கள் அநியாயமாகப் புரியப்போகும் தீர்வையில் நின்று என்னைக் காத்து இரட்சியும் சுவாமி.

## மரியதாசன் பாட்டு (எந்தன்ம......)

இராகம் : நீலாம்புரி தாளம் : திரிபுடை

1. அந்தமாதியுட் பொருளே - எனக்
   கிந்தவேளை நின்னருளே
   தந்திட உன் பாதந்தானே - வெகு
   சிந்தையுடன் வேண்டினேனே

2. மின்மகுட மன்னவனே – புரி
   மோசமதில் முன்னவனே
   உன்னருளை யெண்ணினேனே - நிலை
   நன்னய மருளுங் கோனே.

## கவுண்சல் தோற்றம் - விருத்தம்

பொன்னொளிக் கவசம் மார்பில்
புரண்டெழு புதிய தான
வன்னமா மணிகள் தீட்டி
வளம்பெறு வரேந்தி ரர்க்கு
முன்னரும் நீதி தன்னை
முறைமையாய் விளக்கி யோதும்
நன்னயக் கவுண்சல் தானும்
நயம்பெறுஞ் சபைவந் தானே.

## கவுண்சல் பாட்டு (ஒப்பரிய......)

இராகம் : தோடி　　　　　　　　　　　　　　　　தாளம் : அட

1. வால சந்ர மணிமகுட
கோல துங்க கரனே
சால சங்கச் சபைக்கழைத்த
சீல மென்னு தானே.

2. எந்த வழக்கெனினு மதன்
சொந்த முறை யோர்ந்தே
விந்தையுடன் விளங்கி நிறை
விதித்திடு வேன் தேர்ந்தே.

3. போட்டிவரின் புரட்டி மொழி
பொருந்திடவே காட்டி
கூட்டி யெந்தன் வல்லபத்தால்
கொள் புகழே நாட்டி

4. அண்ட மதுவே செறிந்து
அலைகள் நிறை கொண்ட
கண்ட மைந்தில் எந்தனைப்போல்
கணிப் புடையோர் உண்டோ

### கவுண்சல் சந்த விருத்தம்

வச்சிர பச்சையும் மெச்ச விழைத்த
வரத்தி மிலச்சிடவே
உச்சித ரெத்தின முத்த மிழைத்த
மிகுத்த மணித்தவிசில்
மெச்சிடு தத்துவ மெத்தர சுற்றிடு
மேவணி பூபனேநீர்
உச்சித மாவிழை இச்சபை மீதழை
உள்ளுறை விள்ளுவீரே.

## இராசா விருத்தம்

கருதரும் ஞான மோதுங்
  கவுண்சலின் தலைவா கேளும்
திருமரு மதிய சூரன்
  தேவரைப் பழித்த தாலே
அரிதொரு நயத்தி னாலும்
  ஆக்கினை யாலும் மாறான்
பெருமையாய் விளங்கித் தீர்வை
  பெட்புடன் புரிகுவீரே.

இராசா வசனம் : அநேக கலைக்கியானங்களைக் கற்றுணர்ந்த கவுண்சல் தலைவனே ! எனது தானுபதியாகிய மதியசூரனென்பவன் எமது மதத்தை இகழ்ந்து கிறீஸ்து மார்க்கத்தில் சேர்ந்ததுமன்றி அரசனாகிய எனது சொல்லையும் மீறி நடந்ததினால் அவனுக்கு அநேக ஆக்கினைகள் புரிந்து அரும் சிறையுள் அடைத்து வைத்திருந்தேன். இப்போது அவனை என்ன செய்யலாமென்பதை ஆலோசனை செய்து தீர்ப்புக் கூறுவீராக.

## கவுண்சல் விருத்தம்

தேர்ந்திடு மறிவில் மிக்காய்
  தேவரைப் பழித்தா யென்றும்
பேர்ந்துமே புதிதாம் மறையில்
  பிரியமாய்ப் புகுந்தா யென்றும்
ஓர்ந்துமே யரசன் சொல்லை
  ஒப்பிட மறுத்தா யென்றும்
கூர்ந்துமே வரித்தார் குற்றம்
  கூறுவாய்ப் பிறப்புத் தானே.

கவுண்சல் வசனம் : குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கும் மதிய சூரனே ! நீர் எமது அரசர் கட்டளையை மறுத்தது மெய்யோ? எமது தெய்வங்களை நிந்தனை புரிந்தது மெய்யோ? உம்மீது சபையார் சாட்டிய குற்றங்களால் நீர் துரோகியாகக் காணப்படுகிறீர். ஆகவே உமது வாய்ப் பிறப்பைக் கூறுவீர் மதியசூரனே.

## மரியதாசன் ஆசிரிய விருத்தம்

வாய்ப்பிறப் பதுவே வழுத்திடு மென்ற
வரைவிலா மதிநிறைந் தோங்கும்
வலிமைசேர் கவுண்சல் தலைவனே கேளும்
வன்மையா யரசனின் மொழிக்கே
ஏய்திறை வாங்க ஏகிடும் போது
எழிலுறு தேவதா சுடனே
பெருவனம் கடந்தே யிடைவழி தனிலே
பேதக முறுமும் தேவர்
மாய்ப்புறத் தேவ தாசனை மிரட்ட
மரிநவத் தாலழ லோட்ட
மருளது நீங்கிக் குருபரன் யேசு
மறைதனில் புகுந்தது மெய்யே
தாய்ப்புறு மரசன் தகமைசேர் அணிகள்
தான்களைந் திட்டதே யன்றி
தவிசிறை தனக்கு ஒருகுறை தானும்
தரைதனில் புரிந்தில னறியே

மரியதாசன் வசனம் : உண்மையாகவும் உறுதியாகவும் நான் சொல்வது அத்தனையும் உண்மை. இனியெதுவும் உங்கள் விருப்பம் நீதித் துரையே.

### இராசா - கவுண்சல் பாட்டு (சற்குரு )

கவு : இலங்கிடு மணி திகழ் செங்கோலனே
இவனிங்குசெய் தீங்குரையும் சீலனே.

இரா : சங்கலை பொங்கு கலைத் துங்கனே மெத்தச்
சங்கையில் செய்தான் தேவர் பங்கமே,

கவு : வெற்புய ராசஇளஞ் சிங்கமே இவன்
வேறுதான் புரிகுறைகள் கூறுமே

இரா : மட்டவிழ் மாலைபுனை மார்பனே - எந்தன்
மகிமை சேர் கப்ரணையே வசைசொன்னான்

கவு : பாங்கென விளங்கு தாமப் பாந்தனே-வேறு
பாதகஞ் செய்திலனோ பகருமே

இரா : திறல்மதி விறலுரைக்குந் தீரனே-இவன்
கிறையுற்றே வருமொழி நிறையற்றான்

கவு : கதிரங்க முடிதங்கு தீரனே-நீரும்
கருத்தினில் மறைவின்றி வழுத்துமே

இரா : மதிபொங்கும் மாண்புளகெம் பீரனே-மெத்த
மாறினான் எதிருரை கூறினான்.

மரி - கவுண்சல் - மந்திரி - சேனா. பாட்டு (மிண்டம...)

கவு : மந்திர சுந்தர விந்தர நேர்புய
மந்திரி இவன்
விந்தையுறும் மறை சிந்தையு
வந்ததேன் தந்திரி

மந் : மண்டள கேயண்டும் கொண்ட
கவுண்சல் தலைவனே தானும்
பண்டறிவுள்ளவன் என்றும்
மமதை குலைவனே

கவு : வள மெதது நகரத்து தளகர்த்தனே
யுமக் கேதோ - இவன்
வசை சொன்ன விதமென்ன
இதை முன்னமெந் தனுக்கோதே

சேனா : திறமுந்து முறைசந்த அறிவுந்திடும்
பொறையாளனே - நாங்கள்
நித்தம் தொழும் தேவர்
நத்துங் கணமென்றானுளனே

கவு : மண்டல யாளிறை கொண்டமறை
பழி கூறியே — வசை
விண்டது ஏதென வோதிடு
வாயுளந் தேறியே.

மரிய : மன்னருக் கேற்றிடு மின்
மொழி சாற்றிடு தீரனே-உங்கள்
வன்னர கானதில் மன்னிடுந்
தேவரைத் துதியனே

கவு ; மண்டல மென்று மேகொண்டு
துதி பிரதானியே-இந்த
வண்டனுக்கென் செய்யலா
மென்று மேயவதானியே.

மந் : கொத்தணிதத்திடு முத்தணி
யாரமோ டாழியே-சூடும்
கத்தனே கேளுமிப் பித்தன்
கொலைக் குற்றவாளியே,

கவு : அண்டலர் மண்டிடக் கொண்ட
படைக் கெடிக்கப்ரனே-நாங்கள்
கொண்ட வழக்கினுக் கண்டும்
மதிசொல்லும் ஒப்பவே.

சேனு : சட்டமதொட்டியே கெட்டியாய்
நீதி சொல் சங்கனே-இவன்
கட்டளைச் சட்டமுறைக்
குற்றவாளியே துங்கனே.

கவு : மாறுற் றரசுரை மீறுற்றிடும்
மதிமூடனே-நீயும்
வீறுற்றரண்மனை தூறுற்றதே
துரை கேடனே.

மரி : பண்டன லண்டியே மாண்ட
கணமினிப் போற்றிடேன்-தலை
துண்டென வீழ்த்தினும் அண்டர்
பரன்மறை மாற்றிடேன்.

கவுன்சல் வசனம் : மதிய சூரனே ! கடைசி முறையாகவும் கேட்கி றேன். உனக்குத் தீர்ப்பளிக்குமுன் உனது மனக்கருத்து ஏதென ஓதுவாயாக.

### மரியதாசன் பரணி

குறையான முறையேதும் இறையோனுக்கு
குணமார மனதாரச் செய்தேனில்லை
கறையான முறைதீர்க்கில் ககனலோக
கதிர்வானச் சுடரோனின் கருணைதானே.

மரியதாசன் வசனம் : கவுன்சல் தலைவனே ! மற்றும் சங்கத்தோரே எனது கடைசியான முடிவைக் கூறிவிட்டேன்.

### கவுன்சல் ஆசிரிய விருத்தம்

சீர்பெறு வேந்தே திகழ்சபை யோரே
தேர்முறை நீதியே சொல்வேன்
சிந்து சூழுலக மெங்குமே போற்றும்
தேவரை யிகழ்ந்தது மன்றி

பார்தனில் வேறு மறைதனில் புகுந்து
பரிவுட னரசையே மாற்றி
பார்த்திபன் சொல்லை ஏற்றிட மறுத்து
பகர்தள பதியையு மேசி

பேர்பெறு நகரம் முழுவதுங் குழப்பி
பெருத்திடிச் சபையையும் மதியாப்
பேர்ந்திடு தேவ துரோகமு மரச
பெரும்புரை புரிந்ததி னாலே

கார்மனக் கொடியோன் கட்டளைச் சட்ட
கருதிடு மிலக்க மாயிரத்து
கனமுறு பத்தாம் பிரிவினின் படிக்கு
கழுவதில் கொல்வது முறையே.

கவுன்சல் வசனம் : இந்த மதியசூரனென்னும் குற்றவாளி தேவதுரோகம், அரசதுரோகம் ஆகிய இரு குற்றங்கள் புரிந்ததினால் எமது சட்டமுறைப்படி கழுவில் ஏற்றிக் கொள்வதே தீர்வை. இதை நிறைவேற்றுவது தங்கள் இஷ்டம் மன்னர் மன்னவரே.

## இராசா சந்த விருத்தம்

கட்டளை இட்டிட வெட்டியே கொட்டிடு
கட்டுர மழுவர்களே
இட்ட முடன்அடி தொட்டு வணங்கிடு
மட்டில்லாத் தேவரையே
கட்டழல் கொட்டிடு துட்ட முடக்கழு
கட்டுரை யிட்டோனைக்
கொட்ட மடக்கிடு நட்ட கழுக்கொடு
கோட்டியே கொல்வீரே

இராசா வசனம் : வீரகொலைச் சேவகரே ! இந்தத் துட்ட துரோகி யாகிய மதிசூரனைச் கழுவிலேற்றிக் கொலை செய்வீர்களாக.

மழுவர் வசனம் : அப்படியே செய்கிறோம் மகாராசாவே.

## மரியதாசன் பரணி

முடி சூடிப் படியாளும் கொடியோன் தீர்வை
முற்றுமனி யாயமது முடிவில்லானே
அடியானின் மிடிதீர அருளே தந்து
அவனிதனில் ஆதரித்து அருளுவீரே.

## மரியதாசன் பரணித் தரு

இராகம் : நீலாம்புரி　　　　தாளம் : ரூபகம்

இந்தப் — படிமீது உனையல்லால்
துணை வேறு இல்லையே பரமநாதா
அருள் சொரி விமல போதா - உந்தன்
அரிய மலர்ப்பதமே விரவியருள வேண்டும்
வேத நாதா வினையகற்றும் ஞானரூபா

2. பொல்லா — அனியாய மாயரசன் முனிவா
னென்னுயிர் தன்னைப் பதைக்கத்தானே
கொடுமையாய் வதைக்கத்தானே — உந்தன்
கனிவான பதம்நம்பித் துணிவாய் யானுயிர் விடக்
காத்திடாயே உனது பதஞ் சேர்த்திடாயே.

## சேவகர் விருத்தம்

இறையவன் வரேந்திர மன்னன்
எமக்குரைத் திட்ட வண்ணம்
மறைபழித் திட்டோன் தன்னை
மாட்டியே கழுவில் நாமும்
பொறையின்றி யுதிரம் பொங்கப்
பொருந்திடத் தலையில் ஆப்பும்
முறையதாய்ப் பீறத் தானே
முன்கழு வேற்று வோமே

சேவகர் வசனம்:-சீக்கரமாகக் கழுவில் கொல்வதற்கு இந்த ஏணி மீது ஏறுவாயாக.

## மரியதாசன் தாழிசை

நாடியே சிலுவை நீடியே யறைய
நாணியே சிரமுங் கோணியே
நட்டனை புரிந்து கொட்டனுன் வலது
நன்விலாவி லோரீட்டியால்
கோட்டிசெய் ததற்குத் தேட்டமாயவர்க்கு
ஓர்விழி யொளிரச் செய்ததும்
கொண்டிரங்கி யெனைத் திண்டிறல் அரசின்
கொடிய வேதனையின் போதிலே
தேட்ட மாயழியும் வாட்டமாம் புவியின்
தீய மாய்கையி லலைந்துமே
தேடரும் உமது வீடதே மறந்து
தெவிட்டிடாப் பதமடுத்துமே
நீட்டுமுன் கிருபை நாட்டி யெந்தனையும்
நின்பதந் தனிலே சேர்த்திட
நிறையுமுள்ளமதை முறையி லீந்தருளும்
நித்தனே பரம கர்த்தனே.

மரியதாசன் வசனம்:- அளவில்லாத இரக்கம் நிறைந்த தேவனே இவர்கள் என்னை அநியாய மாக வதைக்கப் போகிருர்கள்! அடியேனை நற்கதியில் சேர்த்தருளும் தேவனே.

## மரியதாசன் உலா

அன்பேயருட்கடலே அகில நிறைந் தோங்குபரா
என்பேரிலேயிரங்கி இரட்சைசெய்ய வேண்டினனே.
முந்துசின வரசன் மோசமுற எந்தனையே
பந்தமது செய்யும் பாங்கறியேன் இத்தரையில்
நானறியா தேயுமக்கு நானிலத்தில் செய்தகுறை
ஆனதனையே பொறுத்து ஆண்டருள்வீர் ஈசாநீர்
ஞான நிறை நன்மதியோ டானதுமே யறியேன்
ஈனமதே யெந்தன் இணைப்பிறப்பே ஆனாலும்
ஆவியகலிவ் வேளை ஐயா நீர்பார்த் திரங்கி
தாவியெனைத் தற்காப்ப தும்கடனே

## சம்மனசு தோற்றம் : கவி

சச்சிதானந்த மோட்ச தளிதனிற் களியே கொள்ளும்
அட்சய மிலகு சூட்ச மமைந்திடு மாஞ்சு தானும்
இச்செகம் மரிய தாசன் இடர்தனில் மதியே சொல்ல
அட்சய தேவன் சொல்லால் அவனியில் தோற்றி னாரே,

## சம்மனசு பாட்டு (கத்தனை நித...)

இராகம் : பைரவி — தாளம் : ஏகம்

1. பூவுலகி லேமரியின்
நேசமுறும் மைந்தனே கேள்
பொற்பதன் அருள் உற்றுமே

2. மின்பொருவ தானதிலுன்
அன்பதனையே யறிந்து
இன்பதாய் உந்தன் முன்பிலே

3. ஏற்றமுடன் உந்தனுக்கு
தேறுதல் சொல்ல விடுத்தார்
ஏகனே வலப்பாகனே.

4. பெலப்புடம்பு வாழ்வதற்கு
கசப்பவுடதம் பருகல்
போலவே யுனக் கேலவே

5. பொன்னுலக ஆக்கினையால்
நன்றுபுட மிட்டதுபோல்
பொருந்தினாய் மனந்திருந்தினாய்

## சம்மனசு மறுபாட்டு (தற்பரர்க்கா...)

இராகம் : செஞ்சுருட்டி தாளம் : ரூபகம்

1. தற்பரர்க்காய் வீந்தமரி தாசனே கேளாய் நிறை
சம்பிரம தேவனின் தாள் சேர்ந்து நீ பாராய்

2. முத்தியின்பமே சுரந்து முகந்து நீ பாராய் - அதில்
முழுதுமுந்தன் பிரியமெல்லாம் சரிவரக் காண்பாய்

3. மாய்வுலக மயல்தனிலே மங்காதொளிர்ந்தாய்-சுடர்
மங்கிடாதொளிர்நிலவு மானியம் பெற்றாய்.

4. மோகமில்லை நோவுமில்லை தாகமுமில்லை - இந்த
ஆகமடங்காப் பரனின் அன்பதற்கெல்லை.

5. பஞ்புலனே யுணரா பரம ஆனந்தம் - உனக்
கென்றுமென்றுமே தருமே ஏகனே சொந்தம்

சம்மனசு வசனம் : ஏக தேவனின் நேசம் மறவாத மரியதாசனே! கருணையங்கடலாகிய கடவுள் உன்மீது அன்புகொண்டு நீ படும் கஷ்டத்தை நீக்கி உனக்குத் தேறுதல் கூறுமாறு அவர் தூதெனை யனுப்பினார். தாசனே! மோட்சத்தில் உனக்காக ஆயத்தப்ப டுத்தப்பட்ட கிரீடத்தையும் சிம்மாசனத்தையும் சுதந்தரித்துக் கொள்ளச் சீக்கரம் வருவாய் என்பதைக் கூறவே நான் இங்கு அனுப்பப்பட்டேன். மனத்திடனாக இருந்துகொள். நான் வருகி றேன் மரியதாசனே.

## சேவகர் பாட்டு (அந்தரவ...)

இராகம் : மோகனம் தாளம் : ஆதி

1. நாட்டிய கழுவில் மாட்டியேயிவனை
நட்டணை செய்திட இட்டமுடன்
பூட்டியிறுக்கி முறுக்கியுறுத்திடப்
பிடியெடா தோழா திடமுடனே

## மரியதாசன் காதல்

ஆனமுதற் பொருளே ஆரணமெய் ஞானபரா
ஈனனெனக் கிவ்வேளை இரங்கியருள் கூருமையா
நட்டணைகள் செய்துஎனை நடத்துகிறார் கோறணியாய்
இட்டமுடனே பொறுக்க எனக்கு அருள்தாராயே

## சேவகர்

2. படியிடையெவரு மடிதொழுதேவரை
பண்ணிடு நளினத் திண்ணியனை
கெடிதுறு திரிகைக் கிடையுறுமணிபோல்
கொறகொறவென்றே யுடலதிலாணி

## மரியதாசன் காதல்

ஆயமரிசேயே அமல பிதாவின் நேயா
நாயேன் எனக்கிரங்கி நற்றிடனே தந்தருளே
நாளு மடியேன் புரிந்த நட்டணைகள் கொஞ்சமல்ல
மாளாப் பழியதற்காய் மாண்டுயிரைத் தந்தீரே,

## சேவகர்

3. இறுகிய கழுவின் முறுகியதிரிகை
இறுத்து மேயாணி செலுத்திடவே
இறையுரை மறுத்தே மறுமறை புகுந்தோன்
இடுதிறல் உறுமறம் மறுகிடவே.

## மரியதாசன் காதல்

அஞ்ஞான மானதிலே அழுந்தி நிதம் அலையாமல்
மெஞ்ஞானந் தந்துமெனே மேன்மைபெறச் செய்தனையே
கன்மனத்தோர் கோட்டிக் கழுவதனி லேமாட்டி
புன்மையுற எந்தனையும் புரியுமிந்த ஆக்கினையில்

## சேவகர்

4. உந்தியிலுந்து மந்த மோராணி
ஊறு கபாலத் தேறிடவே
பிய்ந்துமேயுடலந் தொய்ந்துமே யடலும்
பீறிடவே மதிமாறிடவே

## மரியதாசன் தேவாரம்

நிலைதளர்ந் திட்டே நானும்
நெட்டுயிர்ப் பெறிந்தே கைகால்
அலைவதோ கடின மாகி
அசைந்திடா மயங்கிச் சோர்ந்தே
நிலவுல கதனை விட்டு
நேத்திரஞ் சுழன்று மூடி
தலையதில் ஆணி பீறத்
தயங்கிடா தாட்கொள் வீரே

## சேவகர் விருத்தம்

மெச்சியே மறைபழித்தோன் மெய்யது சிதைந்து பீற
அச்சதை விறைக்கச் சுற்றி அவனுச்சி கிழிந்து போக
மெச்சியே யரச ரெம்மை மேல்வெகு மதியே யீய
இச்செக மெமது வேலை இனிதுடன் முடித்தி டோமே

சேவகர் வசனம்: வாரும் தோழனே! சீக்கிரமாக எங்கள் வேலையை முடித்துவிடுவோம்.

## மரியதாசன் தேவாரம்

ஆதிதன் புதல்வ ஞான அட்சயப் பொருளே தேவா
சோதியின் திரள்கொண் டோங்கி சொலித்திடு சுடரேஇப்போ
ஆவியே கலங்கி நானும் அடங்கியே சுவாசம் விட்டு
நீதிநின் னடியிற் சேர நிறையருள் தருகு வீரே

மரியதாசன் வசனம்: யேசுவே மரியாயே சூசையப்பரே என்னுத்து மத்தை உங்கள் கையில் ஒப்புக்கொடுக்கிறேன். அதை நற்கதி யில் சேர்த்தருளு வீர்களாக.

## அழகேச இராசனின்

### மந்திரி ஆசிரிய விருத்தம்

நிலவுவெண் கதிர்நீண் டிலகு மின்மணிகள்
நிரைநிரை பொத்திடு முடியோய்
நிறைசுடர்க் கதிரோன் முறைபரந் தெறிக்கும்
நீள்கவிக் குடைக்குளே யுலகை

உலவுதன் சிறப்பாய் உற்றர சியற்றும்
ஒன்னலர்க் கின்னிலத் தேறே
உற்றதோர் நவத்தைச் சொற்றுவேன் கேளும்
உலகெலா மிறைஞ்சிடு தரனே

நலவுமெம் தேச நிலகுடி யாகும்
நல்பதி வணிகமா குலத்தோன்
நலத்துறு நகராம் வலாரிமா புரிக்கே
நாட்டமா யேகிடும் போது

சிலையது வணக்கத் தீங்கனும் வரேந்திரன்
சினந்ததி சீற்றமா யிரைந்து
சீதமா வதனத் தேவதா சனையே
சிறையது பிடித்தன னறியே.

## அழகேச இராசா

## கழிநெடில் ஆசிரியவிருத்தம்

ஓரா யிரங் கதிர்கள் ஒழுங்கிட் டெழுஞ்சுடரும்
உருண்டுவரு முலக மெல்லாம்
ஒளிபெற்ற நவரெத்ன மணிசித்ர தனுவுற்றே
ஒட்டலரை வெட்டி யெறிந்தே

தாரா யிரம்புனைந்த தவிசுற்ற முடிமன்னர்
தண்டுறுமென் நாம மறிகில்
தட்டிட்டு முட்டிட்டு கெட்டுள்ள மேங்கியே
தடதடத் தொடுங்கி நிற்பர்

பேரா யிலங்குதிற மோராது வரேந்திரன்
பேதையென் றெனைநினைந்தான்
பட்டியுறு கெட்டகதை முட்டவரி தொட்டதோ
பாடென்ன கேடென்னவாய்

சீரா யிலங்குபடை தனையுந்து மவநொந்து
சினமுந்தி யழல்கொந்தெழ
திட்டமுட னட்டதிசை இட்டுமெரி கொட்டியவன்
தீங்குபழி வாங்கு வேனே

## இராசா சிந்து

இராகம் : மோகனம் தாளம் : ஆதி

1. திடத்துட னடக்குவேனே—தீரமா சேனைகள்
விடுத்தமர் தொடக்குவேனே
திடத்துட னடக்குவேனே
விடுத்தமர் தொடக்குவேனே
ஈதல பாதல மாதல மீதுள
மேனலராகுல மாகுழையாயுள
சாலுறு மாலொடு காலனு மேயழ
வேலது விட்டுமல் லோலகல் லோலமாய் (திட)

2. தனத்தினில் மிடுக்கதாமோ — அன்றிடில் வென்றிட
மனத்தினில் துடுக்குத்தானே
    தனத்தினில் மிடுக்கதாமோ
    மனத்தினில் துடுக்குத்தானே
தண்டுறு மெண்டிறல் இண்டு மதிர்ந்திட
கொண்டுறு மன்னகர் இண்டுமழிந்திட
குண்டு பீரங்கிகள் விண்டு மதிர்ந்திட
ரண்டு பூமண்டலங் கண்டு மடங்கிட (திட)

3. வரத்தினில் மிகுத்தமரோனே — அழகேசனென்றால்
சிரத்தையுடனே பணிவானே
    வரத்தினில் மிகுத்தமரோனே
    சிரத்தையுடனே பணிவானே
வண்டனே இண்டுமே துண்டமா கண்டமாய்
கொண்டுமே மண்டைகள் துண்டு படக்கெடி
அண்டல மண்டல மிண்டு மடங்கலும்
எண்டுல விண்டுமே அண்டையோர் மண்டிட (திட)

4. ரெத்னமுடி தத்துமரசர் — தினந்தினம்வாய்
பொத்திப்பதம் முத்தி செய்யவே
    ரெத்னமுடி தத்தரசர்
    பொத்திப்பதம் முத்திசெய்யவே
இத்தரை என்வலி சற்று மறிந்திடா
னுற்றநகர்க்கெரி இட்டு வருத்தியே
மத்த கயத்த வயத்த புயத்திரு
சத்துவ மெத்து மகத்துவ நாட்டினே (திட)

## இராசா விருத்தம்

அடிபணிந் தலங்க ஒன்னார் ஆரண மதிக ளோதும்
துடிபெறு மமைச்ச னேகேள் தூவலொன் றுடனே கீறி
கொடிதுறு வரேந்தி ரன்கைக் கொடுசிறை விடுக்கா விட்டால்
படையொடு வருவோமென்று பகர்மொழி தெரிவிப் பாயே

இராசா வசனம் : அமைச்சே! இன்றே வரேந்திர மன்னுக்கு சிறைப்பட்டவனை உடனே விடுவிக்கும்படி லிகிதம் வரைந்து அனுப்பி வைப்பீராக.

மந்திரி வசனம் : அப்படியே செய்கிறேன் மன்னவரே:

## தூதுவன் பாட்டு (கண்டதெல்...)

இராகம் : செஞ்சுருட்டி தாளம் : ஆதி

1. மட்டவுளுந் தொடையான் இட்ட உரைப்படியான்
மாற்றமின்றியே வரேந்ர னேற்ற மனை செல்வேன்

2. மந்திர நேர்புயத்தான் சிந்தை இளவயத்தான்
தந்திடுங் கடிதமதை முந்தவே கொண்டேயான்

3. காரமா பிரசண்ட திரமது கொண்டே
காற்றினிற் கடிதெனவே தோற்றமுடன் செல்வேன்

4. பத்திரமே கொடுத்தே உத்தரமே யெடுத்தே
பாங்குமொழியேயறிந்து யீங்கரசர்க்குரைப்பேன்

## தூதுவன் விருத்தம்

ஒளிதங்கு மகுடம் தாங்கும் ஒன்னலர்க் கேறே கேளும்
அளிதங்கு வாகை சூடும் அரசனு மழகே சன்தான்
தளிமுன்பு தூவல் ஒன்று தப்பிலா துமக்கே யீந்து
களிதங்கு பதிலே கொண்டு கடிதென வரச்சொன் னரே

தூதுவன் வசனம் : அரசே! தங்களிடம் இந்தக் கடிதம்கொடுத்து பதில் பெற்று வரும்படி அழகேச மகாராசா தெரிவித்தார் அறிவீராக.

## வரேந்திரன் மந்திரி ஓலை வாசித்தல்
## ஆசிரிய விருத்தம்

அழகொளி திகழும் வலாரிமா புரியின்
அடலுறு வரேந்ரனே கேளாய்
அரசருக் கேறென் றென்றனை மதியா
அருஞ்சிறை பிடித்தனை யேனே

அழிவுறு காலம் அணுகிவந் ததுவோ
அத்தனை செறுவமு மாச்சோ
அறியாமை தன்னை இம்முறை பொறுத்தேன்
அதிசணந் தன்னிலே யெந்தன்

பழியதைத் தேடாச் சிறையதை விடுத்து
பணிவுடன் இருந்தர சியற்று
பார்தனி லெந்தன் கட்டளை மீறிப்
பாங்குறும் செறுவமே கொண்டால்

வழிபெறுன் நாட்டை வன்னெரிக் கிட்டு
வலியுட னுனைச்சிறை பிடிப்பேன்
வழரேசர் போற்றும் அழகே சனிட்ட
வரைவுறு திருமுக மிதுவே.

### வரேந்திரன் கழிநெடில் ஆசிரியம்

இராகம் : மோகனம் தாளம் : ஆதி

சீரேறும் வரேந்திரனென் நாமமது கேட்டிடில்
திக்கெட்டும் நெக்கி விடுமே
சேருமம ரோனினிறை ஆகினவன் தானுமே
திகைத்துவாய் புதைத்து நிற்பான்

நேரேறும் மலைகள்தான் வேரோடு பாறுமே
நேர்புவன மானதுங் குலுங்குமே
நேமியனல் விதுருமே பூமிசுட ரதிருமே
நிலையாழி சலஞ்சு வறுமே

தாரேறு மெந்தனுடை தத்துவம தறிந்திடா
தானழ கேசன் என்போன்
தண்டுடன் வந்ததிக மிண்டுபடை பொருதவே
தானதிக மமதை கொண்டான்

பேரேறு மென்னெதிரே மாறுக வந்திடும்
படையதைச் சூறை யாக்கி
பார்மீது அவனையும் பந்தித்து நானுமே
பதைக்கவதை புரிகு வேனே,

## வரேந்திரன் சிந்து

1. விட்டிடேனென்றே யுரையடா — சிறையுள் ளோனை
விட்டிடேனென்றே யுரையடா
விட்டி டேனென்றே யுரைத்துப்
பட்டணத்தைச் சுட்டெரித்து
கெட்டியுடலே சரித்து மட்டியவன் மக்கரிக்க (விட்)

2. மிக்குறு செறுவமே போக்கி — அவனுடலைக்
குக்குடன் நரிகளுக்கீக்கி
அண்ட கடாகம் வெடிக்க
மண்டலத் துள்ளோர் வெடிக்க
வண்ட னுடலம் வெடிக்க கண்டவர் மனந்துடிக்க(விட்)

3. அப்படிக் செறுவமென்னடா — அவன் படையோ
டிப்படிவரவே சொல்லடா
தப்பிலியவன் மதத்தை
ஒப்பியேயவன் திறத்தை
சிக்கிடக் கைகா லுரத்தைநெக்கிடச்செய்வேன்சிரத்தை

## வரேந்திரன் விருத்தம்

தாக்கிமன வேக்க மின்றி நீக்கமாக
தண்டுபழி கொண்டுமொழி விண்டோன் தன்னை
நாக்குவிழி மூக்குமெய்யும் நலிய வீரல்
நக்குலிக்க அக்குதுண்டாய் நறுக்கி யீன

காக்கைகழு கீக்கியிரை யாக்கி யேநான்
கண்டமது துண்டுபட உனையுங் கொல்வேன்
ஆக்கமுறு தூதெனவே நோக்க மாக
அண்டியிங்கு வந்ததினு லுயிர்தந் தேனே.

**வரேந்திரன் வசனம்:** நீயொரு அரசனின் தூதுவனுக வந்தமையால் உனக்கு உயிர்ப்பிச்சையீந்தேன். சிறையில் இருப்பவனை விட முடியாதென்றும், போர் தொடுக்கத் தயாரென்றும் கூறுவாயாக

## தூதுவன் பாட்டு (ஆரறியப் எ.மெ.)

இராகம் : சாவேரி தாளம் : ஆதி

பல்லவி

நாவினுல் உரைக்கஅரிதே நான் பட்ட பாட்டை
நாவினுல் உரைக்க அரிதே

சரணம்

1. நாவினுல் உரைக்அரிதென் ஆருயிர்பெற்றேன் பெரிது
நாட்டுமரிப் பளேயிலே கேட்டு நரிபுகுந்தன்ன
கூட்டுசின மோடரசன் தாட்டிக முடன்நிமிர்ந்து
நாற்றிசை யதிரவசை சாற்றினதை எந்தனெரு...

2. உற்றிடுங் கடிதமதைப் பற்றின வுடனெழுந்து
புற்றடை கிடக்கும்நாக முற்றடைச் சீற்ற மெனவே
உற்ருளிர் வாளேயுறுத்து சொற்றதரமே கறுத்து
கொற்றவனெனே வெறுக்கப் பற்றுடல் பதறினதை...

3. போதரசனே விடுத்த நீத தூவலுக்கடுத்து
ஏதமொழியே தொடுத்து தூதெனே விடுத்திடென்ன
வாதுடன் சினந்தெழுந்த போதிலென்னகங் கலங்கி
வட்டமுறு பருந்துகைப் பட்டரவெனத் துடித்தல்...

## தூதுவன் விருத்தம்

பொன்திறல் மலர்த்தாள் போற்றி
　　புராதிபா புகலக் கேளும்
சென்றுமே வரேந்திரன் முன்னே
　　திருமுகங் கொடுத்தே னென்மேல்
துன்றிடு புலிபோற் சீறித்
　　தூதெனக் குயிர்தந் தானும்
வன்சிறை விடுவ தில்லை
　　வலியபோர்க் கெழச்சொரன் ஞனே.

## அழகேசன் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

ஈரூந்த காலத்து ஊழியென எவ்வுலகும்
எப்பொருளு மெங்கு மொன்ருய்
எரிந்தழல் சொரிந்தது விரைந்துமே பொரிந்து
எங்குமே பரந்து விடினும்

பேருந்த முண்டவரு ஒட்டலரை நெட்டியே
வெட்டியெறிந் திட்ட விறலோன்
பேர்ந்துவரு சிங்கமும் ஆர்ந்துவிடு மம்பெனப்
பொட்டெனப் பறந்து சென்று

தாரூந்த மாகவே கோட்டைகொத் தளங்களும்
தகர்ந்துபொடி பொடிய தாக்கி
தண்டமது வேகொண்டு கண்டபல சேனையின்
மண்டைகள் பிளந்து விடவே

வீரூந்த மாக்கியே விண்டுக ளெழும்பவே
விண்ணவர்கள் கண்ணை மறைக்க
விரைவிலவ னைப்பிணித்துக் கைப்பிடிய தாகவே
விறலுடன் கொண்டு வருவேன்

## அழகேசன் சிந்து

இராகம் : மோகனம் தாளம் : ஆதி

பல்லவி

கெட்டமதி கொண்டு விட்டானே-வரேந்திரன்என்போன்
கெட்டமதி கொண்டு விட்டானே.
கெட்டமதி தொட்டெனது இட்டமுறு சட்டமது
நட்டணைசெய் துட்டனைநான் வெட்டியுயிர்கொட்டிடுவேன்
(கெட்)

அனுபல்லவி

துந்துமி யெனவே தூறிச் சிந்திடுமிரத்த மேறி
அந்தரத் தெழுந்துமாறி கந்தரம் புவியிற்பாற (கெட்)

சரணம்

1. பவளத்து மழகொத்த தவழத்து இதமொத்த
அளிநத்து நளினத்து புகழ்தத்து வம்மிகுத்த
போசனென் றறியானே — அழகேச
ராசனென் றறியானே — இது சணத்தில்

நாட்டைநத்தி யேபிடித்துக்
கோட்டைகொத் தளம் பொடித்து
வாட்டிமெத்தக் காலொடித்து
ஆட்டியகலத்தே பிடித்து ... (கெட்)

2. முத்துடன் ரெத்தினம் வைத்து சித்திர மதாயிழைத்த
வித்துரும ஆடைநத்து சத்திரிய வம்மிசத்து
குலத்துங்கர் எனை நாளும் — தேடிவந்து
மலர்தங்கும் பதந்தாழ—மெத்தும்அவன்

அண்ட மிண்டு கொண்டமதி
மிண்டனிடஞ் சென்றுதலை
துண்டெனப் பறந்துருள
கண்டகங்கைக் கொண்டரிவேன் (கெட்)

3. நண்ணியவனைப் பிடித்து கண்ணில் மிளகிட்டடித்து
திண்ணியன் மனந்துடித்து எண்ணுசப தம்முடித்து
பொங்கியே சிரமதனைத் — துகள்துகளாய்
தங்கியே உரமதனைப் — படிதன்னில்

வெக்கியவன் கொக்கரித்து
சுக்கல் சுக்கலாய் பிரித்து
சக்கரத்திலே திரித்து
அக்கினிக்கிட்டே யெரிப்பேன் (கெட்)

4. ஒப்புமெந்தன் பேர்விளங்க பப்பரர் யாவுகர் குள்ளர்
மெய்ப்புறு சோனகர் வெள்ளர் செப்பிடுமுலகிலுள்ளோர்
அடிதொட்டிங்கணியாரோ—மலர்பதத்தில்
முடிதொட்டும் பணியாரோ — பார்பாரினி

தத்துமவனுடல் கெட
ரெத்தமதில் முழுகிட
சுத்திவரக் கழுகிட
கொத்திவெகு புகழுடன் (கெட்)

## அழகேசன் சந்த விருத்தம்

உலகந் தனையொரு திலகந் தனையணை
இலகுந் தளபதியே
ஒளிருந் திடுமணி முடியுந் திடுமென
தடிவந் திடுமரசர்

நலமுந் திடுமணி அணிவந் தனையுடன்
நனிதந் தேகிடவே
நந்துவ லார்புரி மெத்துவ ரேந்திரன்
நாடழி காலமதால்

பலமெத் தெனதுடை குடியுற் றொருசிறை
பயனற் றேபிடித்தான்
பஞ்சைய தானவன் கொஞ்சமு மஞ்சிடா
பழியுறு வழியமைத்தான்

அலையுற் றெனதுடை நிலையுற் றிடுபடை
அதையிச் சணமதிலே
அடமொடு கூட்டித் திடமொடு நாட்டை
அடிப்படுத் திடுவாயே

அழகேசன் வசனம்: தளபதியே! வரேந்திர மன்னவனது வலாரி புரிக்குச் சென்று அவனைச் சிறைப்பிடித்துவரப் படைகளுடன் புறப்பட்டு வருவீராக.

## அழகே சேனதிபதி பாட்டு (வாருஞ்சே...)

இராகம் : முகாரி தாளம் : அடதாளசாப்பு

தீரரே ரணசூரரே யுடனே சேரும் சேரும்—பொரு
தாரமாமணி ஒரவாகையுற வாரும் வாரும் – உங்கள்
வன்திறல் காட்டி ஒன்றிறல் ஓட்டி
மன்பலகோட்டி என்திறல் நாட்டி

மருவிக்கரியினங்கள் விரவி வரினுமவை
வெருவிக்கலங்கிடவே விரைவிற்சமர்தொடுத்து
மாரியெனத்துளிகள் சோரியொழுகிடவே
பாரில் பகைவருடன் மேவிச்செயல்பெறவே.

## வரேந்திரன் விருத்தம்

அண்டர்கள் மகுடந் தன்னை
அடர்ந்திடு களத்தில் நின்று
துண்டென வீழ்த்தி வாகை
சூடிடுங் கற்பித் தாமே
மிண்டனு மழகே சன்தான்
மிளிருறு மெங்கள் கோட்டை
தண்டுடன் வளைந்தான் நீங்கள்
சடுதிபோர் முனைந்தி டீரே

வரேந்திரன் வசனம்: சேனைத்தலைவனே! அழகேசமன்னனும் அவன் சைனியங்களும் எமது கோட்டையை வளைந்து கொண்டார்கள் தீவிரம் படைகளுடன் சென்று அவனைமடக்குவோம் வருவீர்களாக.

## வரேந். சேனாதிபதி பாட்டு (வாருஞ்சே..)

1. வீரசூரரே தீரமாயுடனே ஆரவார
மாரவே படைகாரதேசொரிதாம் - திடீர் திடீரெனப்
படங்கொண்டுதேடி இடங்கண்டுநாடி
அடங்கொண்டு மோடி திடங் கொண்டுசாடி

இண்டுமருந்துபல கொண்டு வெடியதிர
குண்டு துவக்குகளும் உண்டுபடிநெரிய
விண்டு முடிசரிய அண்டுமவர்க்கரிய
விண்டு மலர்சொரிய வெண்டுவருவமெடா

## அழகேச. சேனாதிபதி (வாருஞ்..)

2. கானமுற்றிடு வீணைபேரிகையே தகதாம் தாமென
தானையுற்றிடு சேனைவீரர்களே றெடிறெடி - நல்ல
அகடங்கொண்டிங்கு மகுடங்கள் பொங்கு
புகடங்கு மோங்கு சகடங்கடாங்கு
வடவுமலை பொர்டினும் முடிகளிடறுபட
துடியர் எனும்மிடியர் படியில் அடிசரிய
வெடிகள் கொடிகளோங்க சடுதிசடுதிதன்னில்
கொடியபடை பொருதிக் கெடிபெறுவோமே

## வரேந். சேனாதிபதி பாட்டு

3. அத்துமீறிய சுத்த வீரர்களே—படீர் படீர்என்ன
மெத்தவேயினித் தத்துவமுடனே—நொடிநொடி தனில்
கொண்டல் போலோங்கித் திண்டிறல்தாங்கி
அண்டர்களேங்கிக் கொண்டிடப்பாங்கில்
பதறிப்பரிவரிகள் கதறிக் கரிபரிகள்
உதறி உடல்பிரியச் சிதறிமதமெரிய
எதிரில் எவர்வரினும் பொருதியவருயிரை
கருதி விரைவதனில் மறுகிடல் நிலையே

அழகேச ராசா வசனம்: வலிமையுடையோனே! உன்படைப்பலத்தைப் பார்த்து விடலாம். வா போர்தொடுப்போம்.

வரேந்திர ராசா வசனம்: எதற்கும் தயார். எங்கே உன்படைப்பலத்தைக் காண்பி பார்க்கலாம்.

## அழகேச ராசா கொச்சகம்

1. ஆளிக்கொடியோ னென்னுடைய
ஆண்மையறியா தடல்பேசின்
வாளிற்கிலக்காயுன் தலையை
வரிந்து விரைந்து அரிந்திடுவேன்

## பாட்டு (அஞ்சாதெனை...)

இராகம் : ஏதுகுலகாம்போதி     தாளம் : ஆதி

கூனிக்குனதுடல் பாழுற்றிடவெறிவேன்-மூடனேபாராய்
நீளுற்றிடுபுகழ் தாளுற்றடிதொழடா-நீசனேயிப்போ

## வரேந்திரன் கொச்சகம்

2. நெஞ்சந்துணிவாய் என்முன் வரவே
நீசனுனையன்றி வேறெவரே
விஞ்சுமுனதாண்மை பஞ்செனவே
விண்ணிலெழ நான் செய்திடுவேன்

## பாட்டு

வஞ்சம் புரிந்துனை அஞ்ச அடிப் பேனடா-ஆணவங் கொண்டே
துஞ்சும் படிக்கிதோ நெஞ்சம் பதறிடவே - தூற்றுவேனுடல்

## அழகேச. மந்திரி கொச்சகம்

3. கெட்டித்தனமே உனக்கிதுவோ
செறுவந்தலை மேலுற்றதுவோ
மட்டிப்பயலே மனங்கலங்க
மழுவாலுனது சடலமதை

## பாட்டு

வெட்டியெறிந்திதோ துட்டநரிதனக்கே
தூவுவேனுடல்
கொட்டமடக்கிறேன் கிட்டியுனைப்பிடித்தே
கேடுற்றேனேபார்

## வரேந்திர. மந்திரி கொச்சகம்

4. கூனற்ற வளச்சங்கினங்கள்
கொழுத்துக்களித்துச் செழிப்புறவே
மானித்திலத்து மருப்புனைந்து
மங்காதெங்குந் தங்குபுகழ்

பாட்டு

கோனுற்றுறு புகழ் தானுற்றறிவாயோடா
வீணனே கேளாய்
வானுற் ருளிர்வய வாளுற்றுனது சிரம்
வாட்டு றேனெடா

அழகேச. சேனதிபதி கொச்சகம்

5. மெத்தத் துணிவோ மேட்டிமையோ
மேன்மையுனக்கு மிகவாச்சோ
சித்தம் கலங்க இது சணமே
சிதைத்து வதைத்து உதைத்திடுவேன்

பாட்டு

எத்திக்குறுசனர் சுத்திப் பணிவருவார்எந்தல் முன்னரே
புத்தியுனக்கேது பித்தா எமதரசைப் போற்றுவாயிப்போ

வரேந்திர. சேனதிபதி கொச்சகம்

6. கோனிற் சிறந்த திறத்தளகாய்
கொற்ற மகிப ருற்றடியில்
வானிற் சிறந்த சோதியைப் போல்
வரை சூழ்ந்திடு மெம்மரசனுடை

பாட்டு

தேனுற்றடிதொழா தானுற்றிடுமூடா
சாற்றிடக்கேளாய்
நாணுற்றுனதுடல் வீணுற்றிடவரிவேன்
விரைந்தே இதுசணம்

அழகேசன் மறு பாட்டு (செங்கோல்...)

இராகம் : மோகனம் தாளம் : அட

1. வண்டமிண்டனே வாடா தண்டு கொண்டுனேச்சாட
பண்டு முன் கெறுவோடா கொண்டு வந்தனே மூடா

கனம்மெத்திய தனம்பற்றிய அகம்முற்றிய மனம்பற்றியே
அற்பனேயுனை இப்பொழுதிலே அலறிடப்புரிவேனே.

## வரேந்திரன் மறு பாட்டு

2. வான்படைத்துணைகொண்டே தானெதிர்க்கினுமிண்டே
ஊன்கெடப்புரிதுண்டே யான்கெலிப்பதுகண்டே
வாதெடா வெகு சூதெடா சண மோதடா இனி யேதடாவழி
வஞ்சனே உயிர் துஞ்சவேயினி வெஞ்சமர் புரிவேனே

## அழகேசன் மந்திரி பாட்டு

3. ஏவலர்பலர் கூடிப் பூமலர் பதஞ்சூடி
கோவெனமதியாது கேவலம்பல பேசும்
கணிசம்உறும் மணிராசனை துணிவாகவே வசைகூறிய
கயவனுனதக மத மடங்கவே மிகுவதைபுரிவேனே

## வரேந்திரன் மந்திரி பாட்டு

4. வன்றிறலரியோடே பொன்றுளநரிதானும்
கொண்டிடுவலியாலே வென்றிடல் நினைவாமோ
பங்கமுற்றிடக் கங்கமுற்றுமே அங்கமற்றிடச் சங்கை பெற்றிடு
கருதுமுனதுயிர் பொருதுவன் செயிர் விருதுமென் வயந்தானே

## அழகேச. சேனுதிபதி பாட்டு

5. புத்தியற்றிடுமூடா மெத்தவுஞ்செறுவோடா
உத்தமக்குடியான சத்தியந் தவருத
சுத்தனைச் சிறைவைத்துமே பழி இத்தரைதனில்வந்ததேஇழி
யீனனுனதுயிர் போகவே தரை நானே புரிகுவேன் பாராய்

## வரேந்திரன் சேனுதிபதி பாட்டு

6. மண்டலம்புகழ் இன்றே அண்டலர் களிகொண்டே
வண்டலம்பழிபூண்டே வண்டனே பழிகொண்டே
பாங்கறிந்திடாத் தீங்கனே விரைந்தேங்குறச் சிர மீங்கரிந்துமே
பதைத்திடத் துடிதுடித்திடச் சணம் நொடித்திடக் கெடிதாமே

## அழகேச இராசா பாட்டு

7. பூட்டையுற்றிடு மெள்ளு ஒட்டங் கொள்ளுமோ சொல்லு
வேட்டுவலேயுறு புள்ளு காட்டிலேகுமோ விள்ளு
பூட்டியேவிலங் கோட்டியேகரம் மாட்டினேனிதோ தாட்டிகமுடன்
கடிதிலுனை துயிர் விடவே புரிகுவேன் திடமிதே யறிவாயே.

அழகேச ராசா வசனம் : வீரரே! இவன் கரத்தில் விலங்கை மாட்டி இழுத்துவாருங்கள் சீக்சரமாக.

## வரேந்திர இராசா பாட்டு (எந்தன் மதி...)

இராகம் : நீலாம்புரி தாளம் : ஆதி

1. சங்கரா சிவனே சம்போ - சதி
இப்படி விதித்தாய் முன்போ

2. துங்க நகர் தன்னைத் தோற்றே - துயர்
நான் கலங்க வைத்தா யேற்றே

3. பொன்முடி புனை யிறை யோன் - இனி
என்னையே வைப்பான் சிறையே

4. என்னுடொத்த மன்னவரே - மெத்த
சன்னை செய்திடு குவாரே.

5. பொங்கு சிறை யாகினேனே - பெரும்
சங்கை குலைந்தேனே நானே.

6. திங்கள் சடை மீதணிந்த — நிறை
ஐங்கரனே அஞ்சல் தீரே.

## அழகேசன் - வரேந்திரன் பாட்டு (ஆளிப்)

இராகம் : பைரவி தாளம் : ஆதி

அழ: கலைசுற்று நிலவுலகதனிலே
நிலைபெற்ற பலபடையணிபுகழ்
விலையுற்ற எனதுடைகுடிதனைச்
சிறைபிடித்ததேனு

வரே : அண்ணலே யுமதுறு வலிதனை
திண்ணமே யறிந்திலனுதலிவ்
வண்ணமே புரிந்தனல்லால்பழி
எண்ணவில்லைத்தானே

அழ : மனமொத்தே எனதுடைதூதனை
சினமெத்த வசைமொழிபேசினுய்
புவனத்தே யுனதுடைசிரமதை
ககனத் தெழச்செய்வேனே

வரே : புரசனே விரைசெறிமருமலர்
முரசனேயறிவிலான் சிறுபிழை
பரசனே வாகையணிந்திடு
அரசே பொறுத்தாளே

அழ : நீளுற்றே கரமதி லெனதுறை
வாளுற்றே உனதுறு சிரமதை
பாளுற்றே மறமதைப் போக்கியே
கூளிக் கெறிவேனே.

வரே : அஞ்சினேன் மருமலர்ப்பதமதைக்
கெஞ்சினேன் வெஞ்சினம் மிஞ்சிடா
தஞ்சமே தந்திடலே யெனக்
கஞ்ச லெனத் தானே

அழ : திறமற்றே மறமதுபுரிந்துமே
அறமற்றே குறையது நிறைந்துள
கறுவித்தே யுனதுடை சிரமதை
மறுகித் திடச் செய்வேன்

வரே : மங்கிடா மணி முடி சிரசணி
துங்கனே யெனதுடைகுறைதனை
புங்கவன்நாமமதால் பொறுத்
திங்கெனைக் காத்தாளே

## அழகேச ராசா ஆசிரிய விருத்தம்

வன்குணம் மிகுந்த வலாரிமா புரியின்
வரேந்ரனே யுரைத்திடக் கேளாய்
வரைவுள வெனது குடிகளிற் சிறையே
வலுவந் தமாகவே பிடித்தும்

நண்புட னுனக்கு நவில்முக மனுப்ப
நாடிநீ மதித்திடா தன்றி
நவின்றிடு மொழியால் நரபதி யெனக்கே
நாவினல் புகலரி தான

இன்னலே புரிந்தாய் எழில்படை பொருதி
ஏற்றஉன் சேனையுந் தோற்ருய்
எம்பரன் யேசு அன்பது நினைந்து
ஏற்றவுன் குறையது பொறுத்தேன்

இந்நகர் தன்னின் இடர்தனைக் களைந்து
இடுதிறை எந்தனுக் கீந்து
இனிமுறை யாக இருந்தர சியற்றி
இன்புடன் வாழ்ந்திடு வாயே

அழகேச ராசா வசனம்: வரேந்திரமன்ன! எம்பிரான் யேசுவின் கருணையை வேண்டி உனக்கு மன்னிப்பீந்தேன். இன்றுமுதல் உனது குட்டிகளும் நீயும் அவர் நாமத்தைத் தோத்திரித்து வருவதுடன் கிரம முறைதவருது கப்பங் கட்டிவருவாயாக. இப்போது எனது நாட்டுப் பிரசையாகிய தேவதாசனைச் சிறைச் கூடத்தால் அழைத்து வரும்படி தெரிவிப்பாயாக.

வரேந்திரன் வசனம்: தங்கள் சித்தப்படியே ஆகட்டும் மன்னவர் மன்ன.

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களமானந்தானந்த
மங்களம் மங்களம் மங்களம்

1. மங்களம நாதிபிதா
மேவு சுதனனவர்க்கும்
எங்குமே நிறைந்திலங்கும்
இஸ்பிரீத்து சாந்துவுக்கும் —மங்களம்..

2. மங்கையன்னை மாமரிக்கும்
மா விரத்தர் சூசையற்கும்
துங்கனுஞ் சுவக்கீனுக்கும்
தூயசந்தானு நாயகிக்கும் —மங்களம்....

3. இத்தரை நவமியற்றும்
ஏந்திழை திரேசாவுக்கும்
மெத்து நவமே புரியுஞ்
சுத்தஅந்தோனியார்க்கும் —மங்களம்...

4. உத்தமர் சஞ்சுவானியர்க்கும்
மெத்து சந்தியோகு வுக்கும்
சுத்த பேதுரு வானவர்க்கும்
தூயபுதுமைத்தாய் மரிக்கும் —மங்களம்...

5. கற்புநெறியே தவருக்
கன்னிகாஸ்திரி மார்களுக்கும்
பற்றறும் விறதர்மார்க்கும்
பூவுலகாள் யோட்சுவுக்கும் —மங்களம்

6. சீருலவும் ரோமையுற்ற
சீர்த்தியுறு பாப்புவுக்கும்
பாருலவு மேற்றாணிமார்
பங்குக்குரு மார்களுக்கும் —மங்களம்...

7. மெத்திய வதைகளேற்று
நித்திய கதியடைந்த
சுத்த மரி தாசனுக்கும்
சூழ்ந்துபாடி யாடினோர்க்கும் —மங்களம்..

முற்றும்.

# மரியதாசன் நாட்டுக் கூத்து

## 1932ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16ஆந் திகதி

### யாழ்ப்பாணத்துச் சுண்டிக்குளி

### அச்சக ஒழுங்கையில் மேடையேறியபோது

### நடித்த நடிகர்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | வரேந்திரன் கட்டியன் 1. | திரு. | செ. கிறிஸ்தோப்பர் இராசா |
| 2. | ,, ,, 2. | ,, | இராசமணி |
| 3. | வரேந்திர இரர்சன் (முன்) | ,, | வே. யோண்பிள்ளை |
| 4. | ,, மந்திரி | ,, | வ. முத்தையா |
| 5. | ,, சேனாதிபதி | ,, | ச. செல்வரட்ணம் |
| 6. | ,, தானாபதி (மரிய)1 | ,, | வ. செல்லையா |
| 7. | தானாபதி மனைவி | ,, | கி. வயித்தியாம்பிள்ளை |
| 8. | தோழி | ,, | (செ. கிறிஸ்தோப்பர் இராசா) |
| 9. | தேவதாசன் [1] | ,, | ம. பொன்னுத்துரை |
| 10. | பசாசு | ,, | எம். வி. யோசேப்பு |
| 11. | தானாபதி (மரியதாசன்) 2 | ,, | ம. பொன்னு |
| 12. | குரு | ,, | அ. செல்லையா |
| 13. | தேவதாசன் [2] | ,, | பே. பங்கிராஸ் |
| 14. | வரேந்திர இராசன் (பின்) | ,, | ம. யோசேப்பு |
| 15. | சம்மனசு | ,, | த. செபஸ்தியாம்பிள்ளை |
| 16. | சேவகர் 1 | ,, | வ. செல்லையா |
| 17. | ,, 2 | ,, | த. சூசைப்பிள்ளை |
| 18. | தானாபதி (மரியதாசன்) 3 | ,, | கா. மனுவேற்பிள்ளை அப்பையா |
| 19. | தேவதாசன் [3] | ,, | க. யோசேப்பு |
| 20. | அழகேசன் கட்டியன் | ,, | பே. செல்வம் |
| 21. | அழகேச இராசன் | ,, | வ. சவிரிமுத்து |
| 22. | ,, மந்திரி | ,, | (எம். வி. யோசேப்பு) |
| 23. | ,, சேனாதிபதி | ,, | ச. லூயிஸ் |
| 24. | கவுண்சல் தலைவன் | ,, | (பே. பங்கிராஸ்) |
| 25. | அழகேசன் தூதுவன் | ,, | (இராசமணி) |

# நாட்டுக்கூத்து நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | எஸ்தாக்கியார் நாட்டுக்கூத்து | 1-50 |
| 2. | விசய மனோகரன் நாட்டுக்கூத்து | 3-00 |
| 3. | மரியதாசன் நாட்டுக்கூத்து | 3-00 |
| 4. | தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்து | 3-00 |

ஆசீர்வாதம் அச்சகம் புத்தகசாலை
32, கண்டி வீதி
யாழ்ப்பாணம்

தொலை பேசி : 274